தமிழீழ ஆவணக் காப்பகம்

மாவீரர் நாள் 2001

# எரிமலை

நவம்பர் 2001

## உலகெங்கும் நினைவுகூரப்பட்ட மாவீரர்கள்



சுவிஸ்



டென்மார்க்



கனடா



கனடா



ஜேர்மனி





பிரான்ஸ்



## தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர்நாள் உரை.



நெதர்லாந்து



அவுஸ்திரேலியா

தேசிய நினைவெழுச்சி நாள்



பிரித்தானியா





நோர்வே

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்









# அக்கரைப்பூக்கள்

வணக்கம்.
தமிழீழத்தில், தமிழர்களின் இன்ப துன்பங்கள், அங்கு நடக்கும் போராட்டச் செய்திகளை விபரமாகத் தெரிந்துகொள்ள எங்களுக்கு உதவுவது எரிமலை.

அ.சுந்தரமூர்த்தி,
விருதுநகர்,
தமிழ்நாடு

---

வணக்கம்.
பார்க்க முடிந்தது. உலகமே ஆனந்தப்பட, உற்சாகமாகஇருக்க இந்தத்தரணியில் தமிழன் படும்பாட்டை எண்ணிவேதனையடைந்தேன். அக்கராயனில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள வரலாற்றுமையம் மண்ணில் மறைந்துள்ள பல தகவல்கள் வெளிவரும் என்பதில் பெரு மகிழ்வேயாகும்.

அச்சுதமேனன்,
தமிழகம்

---

எரிமலை குடும்பத்துக்கு,
எரிமலை இதழை கடந்த இரு வருடங்களாக படித்து வருகிறேன். விடயத்திலும் வடிவத்திலும் தரமுயர்ந்து செல்லும் எரிமலை மேலும் வளர வாழ்த்துக்கள்.

நா.ரஞ்சிதன்,
பாரிஸ்,
பிரான்ஸ்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எரிமலை

# உள்ளே...


## கட்டுரைகள்

எல்லை காக்கும் இல்லங்கள் பக்கம் - 20

பவள இதழில் வெளிச்சம் பக்கம் - 26

காலத்தினூடு நிகழும் பயணம் பக்கம் - 28

தூது பக்கம் - 38

## அணையாத தீபம்

லெப்டினன்ட் சங்கர் பக்கம் - 10

## கவிதை

இயற்கையும் இன்றிங்கு...
-சு அரசண்ணா. பக்கம் - 18

போராளிகளின் படைப்புக்கள் பக்கம் - 33

பலஸ்தீனக் கவிதைகள் பக்கம் - 37

போரும் வாழ்வும்
-வளவை வளவன் பக்கம் - 40

காலத்தின் கருவூலங்கள்
ஆதிலட்சுமி சிவகுமார் பக்கம் - 44

## சிறுகதை

மனவெளி ஓவியம்
-பிரதீகுமரன் பக்கம் - 34

நிதானம் பக்கம் - 42

## தொகுப்பு

பதிவுகள்...... பக்கம் - 45

நினைவுக்குறிப்பு.... பக்கம் - 46

மீள்பார்வை பக்கம் - 47

கண்கள் கூறும் வார்த்தைகள் பக்கம் - 48

12 உலகெங்கும் நினைவு....




22 25 வருட ஆயுதப்போர்....



30 ஐந்து வருடப் போர்....





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






# தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவுசெய்யும் தீர்வுத்திட்டம் குறித்து பேச்சுக்களில் பங்குபற்றத் தயாராக இருக்கிறோம்

"தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் அபிலாசைகளை நிறைவுசெய்யும் அரசியல் தீர்வுத்திட்டம் குறித்து சிங்கள அரசுடன் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்கு எமது இயக்கம் தயாராக இருக்கிறது. நாம் சமத்துவமாக, சுதந்திரமாகத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற தகைமையுடன் அவர்களது உண்மையான போராட்டச் சக்தி என்ற அங்கீகாரத்துடன் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதாயின் எமது இயக்கம் மீது விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படவேண்டும். தமிழீழ மக்களது ஒட்டுமொத்தமான அபிலாசையும் இதுதான். இதனை சிங்கள அரசியற் தலைமைகளும் சர்வதேச சமூகமும் புரிந்துகொள்ளவேண்டும்"

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு **வே.பிரபாகரன்**
அவர்கள்

(2001ஆம் ஆண்டு மாவீரர்நாள் உரையிலிருந்து...)



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




**கலை பண்பாட்டு**

**அரசியல் சமூக ஏடு**

★

இருபதாம் ஆண்டு

நவம்பர்

**2001**

திருவள்ளுவர் ஆண்டு 2032

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

C/O T.C.C-France,

341, Rue des Pyrenees,

75020 Paris.

Tel: 01 - 43 58 11 42

Fax: 01 - 43 58 11 91

e.mail:editor@erimalai.com

# தலைவாசல்

## போரா - சமாதானமா?

1977 இனக்கலவரங்களின்போது அடக்கப்பட்டு - துன்புறுத்தப்பட்டு வந்த தமிழ் மக்களிடம் போர் வேண்டுமா சமாதானம் வேண்டுமா எனக் கொடூரமாக கேள்வி எழுப்பியவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா. சிங்கள இனவாத அமைப்பின் சக்தி மிக்க குரலாக அது விளங்கியது. பலவீனமானவர்களாக நாங்களும், பலமானவர்களாக அவர்களும் விளங்கிய காலம் அது. இரு தசாப்தங்களுக்குப் பின்னர், தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் மாவீரர் நாள் 2001 உரையில், சிங்களத்திற்குப் பதிலளித்துள்ளார். பலம் பெற்று - நிமிர்ந்தெழுந்த தமிழீழத்தின் குரலாக போரா - சமாதானமா என்பதை வாக்குகள் மூலம் தீர்மானிக்கும்படி சிங்கள மக்களைக் கோரியுள்ளார். சந்திரிகா முன்வைத்த போர் என்கின்ற தேர்வுக்கும், ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த பேச்சுக்கள் என்கின்ற பாதைக்கும் இடையேயுள்ள வேறு பாடுகளை தலைவர் முன்நிறுத்தினார். அதேவேளையில், பரந்த பார்வையில், சிங்கள மக்கள் தீர்க்கமாக தமது போக்கைத் தீர்மானிக்க வேண்டிய காலகட்டம் உருவாகிவிட்டது என்பதை அவர் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

தேசியத் தலைவரின் இவ்வறிவிப்பானது, சிங்கள - தமிழீழ தேசங்களுக்கு இடையேயான உறவில் ஒரு முடிவான நிலை ஏற்பட்டு, தமிழீழ மக்கள் சுதந்திரமானவர்களாகவும், வளமானவர்களாகவும் வாழ்வதற்கு ஏற்புடைய தீர்வு பற்றி முடிவெடுக்கும் காலம் கனிந்து வருவதையும் வெளிக்காட்டுகின்றது. எதிரியின் இராணுவ மூர்க்கத்தையும், அரசியல் குதர்க்கத்தையும், இராஜதந்திர சித்து விளையாடல்களையும் நேருக்கு நேர் எதிர்கொள்ளும் முதிர்ச்சியை பெற்றுக் கொண்ட தமிழீழத் தேசியத் தலைமை, சிங்களத்தின் அக, புறச் சூழலை கணித்தே இவ்வறிவிப்பை முன்வைத்துள்ளது என விபரிக்கப்படுகின்றது. சிதைந்து செல்லும் எதிரியின் சமூக - பொருளாதார - அரசியல் அமைப்பு, தனது தவறுகளை இலகுவாக ஏற்றுக்கொள்ளும் என நம்புவது அறிவுபூர்வமானதல்ல. எனினும், உலக சமூகத்தின் மத்தியில் இன்னமும் வெளிக்காட்டப்படும் அத்தகைய நம்பிக்கையுடன் நேரடியாக முரண்படுவது தமிழீழ தேசிய இலட்சியத்தினை அனைத்துலகப் பரப்பில் பலவீனப் படுத்திவிடும் சூழல் நிலவுகின்றது. மாறாக, இந்த எதிர்பார்ப்பை உலக சமூகத்தின் பார்வையின் முன்னே வைத்து பரிசீலித்து சிங்கள அமைப்பு எத்தகைய புரையோடிப்போன சூழலில் இயங்குகின்றது என நிரூபிக்கும் வாய்ப்பாக தமிழீழத் தேசியத் தலைவர் இதனைப் பயன் படுத்துகின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மறுபுறம், தலைவர் தனது மாவீரர்நாள் உரையில் இதனை சிங்களத்திற்கு வழங்கிய இறுதிச் சந்தர்ப்பமாகவும் அறிவித்துள்ளார். அமைதிக்கான அழைப்பு வெற்றிபெறுமாயின் ஐ.தே.க பாராளுமன்றத்தையும், சு.க சனாதிபதி மாளிகையையும் ஆக்கிரமிக்கும் சூழல் ஏற்படும். அதாவது இரு பிரதான சிங்களக் கட்சிகளும் கூட்டாக ஆட்சிசெய்வார்கள். கடந்த காலங்களில் தமது தேர்தல் கணிப்புக்களைக் காரணம் காட்டி தமிழர் விடயங்களை இழுத்தடிக்கும் இரு தரப்பும், இப்போது கூட்டாக ஆளும் சூழலில், நாங்கள் இறுதியான - முடிவான இணக்கப்பாட்டை எதிர்பார்க்கின்றோம். இல்லையெனில் தமிழீழ மக்கள் பிரிந்து செல்வதற்குரிய இறுதியான நிலையினிற்கு தள்ளப்படுவார்கள் என்பதையும் எமது தேசியத் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

எனவே, சிங்களம் போரா - சமாதானமா வாழ்வு என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.



www.tamileelamarchive.com

# 2001ஆம் ஆண்டு தமிழீழ மாவீரர்நாளை முன்னிட்டு தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் ஆற்றிய உரை

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
27 நவம்பர் 2001.

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே,

இன்று மாவீரர் நாள்.

விடுதலை வேண்டிக் களமாடி வீழ்ந்த எமது வீரப் புதல்வர்களை நாம் எமது நினைவில் உயிர்ப்பித்துப் பூசிக்கும் நன் நாள்.

தமிழ் இனத்தின் தேசிய வாழ்வு நிலைப்பதற்காகத் தமது சொந்த வாழ்வை ஈகம்செய்த சுதந்திர வீரர்களுக்கு நாம் சிரந்தாழ்த்தி வணக்கம் செலுத்தும் புனித நாள்.

விடுதலைக்காக எமது இயக்கம் கொடுத்த விலை அளப்பரியது. உலகத்தில் எந்த ஒரு விடுதலை இயக்கமும் புரியாத அற்புத சாதனைகளை நாம் ஈட்டினோம். ஒப்பற்ற ஈகங்களைப் புரிந்து தியாகத்தின் சிகரங்களைத் தொட்டோம். இதனால் மானிடத்தின் விடுதலை வரலாற்றில், ஒரு மகத்துவமான இடத்தைத் தேடிக்கொண்டோம். எமது இனத்தின் வீரத்திற்கும் விடுதலை உணர்விற்கும் பெருமை சேர்க்கும் இம் மகோன்னதநிலைக்கு எம்மை இட்டுச் சென்றவர்கள் எமது மாவீரர்களே.

மனித நாகரீகம் தோன்றிய காலந்தொட்டே மனிதர்கள் விடுதலைக்காகப் போராடி வருகிறார்கள். அடக்குமுறைக்கும் அநீதிக்கும் எதிராக, யுகம் யுகமாக விடுதலைப் போராட்டங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. உலகில் அநீதியும் அடக்குமுறையும் தொடரும்வரை விடுதலைப் போராட்டங்களும் தொடரும். ஒடுக்கப்படும் மானிடத்தின் விடுதலையை நோக்கிய பயணமாகவே மனித வரலாறு நகர்கிறது. ஒடுக்கப்படும் சமுதாயங்களிலிருந்தே வரலாறு படைக்கும் சக்திபெற்ற அபூர்வ மனிதர்கள் பிறக்கிறார்கள். எமது சமூகத்திற் பிறந்த அந்த அபூர்வ மனிதர்கள்தான் எமது மாவீரர்கள்.

இன்றைய உலக ஒழுங்கு மாறிவருகிறது. சர்வதேச அரசியல் உறவுகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்துவருகின்றன. மனித உரிமைப் போராட்டங்கள் சம்பந்தமாக உலகின் பார்வையும் மாறி வருகிறது. அரசியற் கோட்பாடுகளிலும் தார்மீகக் கொள்கைகளிலும் அடிப்படை மாற்றங்கள் நிகழ்ந்துவருகின்றன. அரசியல் இலட்சியங்களை அடைவதற்காக நடத்தப்படும் வன்முறை தழுவிய உரிமைப் போராட்டங்கள் அனைத்திற்குமே உலக அரசுகள் ‘பயங்கரவாதம்’ என்ற முத்திரையைக் குத்தியுள்ளன. இந்தக் குறுகிய வரையறையின் அடிப்படையில் உண்மையான உரிமைப் போராட்டங்களுக்கும் பயங்கரவாதத்திற்கும் மத்தியிலான வேறுபாடுகள் அழிக்கப்பட்டுள்ளன. அடிப்படை அரசியற் சுதந்திரங்களுக்காகவும் சுயநிர்ணய உரிமைக்காகவும் இரத்தம் சிந்திப் போராடும் விடுதலை அமைப்புக்களின் தார்மீக அடிப்படைகளுக்கு இதுவொரு சவாலாகவும் எழுந்துள்ளது. இதுவொரு கவலைக்குரிய விடயம். இந்தப் புதிய போக்குக் காரணமாகச் சர்வதேச அரங்கில் எமது சுதந்திர இயக்கத்திற்கும் அவப்பெயர் ஏற்பட்டுவருகிறது.

பயங்கரவாதத்திற்கு எதிராகப் போர் தொடுத்து நிற்கும் உலக நாடுகள் முதலில் அரசியல் வன்முறையின் மூலவேர்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும். அரசியல் வன்முறையின் தோற்றப்பாடு பற்றி ஓர் ஆழமான பார்வை இருந்தால்த்தான் உண்மையான விடுதலைப் போராட்டங்களுக்கும் குருட்டுத்தனமான பயங்கரவாதச் செயல்களுக்கும் மத்தியில் வேறுபாடு காணமுடியும்.

எமது பார்வையில் அரசியல் வன்முறையில் இரு பரிமாணங்கள் உள்ளன. முதலாவது, ஒடுக்குமுறையாளரின் வன்முறை. இரண்டாவது, ஒடுக்கப்படுவோரின் வன்முறை. ஒடுக்குமுறையாளர் எப்பொழுதுமே ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், அரச அதிகாரம் உடையவர்கள், ஆயுதப் படைகளை வைத்திருப்பவர்கள். ஒடுக்கப்படுவோர் எப்பொழுதுமே ஆளப்படும் வர்க்கங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் சிறுபான்மைத் தேசிய இனத்தோராக, சுரண்டப்படும் மக்கள் சமூகமாக, ஏழைகளாக, அடிமைகளாக இருப்பார்கள். முதற்தர வன்முறையை அரச வன்முறை எனலாம். இரண்டாம்தர வன்முறையை அரச வன்முறைக்கு எதிரான வன்முறை எனலாம். அரச வன்முறையானது, ஒடுக்குமுறையாளரின் அடக்குமுறையான வன்முறை என்பதால் அது அநீதியானது. ஒடுக்குமுறைக்கு எதிரான ஒடுக்கப்படுவோரின் வன்முறை நீதியானது. ஏனெனில் அது அநீதிக்கு எதிராக



www.tamileelamarchive.com

# மாவீரர் நாள்



நீதியை நிலைநாட்டும் நோக்குடன் மேற்கொள்ளப்படுகிறது. இவ்விதமான வேறுபாட்டில்தான் ஒடுக்கப்படும் மக்களது வன்முறை வடிவிலான உரிமைப் போராட்டங்கள் நியாயத்தன்மை பெறுகின்றன.

வன்முறை வடிவில் உருவகம் பெறும் அரசியல் உரிமைப் போராட்டங்கள் அரச வன்முறையின் எதிர்வினையாகவே எழுகின்றன. உலக விடுதலைப் போராட்டங்களின் மூலத்தை ஆய்வுசெய்து பார்த்தால் இந்த உண்மை புரியும். தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் வரலாற்று மூலமும் அதுதான். விடுதலைப் புலிகள் இயக்கம் உதயமாவதற்கு இரண்டு தசாப்தங்களுக்கு முன்னரே இலங்கைத்தீவில் அரச ஒடுக்குமுறை தலைதூக்கியது. இனவாதத் தீயாக மூண்ட இந்த அரச ஒடுக்குமுறை படிப்படியாக வளர்ச்சிகண்டு தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கொலை வடிவம் எடுத்தது.

சிங்கள அரச வன்முறைக்கு எதிராகத் தமிழர்கள் நிகழ்த்திய அகிம்சை வழியிலான அரசியற் போராட்டங்கள் அனைத்தும் அரச வன்முறையால் அடக்கியொடுக்கப்பட்டன. அமைதிவழிப் போராட்டங்கள் அர்த்தமற்றுப் போய்விட்ட அதேவேளை, அரச அடக்குமுறை தீவிரமடைந்து இனக்கொலைப் பரிமாணம் பெற்றதால், தமிழ் மக்கள் அரச வன்முறையை வன்முறையால் எதிர்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இன்னொருவகையிற் சொல்வதானால் பேரழிவை எதிர்கொண்ட தமிழினம், தனது இருப்பிற்காக, தனது பாதுகாப்பிற்காக, ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்த வரலாற்றுப் புறநிலையில்தான் விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்றம்பெற்று அரச வன்முறைக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தது. இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடரும் எமது ஆயுத எதிர்ப்புப் போராட்டமானது இன்று தமிழரின் அரசியற் போராட்ட வடிவமாக வளர்ச்சியும் முதிர்ச்சியும் கண்டிருக்கிறது.

நாம் ஒரு தேசிய விடுதலை இயக்கம். இனவாதக் கொடுமைக்கு எதிராக, அந்நிய இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக, அரச பயங்கரவாத வன்முறைக்கு எதிராக நாம் விடுதலை வேண்டிப் போராடி வருகின்றோம். எமது போராட்டம் ஒரு தீர்க்கமான, நியாயபூர்வமான அரசியற் குறிக்கோளைக் கொண்டது. ஐ.நா சாசனங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் எமது போராட்டம் நெறிப்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் பயங்கரவாதிகள் அல்லர். மதவாத, இனவாத வெறியால் உந்தப்பட்டுக் குருட்டுத்தனமான


www.tamileelamarchive.com



வன்முறையில் ஈடுபடும் மனநோயாளர்களும் அல்லர். மனித விடுதலை என்ற உன்னத மான விழுமியத்திற் காதல்கொண்டே நாம் உயிரைக் கொடுத்துப் போராடிவருகின்றோம். நாம் சுதந்திர தாகம் கொண்ட இலட்சிய வாதிகள், நாம் சுதந்திரப் போராளிகள். கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக எம்மை அழிப்பதற்கு முயன்று தோல்விகண்ட சிங்கள அரச பயங்கரவாதிகள் எமது விடு தலைப் போராட்டத்திற்குப் பயங்கரவாத முலாம் பூசிவருகிறார்கள். இந்த அரச பயங் கரவாதிகளின் பொய்யான, விசமத்தன மான பரப்புரைகளை நம்பி உலக நாடு கள் சில எமது விடுதலை அமைப்பையும் பயங்கரவாதிகள் பட்டியலிற் சேர்த்துள்ளன. இது எமக்கு கவலையையும் ஏமாற்றத்தை யும் கொடுக்கிறது. ஆயுத எதிர்ப்பு இயக்க மாக வளர்ந்து நிற்கும் தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் வர லாற்றையும் நியாயப்பாடுகளையும் சீர்தூகிப் பாராது, இராஜதந்திர அழுத்தங்களுக்குப் பணிந்து, அவசரப்பட்டு எடுக்கப்பட்ட இந்நடவடிக்கைகள் எதிர்மறை யான விளைவுகளையே ஏற்படுத்தும். குறிப் பாகச் சிங்கள இனவாத ஆட்சியாளர்களுக்கு இவை ஓர் தவறான தகவலைக் கொடுக்கும். அவர்களது விட்டுக் கொடுக்காத கடும் போக்கை மேலும் கடுமையாக்கும். அத்தோடு அவர்களது இராணுவ அடக்குமுறைக் கொள் கைக்கும் ஊக்கமளிப்பதாக அமையும். ஒட்டுமொத்தத்தில் மேற்குலக நாடுகளின் இந் நடவடிக்கைகள் சமாதான வழிமூலமான தீர்விற்குக் குந்தகம் விளைவித்து, தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை மேலும் சிக்கல டையச் செய்யும்.

பயங்கரவாதத்திற்கு எதிராக மேற்குல கம் தொடுத்துள்ள போரில் ஐ.நாவில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசுகளும் அணி சேர்ந்து நிற்கின்றன. இனவாத ஒடுக்கு முறைக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் புகழ்போன பல அடக்குமுறை அரசுகளும் இந்தச் சர்வதேசக் கூட்டணியில் இணைந்து நிற்கின்றன. அதாவது, காவற்துறையினருடன் கொலைக்குற்றவாளிகள் கைகோர்த்து நிற் பதுபோல. நாம் இங்கு சிறீலங்கா அரசை மட்டும் குறிப்பிட விரும்புகிறோம். இனக் கொலைப் பரிமாணத்தில் மனித உரிமை மீறல்களை நடத்தி, உலக சாதனை ஈட்டி யிருக்கும் இந்தப் பயங்கரவாத அரசு, உலகப் பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேசக் கூட் டணியில் இணைந்து நிற்கிறது. இன்றைய சர்வதேச ஒழுங்கமைப்பில் இது ஓர் ஆபத் தான போக்கைக் குறித்துக்காட்டுகிறது. உலக ரீதியாக அரச அடக்குமுறைக்கு ஆளாகி நிற்கும் மக்கள் சமூகங்களின் நியாயமான உரிமைப் போராட்டங்களுக்கு இப்புதிய போக்கானது ஓர் அச்சுறுத்தலாக அமைகிறது. பயங்கரவாத வன்முறைக்கு எதிராகப் போர்தொடுத்து நிற்கும் மேற்குலக நாடுகளின் ஆவேசத்தையும், அச்சங்களை யும், நிர்ப்பந்தங்களையும் எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. உண்மையான பயங்கர வாதிகளை இனங்கண்டு தண்டிக்கும் நோக்



www.tamileelamarchive.com

# மாவீரர் நாள்

குடன் சர்வதேச உலகம் மேற்கொள்ளும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை நாம் வரவேற்கிறோம். ஆயினும், அதே வேளை தீவிரவாத வெறியில் எழும் குருட்டுத்தன மான பயங்கரவாதத்திற்கும், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் முன்னெடுக்கப் படும் சுதந்திரப் போராட்டங்களுக்கும் மத்தி யிலான வேறுபாட்டினை விளக்கும்வண்ணம் மேற்குலக சனநாயக நாடுகள் பயங்கரவாதம் என்ற பதத்திற்கு விரிவான, விளக்கமான வரையறையைக் கொடுப்பது அவசியமாகும். உள்நாட்டில் இனக்கொலைப் பரிமாணத்திற் கொடுமைகளை இழைத்துவரும் அடக்கு முறை ஆட்சியாளர்களின் அரச பயங்கர வாதத்தை சர்வதேச உலகம் அலட்சியம் செய்யமுடியாது. இந்தப் பயங்கரவாத அடக்கு முறை அரசுகளை இனங்கண்டு தண்டிக்க உலகம் முன்வரவேண்டும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு மக்கள் இயக்கம். விடுதலைப் புலிகள் வேறு, எமது மக்கள் வேறு அல்லர். எமது மக்களும் நாமும் ஒன்றாகப் பிணைந்து, ஒன்றுபட்ட சக்தியாக, ஒரே இலட்சியப் பாதையில் எமது தாயகத்தின் விடிவிற்காகப் போராடி வருகிறோம். எமது இயக்கத்தை எமது மக்களிடமிருந்து அந்நியப் படுத்தி எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிடச் சந்திரிகா அரசு வஞ்சகமான வழி களைக் கையாண்டது. எம்மைப் பயங்கர வாதிகளாகப் பிரகடனம் செய்து, எமது இயக் கம் மீது தடையை விதித்தது. இதனைத் தொடர்ந்து சந்திரிகாவும் அவரது வெளி விவகார அமைச்சரான திரு. கதிர்காமரும் எமது இயக்கத்தையும் தமிழரின் விடுதலைப் போராட்டத்தையும் பயங்கரவாதப் பூதமாகப் பூச்சாண்டி காட்டிச் சர்வதேச அரங்கில் தீவிர பரப்புரைப் போரைத் தொடுத்தனர். இதன் விளைவாக அமெரிக்காவும் பிரிட்டனும் அத னைத் தொடர்ந்து சமீபத்தில் கனடாவும் எமது விடுதலை அமைப்பை சர்வதேச பயங்கர வாதிகளின் பட்டியலிற் சேர்த்துள்ளன.

நாம் ஒரு பயங்கரவாத அமைப்பு அல்ல என்பதும் நாம் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் ஒரு சுதந் திர இயக்கம் என்பதும் எமக்குப் பின்னால் எமது மக்களின் ஏகோபித்த ஆதரவு அணி திரண்டு நிற்கிறது என்பதும் எம்மைத் தடைவிதித்த இந்நாடுகளுக்கு நன்கு தெரி யும். அத்தோடு, தமிழரின் தேசிய இனப்பிரச் சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காணப் படவேண்டும் என்பதும் சிறீலங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் பேச்சுவார்த்தை மூலம் இணக்கப்பாடு காணவேண்டும் என்பதும் இந்நாடுகளின் நிலைப்பாடாக இருக்கிறது. இந்நிலைப்பா டானது ஓர் உண்மையைப் புலப்படுத்துகிறது. அதாவது, தமிழீழ மக்களின் அரசியற் பிரதி நிதிகளாகவே விடுதலைப் புலிகளை இந் நாடுகள் கருதுகின்றன. அப்படி என்றால் ஏன் எமது அமைப்பைப் பயங்கரவாத இயக்கமாக இந்நாடுகள் முத்திரை குத்த வேண்டும்? எனவே, இந்நடவடிக்கையானது எந்தவகை யிற் சமாதான ரீதியான ஒரு தீர்வை ஏற்படுத்த ஏதுவாக அமையும் என்பது எமக்குப் புரிய வில்லை. சிறீலங்கா அரசாங்கம் எம்மீது விதித்துள்ள தடையை நீக்கி, எமது இயக்கத் தைத் தமிழீழ மக்களின் உண்மையான, சட்ட ரீதியான அரசியற் பிரதிநிதியாக ஏற்றுக்கொள் ளாத பட்சத்தில் நாம் சமாதானப் பேச்சு வார்த்தைகளிற் பங்குபற்றப் போவதில்லை யென்பதே எமது நிலைப்பாடு. இந்த நிலைப் பாட்டில் நாம் மிகவும் உறுதியாக இருக்கி றோம். நோர்வே அரசிடமும் நாம் இதனை திட்டவட்டமாக கூறியிருக்கிறோம்.விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டால்தான் இலங்கைத்தீவில் சமாதானம் தோன்றுவதற்கு வாய்ப்புண்டு. இப்படியான சூழ்நிலையிற் சிறீலங்கா அரசின் அழுத்தத்திற்கு இசைந்து மேற்குலக நாடுகள் எம்மீது தடைகளை இறுக்கினால் அது சமாதானப் பேச்சிற்கும் சமாதான வழியிலான தீர்விற்கும் வழிகோலப் போவதில்லை. மாறாக, சமாதானப் பேச்சுக் குப் புலிகள் மீதான தடை நீங்கவேண்டும் என்ற எமது மக்களின் கோரிக்கைக்கு, இந்நட வடிக்கைகள் மேலும் வலுச்சேர்க்கும்.

முழு அளவிலான போர் நெருக்கடியாக வெடித்துள்ள தமிழரின் தேசிய இனப்பிரச் சினை, அடிப்படையில் ஓர் அரசியற் பிரச் சினை என்பதை நாம் அறிவோம். இப்பிரச் சினையைச் சமாதான வழிமுறைகள் மூலமா கத் தீர்க்கலாம் என்ற நம்பிக்கை இன்னும் எம்மிடம் முற்றாக இடிந்துபோகவில்லை. சிங்கள அரசியல் தலைமைகள் உண்மை யாக, உறுதியுடன் மனம்வைத்தால் சமாதான மும் இணக்கப்பாடும் ஏற்படும் சாத்திய முண்டு.

இலங்கைத்தீவுக்கு சுதந்திரம் கிடைத்து ஐம்பத்திமூன்று ஆண்டுகள் ஆகியும் சிங்கள அரசியல் தலைமைகள் இன்னும் இனவாத சித்தாந்தச் சகதிக்குள்ளிருந்து வெளிவர வில்லை. இதனால் தமிழரின் தேசிய இனப் பிரச்சினையை யதார்த்தமாக, புறநிலை நோக்குடன் அணுகித் தீர்க்கும் மனப்பக்கு வம் அடையவில்லை. அடக்குமுறையாலும் ஆயுதப் பலத்தாலும் தமிழரின் பிரச்சினைக் குத் தீர்வுகாண முடியும் என்ற மனநிலையே சிங்கள அரசியல் உலகில் மேலோங்கி நிற்கிறது. இதன் காரணமாக எந்தவொரு சிங்களக் கட்சியிடமும் தமிழரின் பிரச்சி னைக்கு நிரந்தரத் தீர்வுகாணும் அணுகுமு றையோ, கொள்கைத் திட்டமோ இருக்க வில்லை. இந்த உண்மை சர்வதேச சமூகத் திற்குத் தெரியாததல்ல. தமிழர் பிரச்சினைக் குச் சமாதான வழிமூலமான தீர்வை வலி யுறுத்தும் உலக நாடுகள், அதேசமயம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் பலவீனப் படுத்தும் சிறீலங்காவின் இராஜதந்திர நகர்வு களுக்கும் போர் முயற்சிகளுக்கும் முண்டு கொடுத்து உதவத் தவறவில்லை. உலக நாடுகளின் இந்த விசித்திரமான அணுகு முறையும் தமிழரின் பிரச்சினை தீராது இழு படுவதற்கு ஒரு காரணம் எனலாம்.

சமாதானத்தின் கதவுகளை நாம் தட்டிய வண்ணமே இருக்கிறோம். ஆனாற் சந்திரிகா அரசு சமாதானத்தின் கதவுகளைத் திறக்க மறுக்கிறது.

சென்ற வருடம் நவம்பர் மாதத்தில் நாம் நோர்வேயின் தூதுவர்களைச் சந்தித்து உரை யாடியதையடுத்து சமாதான முயற்சியை முன் னெடுக்கும் நோக்குடன் நான்கு மாதங் களுக்கு ஒருதலைப்பட்சமாகப் போர்நிறுத்தம் செய்தோம். சந்திரிகா அரசு எமது அமைதி முயற்சியைக் கேலிசெய்து நிராகரித்ததுடன் ஆத்திரமூட்டும் இராணுவ நடவடிக்கை களைத் தொடர்ந்தது. இறுதியாக, எமது போர்நிறுத்தம் முடிவடைந்த ஒரு சில மணி நேரத்திற்குள் "அக்கினிச் சுவாலை" என்ற பாரிய படையெடுப்பை மேற்கொண்டது. இப்படையெடுப்பை முறியடித்து நாம் நடத் திய மூர்க்கமான எதிர்த் தாக்குதல் சிங்கள அரசுக்கு ஓர் உண்மையைப் புலப்படுத்தியது. அதாவது, விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்படமுடியாத பலம்பொருந்திய சக்தியாக இருக்கிறது என் பதை உணர்த்தியது.

ஆட்பலத்தோடும் ஆயுதப் பலத்தோடும் நாம் வலுமிக்க போராட்ட சக்தியாக வளர்ச்சி கண்டு நின்றபோதும் சமாதான வழி முறைக்கு வாய்ப்பளிக்கும் நோக்குடன் இவ்வாண்டு தரைமார்க்கமாகப் பாரிய படை நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. நோர்வே



www.tamileelamarchive.com

அரசின் சமாதான முயற்சிகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கிவந்தோம். இந்தச் சூழ்நிலையில்தான் நோர்வேயின் சமாதானத் தூதுவரான திரு. எரிக் சுல்கைம் புலிகளுக்குப் பக்கச்சார்பானவர் எனப் பொய்க்குற்றம் சாட்டி, சந்திரிகா அரசு அவரை ஓரம்கட்டி ஒதுக்கியது. இதனை நாம் கடுமையாக ஆட்சேபித்தோம். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து நோர்வே அரசின் சமாதான முயற்சிக்குத் தடை ஏற்பட்டது. இதற்குப் பொறுப்பாளி சந்திரிகா அரசுதான்.

மிகவும் நெருக்கடியான வரலாற்றுத் திருப்பத்தில், இலங்கைத் தீவில் பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. நாம் பாராளுமன்றத்திற்குப் புறம்பாக நின்று போராட்டத்தை முன்னெடுக்கும் விடுதலை அமைப்பு என்பதால் நாம் தேர்தல்களில் அக்கறை காட்டுவதில்லை. எனினும் எதிர்வரும் பொதுத்தேர்தல் தமிழீழத்திலும் தென்னிலங்கையிலும் விடுதலைப் புலிகளை மையப் பொருளாகக்கொண்டு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் முதன்மையான பிரச்சினையாக முனைப்புற்று நிற்கும் தமிழரின் தேசிய இனச்சிக்கலானது சமாதானம், போர் என்ற இரு முரண்பட்ட துருவங்களில் அரசியல் சக்திகளை ஈர்த்துவருகிறது. சமாதானம் வேண்டிநிற்கும் சக்திகளுக்கும் சமாதானத்திற்கு விரோதமான தீவிரவாத சக்திகளுக்கும் மத்தியிலான போட்டியாக இத்தேர்தல் நடக்கிறது. எனவே, எதிர்காலத்தில் இத்தீவில் சமாதானம் நிலவவேண்டுமா போர் தொடரவேண்டுமா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு பொதுமக்களிடம் விடப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காதவரை, அவர்களது அரசியல் அபிலாசைகள் நிறைவேறாதவரை இத்தீவில் சமாதானமும் இன ஒத்திசைவும் பொருளாதார மேம்பாடும் ஏற்படப்போவதில்லை என்பதை சிங்கள மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

நாம் சிங்கள மக்களுக்கு விரோதிகள் அல்லர். எமது போராட்டமும் சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல. சிங்கள இனவாத அரசியல்வாதிகளின் அடக்குமுறைக் கொள்கை காரணமாகவே தமிழ், சிங்கள இனங்கள் மத்தியில் முரண்பாடு எழுந்து போராக வெடித்திருக்கிறது. ஆயுதப் பலத்தினால் எமது மக்களை அடிமைகொள்ள முனையும் அரசுக்கும் அரசுப் படைகளுக்கும் எதிராகவே நாம் போர் புரிந்துவருகிறோம். இந்தப் போரானது தமிழ் மக்களை மட்டுமன்றி சிங்கள மக்களையும் ஆழமாகப் பாதித்துவருகிறது என்பது எமக்குத் தெரியும். போர்வெறிகொண்ட அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைக்கொள்கையால் பல்லாயிரக்கணக்கான அப்பாவிச் சிங்கள இளைஞர்களும் அநியாயமாகக் கொல்லப் பட்டுவருகிறார்கள். அதுமட்டுமன்றி, இப்போரினால் எழும் பொருளாதாரப் பளுவை சிங்களப் பொதுமக்களே சுமக்கவேண்டியுள்ளது என்பதும் எமக்குத் தெரியும். எனவே, இக்கொடிய போருக்கு முடிவுகட்டி, நிரந்தரச் சமாதானத்தை நிலைநாட்டுவதாயின் போர்வெறிகொண்ட இனவாத சக்திகளை இனம் கண்டு ஒதுக்கிவிடுவதோடு, தமிழ் மக்களுக்கு நீதி வழங்கவும் சிங்கள மக்கள் முன்வரவேண்டும்.

தமிழ் மக்கள் தமது இனத்துவ அடையாளத்துடன் தமது சொந்த மண்ணில், வரலாற்று ரீதியாகத் தாம் வாழ்ந்துவந்த தாயக மண்ணில், நிம்மதியாக, சமாதானமாக, கௌரவத்துடன் வாழவிரும்புகிறார்கள். அவர்களது அரசியற் பொருளாதார வாழ்வை அவர்களே நிர்ணயித்துக்கொள்ள விரும்புகிறார்கள். தம்மை நிம்மதியாகத் தம்பாட்டில் வாழ விடுமாறு கேட்கிறார்கள். இதுதான் தமிழர்களது அடிப்படையான அரசியல் அபிலாசை. இது பிரிவினைவாதமோ, பயங்கரவாதமோ அல்ல. தமிழர்களது இக்கோரிக்கை சிங்கள மக்களுக்கு எந்தவகையிலும் ஓர் அச்சுறுத்தலாக அமையவில்லை. சிங்கள மக்களது அரசியற் சுதந்திரங்களையோ அல்லது அவர்களது சமூக, பொருளாதார, கலாச்சார வாழ்வையோ இக்கோரிக்கையானது எவ்வகையிலும் பாதிக்கவில்லை. தமது சொந்த நிலத்தில், தம்மைத் தாமே ஆளும் ஆட்சியுரிமையோடு வாழ வழிவகுக்கும் ஓர் அரசியல் தீர்வையே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அரசியற் தீர்வு அமையவேண்டுமென அவர்கள் வலியுறுத்துவதும் இதைத்தான்.

தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் அபிலாசைகளை நிறைவுசெய்யும் அரசியல் தீர்வுத்திட்டம் குறித்து சிங்கள அரசுடன் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்கு எமது இயக்கம் தயாராக இருக்கிறது. நாம் சமத்துவமாக, சுதந்திரமாகத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற தகைமையுடன் அவர்களது உண்மையான போராட்டச் சக்தி என்ற அங்கீகாரத்துடன் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதாயின் எமது இயக்கம் மீது விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படவேண்டும். தமிழீழ மக்களது ஒட்டுமொத்தமான அபிலாசையும் இதுதான். இதனை சிங்கள அரசியற் தலைமைகளும் சர்வதேச சமூகமும் புரிந்துகொள்ளவேண்டும்.

பரஸ்பரம் நம்பிக்கையூட்டும் ஒரு நல்லெண்ணச் சூழ்நிலையில் பேச்சுக்கள் நிகழவேண்டும். போர் நெருக்கடியும் பொருளாதாரத் தடைகளும் நீங்கிய இயல்பான, அமைதியான சூழ்நிலையில்தான் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறவேண்டுமென நாம் காலம்காலமாக வலியுறுத்தி வந்திருக்கிறோம். இந்த நிலைப்பாட்டையே நாம் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.

தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழிமூலம் தீர்வுகாணப்பட்டால் தமிழர்களும் சிங்களவர்களும் ஏனைய சமூகத்தினரும் இந்த அழகிய தீவில், ஆனந்தமாக, ஒத்திசைவாக, ஒன்றுகூடி வாழமுடியும். ஆயினும், அதேவேளை சமாதான மார்க்கமாகப் பிணக்கைத் தீர்ப்பதற்கு சிங்கள தேசம் இணங்க மறுத்தால் தமிழர்களாகிய நாம் பிரிந்துசென்று தமிழீழத் தனியரசை அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவுமில்லை.

சிங்களத்தின் அரசியலை நிர்ணயிக்கும் சக்தியாக இனவாதம் நீடித்து நிலைக்குமானால், அந்த இனவாதமே தமிழீழத் தனியரசு பிறப்பதற்கான புறநிலையை அமைத்துக் கொடுக்கும்.

தமிழீழத் தனியரசு உதயமாவது தவிர்க்க முடியாத வரலாற்று நியதியென்றால் எந்தவொரு சக்தியாலும் அதனைத் தடுத்துவிட முடியாது. என்றோ ஒரு நாள் தமிழீழத் தனிநாடு பிறந்து எமது மாவீரர்களின் கனவை நனவாக்கும்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# நெஞ்சமெல்லாம் நிறைந்தவரே....

இரா.திருமாறன்

கார்த்திகைத் திங்கள்
கார்மழை மேகம் சூழ்ந்திருக்கும்
மாலைநேரம் எங்கள் தாயகத்தில்
ஊர்முழுதும் திரண்டு வந்து – உம்
அருகில் அணிவகுத்து நின்று,
நெய்விளக்கேற்றி உமை
நினைத்து நிற்கும் அந்த
நினைவழியா நாட்கள்,
நேற்றுப்போல் இருக்கிறதே
எங்கிருந்தோ வந்தவெதிரி
எங்கள் ஊர் புகுந்தவேளை
போட்டது போட்டபடி
எல்லாமும் இடிந்து
எங்கள் உறவுகளோடு
உயிரை மட்டும் இறுகப்பற்றி வந்தோம்.
ஏதிலியாய் வாழ்க்கை....
எவரிடமும் கையேந்தவில்லை நாம்
எதற்கும் கூட கலங்கவில்லை.
ஆனால்....?
உங்கள் கல்லறைகள் மட்டும்
எதிரியவன் காலடியில்
விட்டு வந்த காரணத்தால்
வருந்தினோம், வாய்விட்டழுதோம்
பெருகியது துயரத்துடன் கண்ணீரும் தான்.
வருடா வருடம் வருகின்ற
உம் திருநாளில் அருகிருக்க,
எம் நெஞ்சமெல்லாம் ஏங்கி
நெக்குருகிப் போகிறதே.
தனிமையிலே உமை விட்டுவந்த
துயர் நினைந்து
நெக்குருகிப் போகிறதே நெஞ்சமெல்லாம்.
ஆறு வருடங்களில் முன் வந்த
அந்த ஒக்டோபர் திங்கள் 30ஆம் நாள்,
தமிழர் தம் இதயமெல்லாம்
துயரத்தில் தோய்ந்த நாள்.
எதிரி ஊர் புகுந்த சேதி
எங்கள் காதினிலே வந்ததனால்
புறப்பட்டோம் ஊர் பிரிந்து.
கண்டி வீதி வழியாக செம்மணிதான் கடந்து,
கால்போன போக்கினிலே
நடைப்பிணங்கள் போல
நாம் நடந்த காட்சி
சொல்லில் வடித்திடத்தான் முடிந்திடுமா?
குஞ்சென்றும் மூப்பென்றும்
கூனென்றும் குருடென்றும்
பேதங்கள் ஏதுமின்றி,
துயர் சுமந்தோம் அந்நாளினிலே,
ஊரிழந்து வந்தவர் நாம்
திசைக் கொன்றாய்ப் பிரிந்தோம்.
வன்னியிலும் வளங்கொழிக்கும்
பிறநாடுகளிலும்
எங்குதான் இருந்தாலும்
எம் நினைவு தாயகத்தின் காவலர்கள்
உம்முடனே...
எங்கிருக்கின்றோம்? என்பதல்ல
என்ன செய்கின்றோம்? என்பதுதான்
தமிழர் தம் கடப்பாடு.
தமிழர் தம் தலை நிமிர,
தாயகமும் கைசேர,
கரம் கொடுப்போம் நாமொன்றாய்,
மாவீரர் உம் நினைவுடனே,
உமக்கென்று எதுவும் வேண்டாது
எமக்கென்று உம்முயிர் தந்தவரே,
மறப்போமா உம்முகவரிகள்?
எங்கிருக்கின்றோம் என்பதல்ல
என்ன செய்கின்றோம் என்பதனை
நன்றாக உணர்ந்தவர்கள் நாம்.
உறுதியாய் எமக்கொன்று தெரிகிறது.
ஊர்பிரிந்த உறவுகள் – நாம்
ஊர் திரும்பும் நாள்
தூரத்தில் இல்லை.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அணையாத தீபம்



## லெப்டினனட் சங்கர்

**சத்தியநாதன்** (கம்பர்மலை- வடமாராட்சி)

ஒரு நாள் அதிகாலை, யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள ஒரு வீட்டைச் சுற்றிச் சிங்கள இராணுவம் முற்றுகையிடுகிறது. 1982ம் ஆண்டு அக்டோபர் மாதம் சாவகச்சேரியில் பொலிஸ் நிலையத்தைத் தாக்கியபோது காயமடைந்த விடுதலைப் புலிகளுக்கு அந்த வீட்டில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டதாகத் தகவல் கிடைத்ததைத்தொடர்ந்து இராணுவத்தினரால் அந்த வீடு முற்றுகையிடப்படுகிறது.

அவ்வேளையில் அங்கிருந்த ஒரு இளைஞன் முற்றுகையிட்டவர்களை நோக்கி, தான் வைத்திருந்த கைத்துப்பாக்கியால் சுட்டவாறே வீட்டுமதிலைத் தாண்டிக் குதித்து ஓடுகிறான். அவனை நோக்கிச் சிங்கள இராணுவத்தினரின் துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகத் தீர்க்கப்படுகின்றன. அப்போது அந்த இளைஞனின் வயிற்றில் ஒரு குண்டு பாய்கிறது.

படுகாயமுற்ற நிலையிலுங்கூட அவன் இராணுவத்தினரிடம் அகப்பட்டு விடக்கூடாது என்ற இலட்சிய உறுதியோடு இரண்டு மைல்தூரம் இடைவிடாமல் ஓடி தன் இயக்கத் தோழர்களின் இருப்பிடத்தை அடைகிறான். தோழர்களிடம் தன் கைத் துப்பாக்கியை ஒப்படைத்து விட்டு கீழே விழுந்து மூர்ச்சையாகிறான். வயிற்றில் ஏற்பட்ட காயத்திலிருந்து பெருமளவு இரத்தம் வெளியேறிமையினால் இரும்பையொத்த அவனது கட்டுடல் சோர்வடைகிறது.

விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலகட்டமாகையால் அப்போது அங்கு போதிய மருத்துவ வசதி ஏற்படுத்தப்படவில்லை. அவசர அவசரமாக முதலுதவிகள் செய்யப்பட்ட நிலையில் அவனை தோழர்கள் விசைப்படகுமூலம் கடல் மார்க்கமாகத் தமிழகத்துக்கு அழைத்துச் செல்கிறார்கள். இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கை, முற்றுகை இவற்றைத்தாண்டி தமிழகம் செல்ல ஒரு வாரமாகிறது. தமிழகத்தில் தலைவர் பிரபாகரனைக் கண்டு பேசும்வரை அவன் நினைவு தப்பவில்லை. இருந்தபோதிலும் வயிற்றில் ஏற்பட்ட காயத்தின் நிலை மோசமடைந்தது. அவனைப் பிழைக்கவைக்க அவனது தோழர்கள் எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

தலைவரும், தோழர்களும் கண்கலங்கி நிற்க (27-11-1982ல் அன்று மாலை 6.05 மணிக்கு) அந்த இளைஞன் இயக்கத்தில் முதற்களப்பலியாகும் பெருமையை அணைத்துக்கொள்கிறான். (இதே நாள் இதே நேரமே தமிழீழ மாவீரர் நாளாக நினைவு கூரப்பட்டு, மாவீரர் நினைவுச்சுடர் ஏற்றப்படுகிறது.)

அவன்தான் வடமராட்சி கம்பர் மலையைப் பிறப்பிடமாக கொண்ட லெப்டினனட் சங்கர். சிங்கள இராணுவப் படையினர் வலைவிரித்துத் தேடிவந்த

செ. சத்தியநாதன்.

சங்கர் அச்சம் என்றால் என்னவென்று அறியாத அடலேறு. இருபது வயதிலேயே தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட கெரில்லா வீரன். தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதற் பிரிவுத் தலைவன். ஒரு சின்னப்பிசகு என்றாலும் கையோடு வெடித்து ஆளையே முடித்துவிடக்கூடிய வெடிகுண்டுகளின் தயாரிப்புகளிலும் அச்சமில்லாது ஈடுபடுவான். அரசபடைகளின் தீவிரக் கண்காணிப்புக்கு அவன் இலக்காகியிருந்தாலும் அச்சம் எதுவுமின்றி கிராமங்களில், வீதிகளில் சாதாரணமாக உலவி வருவான். அதே நேரத்தில் சுழன்றுகொண்டிருக்கும் அவன் விழிகள் சுற்றுப்புறச் சூழ்நிலைகளை நுணுக்கமாக அவதானித்தபடியே இருக்கும். தான் அறியாது செய்யும் சின்னத் தவறும்கூட ஒரு கெரில்லா வீரன் என்ற முறையில் தனக்கும் இயக்கத்திற்கும் ஆபத்தை ஏற்படுத்தும் என்பதில் சங்கர் எப்போதும் விழிப்பாயிருப்பான். அரச படைகளின் கைகளில் சிக்க நேருமானால் எதிரிகளில் ஒருவனையாவது வீழ்த்திவிட்டுத் தானும் சாவது என்பதில் அவன் அசைந்தது கிடையாது. விடுதலைப்போராளிகள் எனப்படுபவர்கள், ஆயுதங்களோடு பிடிபடும் செய்திகளைப் பத்திரிக்கையில் வாசிக்கையில் குமுறுவான். அமைதியான தன்மையும், அதிகம் பேசாத சுபாவமும் கொண்ட சங்கரின் இந்தக் குமுறலுக்கு ஆழ்ந்த அர்த்தமுண்டு. ஆயுதங்களையும் வைத்துக்கொண்டு, அரச படைகளின் கையில் எதிர்ப்பு எதுவுமில்லாமல் ஒரு விடுதலைப்போராளி சரணடைவது என்பது கோழைத்தனமானது என்பது சங்கரின் உறுதியான முடிவாக இருந்தது. குறிப்பாக, தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் ஆரம்பக் கட்டங்களில் விடுதலைப்போராளிகளை ஆயுதங்களோடு அரச படைகள் கைது செய்வதை அனுமதிக்கும் போக்கானது, அரச படைகளுக்கு விடுதலைப் போராட்டத்தை முறியடித்துவிடுவதில் நம்பிக்கையை ஊட்டி, அவர்களின் துணிச்சலைக் கூட்டிவிடும் என்று சங்கர் கருதினான்.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இருபத்தொரு வயதில் அவன் சாதித்தவை தமிழீழப் போராட்ட வரலாற்றுக்குச் சொந்தமானவை. இனிமேல் சாரணர்களை அனுப்பி வடக்கில் புலிப்படையை அடக்கிவிட முடியும் என்று பாசிச சர்வாதிகாரி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சிறீலங்காத் தலைநகரில் பிரகடனம் செய்தபோது, நெல்லியடியில் அரச படைகள் மீது சங்கர் நடத்திய கெரில்லாத் தாக்குதல் தமிழீழம் காணும்வரை தமிழீழப் போராட்டம் ஓயாது, ஓயாது என்பதை அரசுக்கு எடுத்துக்காட்டியது. ஜீப் சாரதியின் மீது வெற்றிகரமான முதல் தாக்குதலை நடத்தி, ஜீப் வண்டியை நிறுத்த வைத்து, கதவைத்திறந்து சாரதியை ஒரு கையில் வெளியே இழுத்து எறிந்தவாறு, மறு எதிரியை நோக்கிக் குண்டுகளைத் தீர்த்த லாவகம் சங்கருக்கே உரியது. இடுப்பிலிருந்து ரிவால்வரை எடுத்த மாத்திரத்தில் குறிவைக்கும் அவனது சாதுரியம் அலாதியானது. நெல்லியடியில் அரச படையினர் பீதியுற்ற நிலையில், சங்கர் கால்களை அகலவிரித்து பக்கவாட்டில் நின்று அரச படையினர் மீது குண்டுமாரி பொழிந்த காட்சி இப்போதும் நம் கண்களில் நிழலாடுகிறது.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தின்மீது சீலனின் தலைமையில் நடைபெற்ற கெரில்லாத்தாக்குதலின் வெற்றிக்கு சங்கரின் பங்கும் கணிசமானதாகும். அரசாங்கத்தால் பொலிஸ் நிலையங்கள் உஷார்ப்படுத்தப்பட்டிருந்தநிலையில், மாடிக்கட்டிடத்தோடு, பிரதான வீதியிலிருந்து சற்றுத்தள்ளி உள்ளே அமைந்திருந்த சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தின் மீது முன்பக்க வாயிலூடாகத் தாக்குதல் நடத்துவது என்பது விஷப்பரீட்சைதான். ஆனால் உயிரைக் கடந்த காலத்திற்கு எழுதி வைத்துவிட்டு, புரட்சி வேள்வியில் குதித்திருக்கும் சங்கர், சீலன் போன்ற போராளிகளின் முன்னே அபாயங்களும், தடைகளும் என்ன செய்துவிடமுடியும்? ஜி.3 சகிதம் படுத்துக்கிடந்த சங்கர் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தாக்குதலில் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக இருந்து நடத்திய தாக்குதல் இப்பகுதி அரச படைகளை ஸ்தம்பிக்கச் செய்தது..

பொன்னாலைக் குண்டு வெடிப்பு நடவடிக்கையிலும் சங்கர் கடுமையாக உழைத்தவன். ஐக்கிய தேசியக்கட்சி (ஜெயவர்த்தனா கட்சி) உறுப்பினர் புன்னாலைக்கட்டுவன் தம்பாபிள்ளை மீதான இயக்க நடவடிக்கைக்குச் சங்கரே பொறுப்பு வகித்தான்.

எந்தவிதமான வாகனத்தையும் நேர்த்தியாகச் செலுத்தும் ஆற்றலும் சங்கரின் பன்முனைப்பட்ட ஆற்றலுக்குச் சான்றாகும். ஒரு கெரில்லா தாக்குதலையடுத்து ஏற்படுகிற பரபரப்பு, எதிரிப்படைகள் அந்த இடத்திற்கு வருமுன்னர் வெளியேற வேண்டிய பதைப்பு என்பவற்றிற்கும் மத்தியில் மிகுந்த வேகத்துடன் அதிக நிதானத்துடனும் வாகனத்தைச் செலுத்துவதில் சங்கர் வல்லவன்.

சக போராளிகளுக்கு ஆயுதங்களைப் பயிற்றுவிக்கும்போது மிகுந்த கவனம் செலுத்துவான். தெளிவாக விளக்குவான். தனக்குத் தெரியாத விடயங்களை மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதில் ஆர்வம் கொண்டவன். அன்போடும் பணிவோடும் பழகுவதால் சகபோராளிகள் மத்தியில் தனி மதிப்பு வகித்து வந்தான்.

தமிழீழ விடுதலையைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல், இராணுவத் தலைமையிலேதான் வென்றெடுக்க முடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த சங்கர் இயக்கத்தில் தன்னையே கரைத்துக் கொண்டவன். விடுதலைப் போராட்டமே சங்கரின் முழுமூச்சாக இருந்தது. விடுதலைப் போராட்டத்திற்கென்றே ஆயுதமேந்திக் களத்திலே குதித்தவன் இந்த வீரன். சமூக விரோத நடவடிக்கைகளையும் சந்தர்ப்பவாதிகளையும் அவன் அறவே வெறுத்தான். அவன் மனது மிகவும் சுத்தமானது. இத்தகைய இதய சுத்தி நிறைந்த போராளிகளே ஒரு விடுதலை இயக்கத்தின் தூய்மைக்குச் சாட்சியாக நிற்கிறார்கள்.

இயக்கத்தலைவர் பிரபாகரனின் அரசியல் வழி காட்டலிலும், இராணுவக் கட்டுக் கோப்பிலும் சங்கர் ஊறி வளர்ந்தவன். பிரபாகரனின் அரசியல் தூய்மையில் அவன் எல்லையற்ற மதிப்பு வைத்திருந்தான். மலரப்போகும் தமிழீழம் தன்னலமற்ற-தூய்மைமிக்க விடுதலைப் போராளிகளால்தான் தலைமையேற்று நடத்தப்பட வேண்டும் என்று அவன் எப்போதுமே சொல்லி வந்திருக்கிறான். பதவிப் பித்தர்களும் துரோகிகளும் எங்கள் புனித இயக்கத்தின் மீது களங்கம் கற்பிக்க முனைந்த போதெல்லாம் அமைதியான இந்தப் போர் மறவன் சினங்கொண்டு எழுந்திருக்கிறான்.

சாகும்தறுவாயிற்கூட அவன் தன் உற்றார், பெற்றோரை நினைக்கவிலலை. தம்பி தம்பி என்றுதான் அந்த வீரனின் உதடுகள் வார்த்தைகளை உதிர்த்தன. தம்பியும், மற்ற இயக்கப்போராளிகளும் கண்கலங்கி நிற்க அந்த வீரமகன் சாவிலே வீழ்ந்து போனான்.

ஒரு உண்மை மனிதனின் கதை என்ற ரஷ்ய நாவலைக் கடைசியாக வாசித்துக்கொண்டிருந்த சங்கர் அந்த நாவலை முழுதும் வாசித்து முடிக்கவில்லை. சங்கர் என்ற உண்மை மனிதனின் கதையே ஒரு வீர காவியம்தான்.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

உலகெங்கும் நினைவுகூரப்பட்ட மாவீரர்கள்

# மாவீரர் நாள் 2001

'கார்த்திகை இருபத்தேழு.
காவற் தெய்வங்களின் காணிக்கைத் திருநாள்
ஊர்திரண்டு நின்று ஒப்பாரிவைப்பதில்லை.
உருக்கொண்டாடி உறுதியெடுத்துக் கொள்கிறது.'



இது கவிஞர் புதுவை இரத்தினதுரையின் கவிவரிகள் இக்கவிவரிகளை முகவுரையாகக் கொண்டு இவ்வாண்டு புலம்பெயர் நாடுகளில் உணர்வுபூர்வமாக, இதுவரையில்லாத புத்தெழுச்சியாக மக்கள் அணிதிரண்டு அனுட்டித்த மாவீரர் தின நிகழ்வுகளை எடுத்து நோக்குவதே பொருத்தம். ஏனெனில் ஊர் திரண்டு, உருக்கொண்டாடி, உறுதியெடுத்துக்கொண்டதாகவே இவ்வாண்டு மாவீரர் நாள் நிகழ்வுகள் சிறப்புறுகின்றன.

உலகில் தமிழர்கள் வாழும் நாடுகள் எங்கணும் மிகச் சிறப்பாக நினைவுகூரப்பட்ட தமிழீழத் தேசிய மாவீரர் நாள் நிகழ்வுகளில் ஆயிரமாயிரமாய் எம்மக்கள் கலந்து கொண்டதானது, விடுதலைப்பயணப் பாதையில் 'தமிழீழம்' எனும் விடுதலைப் பேரொளி அமைத்துவிடுவதாகவே கட்டியம் கூறிநிற்கின்றன. இந்தவகையில் இவ்வாண்டு கார்த்திகையின் இறுதிமுதல் மார்கழியின் ஆரம்பம் வரையான காலப்பகுதியில் புலம்பெயர் நாடுகளில் நினைவு கூரப்பட்டமாவீரர் நாள் நிகழ்வுகளை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

சிங்கள அரச பயங்கரவாதிகளின் பொய்யான, விசமத்தனமான பரப்புரைகளை நம்பி, சில உலக நாடுகள் பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்துள்ளன. இவ்வாறு தமிழரின் சுதந்திரப் போராட்டம் மீது தடைவிதித்த நாடுகளில். இவ்வாண்டு வழமையைவிட உணர்வெழுச்சியுடன் தேசிய மாவீரர் நாள் நிகழ்வுகள் நடாத்தப்பட்டிருக்கின்றன. அவற்றை முதலில் நோக்குவோம்.

## கனடா.

கனடா உலகத்தமிழர் இயக்கத்தால் பிரதேச ரீதியாக ஏற்பாடு செய்யப்பட்ட மாவீரர் நாள் நிகழ்வுகள் 27-11-2001 அன்று கனடாவின் பல்வேறு மாநிலங்களிலும் மிகுந்த உணர்வெழுச்சியுடன் நினைவுகூரப்பட்டன. 15 ஆலயங்களில் மாவீரர் நினைவுப் பிரார்த்தனைகளும், 15 இடங்களில் பிரதேசரீதியான எழுச்சிக் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. ரொறன்ரோவில் மட்டும் 30 இடங்களில் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. மொன்றியலிலும், ஒட்டாவாவிலும் இதுவரை இல்லாத அளவில் மக்கள் அணிதிரண்டு தமிழீழ விடிவிற்காய் தம் இனிய இளைய உயிர்களை அர்ப்பணித்த மாவீரர்களை நினைவுகூர்ந்தனர். ஒட்டுமொத்தமாக சுமார் 15000 ற்கும் மேற்பட்ட மக்கள் இந் நிகழ்வுகளில் கலந்து கொண்டு மக்கள்வேறு புலிகள்வேறு அல்ல என்று நிரூபித்தனர்.

## அமெரிக்கா.

01-12-2001 அன்று அமெரிக்காவின் நியுஜெர்சி மாநிலத்திலும், அதற்குமுதல் வாரம் சான்பிரான்சிஸ்கோ, புளோரிடா மாநிலங்களிலும் மாவீரர்நாள் நினைவு நிகழ்வுகள் எழுச்சிபூர்வமாக நடைபெற்றன.

அமெரிக்க, தமிழீழ தேசியக்கொடிகள் ஒருங்கே ஏற்றப்பட்டு, உணர்வுபூர்வமான பல கலை நிகழ்வுகளும் எழுச்சியுரைகளும் ஆற்றப்பட்டன. பல ஆயிரக்கணக்கில் மக்கள் கலந்து கொண்ட இவ்உணர்வெழுச்சி நிகழ்வுகள் அமெரிக்காவின் மேலும் 6 மாநிலங்களிலும் அனுட்டிக்கப்பட்டதுடன் விசேட பூஜை வழிபாடுகளும் நிறைவேற்றப்பட்டன.

## பிரித்தானியா.

**தேசிய நினைவெழுச்சி நாள்**

லண்டன் அரீனாவில் மிகச்சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட உள்ளரங்கில் 7000ற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்ட பிரமாண்டமான தேசிய நினைவெழுச்சி நாள் நிகழ்வுகள் 01-12-2001 அன்று நடைபெற்றன. தமிழீழ விடிவிற்காய் தம்முயிர்களை நெஞ்சுருக நினைவுகூர்ந்த இந்நிகழ்வில் பல எழுச்சிக் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் சிறப்புரையாற்றினார். இதுவரை இல்லாத உணர்வெழுச்சியுடன் இடையூறுகளையும் பொருட்படுத்தாது ஆயிரமாயிரம் மக்கள் கலந்து கொண்ட இந் நிகழ்வுகளை ரி.ரி.என் தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்புச் செய்தது. ஈழமக்களின் விடுதலை வேட்கையை உலக றியச் செய்தது.

இவ்வாறு தடைகளைத்தாண்டி அனுட்டிக்கப்பட்ட மாவீரர் நாள் நிகழ்வுகள் ஈழமக்களின் உண்மையான, நியாயமான விடுதலைப்போரினையும், அது வெல்லப்பட வேண்டிய தேவையையும் எடுத்துக்காட்டி நிற்கின்றன.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


மொன்றியல்



மொன்றியல்

கனடா.



ஒட்டாவா



ஒட்டாவா

அவுஸ்திரேலியா.


சிட்னி


சிட்னி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மாவீரர் நாள் 2001

‘ உலகளாவிய ரீதியில் தமிழீழ விடுதலைப் போராட்டம் சந்தித்துள்ள நெருக்கடிகளையும் தாண்டிஇவ்வாண்டின் மாவீரர் நாள் நிகழ்வுகள் தமிழர் வாழும் மூலை முடுக்கெங்கும் உணர்வுபூர்வமாக நினைவுகூரப் பட்டிருக்கின்றன. இது வெறுமனே ஈழவிடுதலைக்காய் தனையீர்ந்த மாவீரர்களை நினைவுகூரும், கௌரவிக்கும் நிகழ்வாக மட்டும் அமைந்துவிடாது, அவர்களது கனவை நனவாக்கும் பொருட்டு புலம்பெயர் வாழ் ஈழச் சமூகம் உறுதியெடுத்துக் கொண்ட நிகழ்வாகவும் அமைந்துள்ளதுஎன்பதே யதார்த்தம். ’

## அவுஸ்திரேலியா.

அவுஸ்திரேலியாவின் சிட்னி மாநகரில் ஆயிரக்கணக்கில் மக்கள் கலந்து கொண்ட மாவீரர் நாள் நிகழ்வுகள் 24-11-2001 அன்று நடைபெற்றன. எழுச்சிக்கலைநிகழ்வுகளுடன் தமிழகத்தில் இருந்து வருகை தந்த கவிஞர் அறிவுமதியின் உரையும் இந்நிகழ்வில் இடம் பெற்றது.

எத்தகைய தடையையும் உடைத்தெறிந்து, புலத்தில் இருந்து தாய் நிலத்தின் விடுதலைக்குத் துணை நிற்பார்கள் புலம்பெயர் வாழ் ஈழத் தமிழ் மக்கள் என்பதை உறுதி கூறுவதாக அமைந்திருந்தது அவுஸ்திரேலிய மாவீரர் நாள் நிகழ்வுகள்.

## ஜேர்மனி.

01-12-2001 அன்று 8000ற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்ட மாவீரர் நாள் நிகழ்வுகள் ஜேர்மனியின் டோற்முண்ட் நகரில் இடம்பெற்றது. எழுச்சிக்கலை நிகழ்வுகள், எழுச்சியுரைகள் என்பவற்றுடன், லண்டன் அரீனாவில் உரையாற்றிய திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களது உரை நேரடி ஒளி பரப்புச் செய்யப்பட்டது.

## பிரான்ஸ்.

பாரிசின் புறநகர்பகுதியில் 02-12-2001 அன்று நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகளில் 5000ற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர். மாவீரர் திருவுருவப்படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தி ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வுகளில் பல கலை நிகழ்வுகளும், எழுச்சியுரையும், மாவீரர் நாள் நினைவுப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டியோருக்கான பரிசு வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றன. எத்தகைய தடைகளைத் தாண்டியும் எமது விடுதலைப் போர் வெற்றி பெறும் என்பதே அங்கு அணிதிரண்ட அனைவரதும் ஒருமித்த கருத்தாக இருந்தது.

## நோர்வே

30-11-2001 அன்று நோர்வே ஒஸ்லோவில் ஒழுங்கு செய்யப்பட்ட மாவீரர் நாள் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டதுடன் கலை நிகழ்வுகளும், உரைகளும் இடம்பெற்றன. 1500 பேர் வரை கலந்து கொண்ட இந்நிகழ்வில் மாவீரர் அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றன.

## நெதர்லாந்து.

நெதர்லாந்தின் உத்ரெக் மாநகரில் சிறப்பாக அனுட்டிக்கபட்ட மாவீரர் நாள் நிகழ்வுகள் 01-12-2001 அன்று நடைபெற்றது. 1500ற்கும் மற்பட்டோர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் எழுச்சி நிகழ்வுகளுடன் இறுதியாக நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் எனும் பாடல் பாடி நிகழ்வுகள் யாவும் நிறைவடைந்தன.

## சுவிஸ்.

சுவிற்சலாந்தின் பிறைபோர்க் நகரில் மிகப் பிரமாண்டமாக ஒழுங்கு செய்யப்பட்ட மாவீரர் நாள் நிகழ்வுகளில் 6000ற்கும் மேற்பட்ட இன உணர்வாளர்கள் கலந்து கொண்டு தமது

தேசிய நினைவெழுச்சி நாள்



லண்டன்



லண்டன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


பிறைபோர்க்



சுவிஸ்.

ஜேர்மனி.



டோட்முன்ட்



நெதர்லாந்து.


உத்ரெக்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மாவீரர் நாள் 2001

‘தமிழீழத் தனியரசு உதய மாவது தவிர்க்க முடியாத வரலாற்று நியதியென்றால், எந்தவொரு சக்தியாலும் அதனைத் தடுத்துவிட முடியாது’ எனும் தமிழீழத் தேசியத் தலைவரது வாக்கும், புலம்பெயர் வாழ் ஈழச் சமூகத் தினது இத்தகைய எழுச்சிபூர்வமான போக் கும், தமிழீழம் எனும் சுதந்திரத் தனிநாட்டை விரைவில் உருவாக்கும் என்பது திண்ணம்.’



மண்ணிற்காய் மரணித்த மாவீரர்களை நினை வுகூர்ந்தனர் பல்வேறு கலை நிகழ்வுகளுடன் நடைபெற்ற இந்நிகழ்வு இறுதியாக ‘புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்’ எனும் உரத்த கோசத்தடன் நிறைவடைந்தது.

## இத்தாலி.

இத்தாலியின் லேச்சே, நாப்போலி, பலெர் மோ ஆகிய இடங்களில் ஆயிரக்கணக்கில் மக்கள் கலந்து கொண்ட மாவீரர் நாள் நிகழ் வுகள் இடம்பெற்றன.
லேச்சேயில் 18-11-2001 அன்றும் நாப்போலி, பலெர்மோ ஆகிய இடங்களில் 25-11-2001அன் றும் நிகழ்வுகள் அனுட்டிக்கப்பட்டன.
இத்தாலிய மக்கள், அரச, அரசசார்பற்ற அமைப்பினர், எழுத்தாளர்கள், அகதிகளுக் கான உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்ட இந் நிகழ்வுகளில் மாவீரர் மலர் வணக்கத்துடன் பல கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

## டென்மார்க்.

24-11-2001 அன்று டென்மார்க் கேணிங் நக ரில் சிறப்பாக நினைவுகூரப்பட்ட மாவீரர் நாள் நிகழ்வுகளில் சுமார் 1000ற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டதுடன், தாயக நினை வுகளைச் சுமந்தவாறு மாவீரர் நினைவு வணக் கத்தைச் செலுத்தினர். எழுச்சி நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## தென்னாபிரிக்கா.

தென்னாபிரிக்காவின் டேர்பன், பேனோனி, ஈஸ்றலண்டன் ஆகிய நகரங்களில் நினைவு கூரப்பட்ட மாவீரர் நாள் நிகழ்வுகளில் 27.11.2001 அன்று பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர்.

## நியுசிலாந்து.

நியுசிலாந்தின் ஆக்கிலாங்கில் உணர்வெ ழுச்சியுடன் ஏற்பாடு செய்யப்பட்ட மாவீரர் நாள் நிகழ்வுகள் 8.12.2001 அன்று நடை பெற்றன. இந் நிகழ்வுகளில் பல நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டு மாவீரர் களை நினைந்துருகினர்.

இவை தவிர மத்திய கிழக்கு நாடுகளிலும் ரஸ்யாவிலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் சிறப் புற அனுட்டிக்கப்பட்டிருக்கின்றன. உலகளா விய ரீதியில் தமிழீழ விடுதலைப் போராட்டம் சந்தித்துள்ள நெருக்கடிகளையும் தாண்டி இவ்வாண்டின் மாவீரர் நாள் நிகழ்வுகள் தமி ழர் வாழும் மூலை முடுக்கெங்கும் உணர் வுபூர்வமாக நினைவுகூரப் பட்டிருக்கின்றன. இது வெறுமனே ஈழ விடுதலைக்காய் தனை யீந்த மாவீரர்களை நினைவுகூரும், கௌர விக்கும் நிகழ்வாக மட்டும் அமைந்துவிடாது, அவர்களது கனவை நனவாக்கும் பொருட்டு புலம் பெயர் வாழ் ஈழச் சமூகம் உறுதியெ டுத்துக் கொண்ட நிகழ்வாகவும் அமைந் துள்ளது என்பதே யதார்த்தம்.

‘தமிழீழத் தனியரசு உதயமாவது தவிர்க்க முடியாத வரலாற்று நியதியென்றால், எந்த வொரு சக்தியாலும் அதனைத் தடுத்துவிட முடியாது’ எனும் தமிழீழத் தேசியத் தலை வரது வாக்கும், புலம்பெயர் வாழ் ஈழச் சமூகத் தினது இத்தகைய எழுச்சிபூர்வமான போக் கும், தமிழீழம் எனும் சுதந்திரத் தனி நாட்டை விரைவில் உருவாக்கும் என்பது திண்ணம்.



சவூதி அரேபியா



சவூதி அரேபியா

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ஒஸ்லோ



ஒஸ்லோ

நோர்வே

டென்மார்க்.



கேணிங்



கேணிங்

பிரான்ஸ்.



மசி பலசோ





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# இயற்கையும் இன்றிங்கு கார்த்திகைப் பூக்களும்

என்ன நினைத்தேன், என்ன மறந்தேன்?
எண்ணப்பயிரினில் ஏனிந்தக் கருகல்?
போகமுடிந்த என் தேசப் பரப்பெங்கும்
போய்வந்த களைப்போ? இல்லை
காணக்கிடைத்த அக்காட்சிகளாலே,
மிக நொந்த மன இளைப்போ?
ஆயினும்...
கண்களைமூடி மீளவும் காண
முயல்கிறேன், முயல்கிறேன்
என்னைச்சுடும் என்னைப்பற்றிய நினைவுகளே
முந்திக் கொண்டு எழுகின்றன!

தேசப்புயலைப் பாராமல் இருந்தேன்,
சர்வதேசப்பரப்பில் பாசம் வளர்த்தேன்,
மூண்ட பிரச்சினைக்கு முகம் கொடுக்க மறுத்தேன்.
எரியாத ஒன்றிற்காய் தவமாய்க் காத்திருந்தேன்...
புல்லின் நுனியில் தொங்கும் துவிப்பனியில்,
உயர்ந்த பனையின் உருவந் தெரியும்,
அகன்று பரந்து உயர்ந்த ஆலுந்தெரியும்!
எந்தப்புள்ளியில் என்ன கொடுமையோ...
'அந்தப் புள்ளியில்'
கொடுமையை அறுக்கும் கூர்மை பிறக்கும்!
தேசவிடுதலை நவீனயுகத்தில்,
முற்போக்கானது, முழுமையுமானது! - அது
உள்ளே விளைந்த கயமைகளனைத்தையும்
அழித்து முடிக்கும் அவதாரமுமானது!
சர்வதேசத்தைக்கவ்விய இருட்டுப்போர்வையை
கிழித்துப்போடும் வெளிச்சமுமானது.
'இந்த உண்மைகளை'
உலுத்தமனத்தோடு உணரமறுத்தேன்!.
உரிமைப்போரை அழித்து முடிக்க,
அரச ரேவிய கொடுமைகள் எத்தனை....
ஆயிரம் பல்லாயிரம் கைகள் விரித்த பெரும் பூதம்
இலட்சம் பற்கள்
பதித்த வடுக்கள் எண்ணிலடங்காது.
கண்ணீரைச் செந்நீராய்ச் சொரியவைக்கும்
பொல்லாப்புகள் சொல்லிமாளாது....
நரபலி எடுக்கத் துடித்தபடி
நீண்டகால வெறியனாய்
பொருளாதாரத் தடையரக்கன்,
பட்டினி வாழ்வை எம்மண்ணில் விளைத்தது!
மருந்துகள் மறுக்கப்பட்ட (பிர) தேசம்...
வாயினைப்பிளந்து அலறியபடி
உயிர் கொல்லி நோய்ப்பிசாசுகள்
பிணிகாவும் மேனிகளாக உளன்றிட வைத்தன.
இங்கு விடுதலைக்காக மட்டுமல்ல;
வாழ்வதற்கும் போராட்டம் தான் நடக்குது!
மேனகையை பாரேனென்ற
விசுவாமித்திரக்கண்மூடலில் நான்
உண்மையின் தரிசனத்தைக் காண மறுத்தேன்.
ஏதோ தரிசனத்திற்காய் தவமாய்க்கிடந்தேன்.
என்தேசப் போராட்டம்,
வெற்றிவாகை சூடிய போதெல்லாம்
உவந்திட மறுத்துக் கொடுப்புக்குள் சிரித்தேன்,
விடுதலைப்போராட்ட வல்லமைதன்னை
பெரும்படையரசின் வல்லமை ஒரு நாள்
வென்றே முடிக்கும் என்ற என் நினைப்பால்,
சின்னமீனைப் பெரிய மீன் விழுங்கும் என்பேன்!
வெளியில் செல்லுமென் வழிகளை அடைத்து
கால்களை ஒடுக்கிச் சிறுகோடு கிழித்து,



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பசுமையைப் போர்க்குது! கைகளை விரிக்குது!



-சு.அரசண்ணா

வீட்டில் இருந்தே உலகம் சுமந்தேன்
இறுமாப்புத் தொட்டிலில் ஏறி அமர்ந்தேன்!
வானொலி சொல்லும், வருவோர் சொல்வார்,
ஏற்பன ஏற்பேன் மறுப்பன மறுப்பேன்,
எனது அளவுகளின்படியே எல்லாம்
இருக்குமென்று வாதம் செய்வேன்
மறுத்தவரோடு மோதவும் செய்வேன்- சிலவேளை
வானொலியை உடைக்க எண்ணமுங்கொள்வேன்!
வரட்டுத்தனத்தால் தனியனாயானேன்
குருட்டுத்தனத்தில் குறுகிநானிருந்தேன்
என்னுள் இந்த 'இரசாயன மாற்றம்'
எப்படி நிகழ்ந்தது? என்ன நடந்தது...?
பொறுமைக்குப் பெருமைதராத
கீழ்மையைக் கண்டேன்;
அரசபக்கத்தாரின் அழுக்கான கை
மூன்றாவது கையை முறித்துப்போட்ட
கயமையைக் கண்டேன்;
சமாதானத்திற்குச் சமாதி கட்டிய
கொடுமையைக் கண்டேன்.

கால்களின் கட்டை அவிழ்த்து எறிந்தேன்...
சூழலைக் காணக் கண்களைத் திறந்தேன்.....
உண்மையை மறுக்கும் வீம்பினைக் கொன்று
மெய்மையைக் காணும் பண்புடன் எழுந்தேன்.
இறுமாப்பின் உயரத்தில் இருந்து
இறங்கியென் தரைமீது நடந்தேன்.
தீச்சுவாலை எழுந்தது;
எழுந்ததீ உடனே அணைந்தது;
போரிடும் கைகள் அதனை முடித்தன..
நெருப்பு ஆற்றில் நீந்திடும் அவரே
கவசமாய் மக்களைக்காப்பது மெய்யே.
தொடர்ந்தும் நடந்தேன், தூரம் கடந்தேன்;
நவீன காலத்தின் கொள்கைப்படி,
வயல்களாய்த் தெரியாத வயல்களைக் கண்டேன்;
தெருக்களாயில்லாத தெருக்களைக் கண்டேன்;
கடைகளை மறுக்கும் கடைகளைக் கண்டேன்;
சந்தையாய் இல்லையாயினும் சந்தையைக்
கண்டேன்;
தானெரிந்த சாம்பலிலிருந்து ஏதோ ஒருபறவை
உயிர்த்தெழுமென்று யாரோ கூறக் கேட்டேன்.
எரிந்து கொண்டே மகிழ்ந்து வாழும்
மானிடப் பேராளுமை இங்கே கண்டேன்!

வறுமைப்பட்டும் வெறுமைப்படாத,
'செழுமைக்கோடுகள்'
கொள்கை முனைப்புகளைக் கோலமிடுகின்றன.
மனிதர் இங்கே விழுகின்றனர்...
மானிடம் தளைக்க உழுகின்றனர்
நாளையை பயிர் விளைய...
விதையைத்தருவது இன்றைய பயிரே
இருப்பவர் சிறப்புக்காய் இறப்பவர் இருக்குமினம்
அடைந்திடும் மாண்பிற்கு அளவேது; கரையேது?
தலைமுறைகள் தலைநிமிர தலைகள் தரும்
தலைமுறைகளின்
தேசம் கொள் பெருமைக்கு தடையேது;
குறையேது?
மண்ணுக்காய் விழுந்து, மாவீரராய் எழுந்தவர்
பல்லாயிரம்.
அவருக்காய் கரைந்து
வாழும் மானிடம் உருகும்!
சந்திகள் குளிரும், தெருக்கள் கண்விழிக்கும்
சந்துகளும் சருகுச் செட்டைகள் கழற்றி
சிவப்பாய் மஞ்சளாய் நீலமாய்ப்புதிய
இறக்கைகள் விரித்து கலகலத்துப் பறக்கும்!
போராடும் மண்ணிது புதுப்பொலிவு காணுது!
உலகெங்கும் பரந்து வாழும்
உறவு மனங்களும் குளிரக் குதூகலிக்க
இங்கே இருப்பவர் ஒன்றாயுழைக்கிறார்;
'மாவீரர் வணக்க'
கடைப்பிடிப்பில் வாழ்கிறார்!
இருள் சுமந்த மனத்தினன் நானும் விடுதலைப்
பொருள் சுமந்து இணைகிறேன்...
இயற்கையும் இன்றிங்கு பசுமையைப் போர்க்குது....
கார்த்திகைப் பூக்களும் கைகளை விரிக்குது...



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எல்லைக

# சாவது ஒரு முறை

ஓயாத அலைகள்-3 இன் போது மூன்றுமுறிப்பில் வீரச்சாவடைந்த சிறப்பெல்லைப்படை மாவீரர் ஜீப்கரனின் வீட்டிற்கு நாங்கள் சென்றபோது எம்மை வரவேற்க வீட்டினுள் ஒருவரும் இல்லை. நாம் அழைத்ததைக் கேட்டுப் பக்கத்திலிருந்து வந்த மூதாட்டி ஒருவர் "இருங்கோ பிள்ளையள், இப்ப வந்திடுவீனம்"

"எங்க அம்மா போயிட்டினம்"

"வேற எங்க பிள்ளை, துயிலும் இல்லத்திற்குத்தான், அவன் போய் ஒன்றரை வருஷமாப்போச்சு அப்பாவைப் பார்ப்பம் என்று சின்னனுகள் கேட்டால் உடன கூட்டிக்கொண்டு வெளிக்கிட்டிடுவாள். பூவும் கையுமா தாயும் பிள்ளைகளும் வெளிக்கிடுவதைப் பார்த்தால் வேதனைதான். எங்கட நாட்டின்ர நிலை இப்படியாப்போச்சு ஆர் என்ன செய்ய முடியும்" சொல்லிக் கொண்டிருக்கும்போதே சின்னச் சிரிப்புடனும் கூடவந்த வாரிசுகளின் கடா முடா ஓசையுடனும் உள் நுழைந்த தாரணியின் முகத்தில் அந்தப் புனித பூமியினுள் கால் பதித்து நின்ற உணர்வின் பிரதிபலிப்பு இன்னும் மீதமிருப்பதாகவே பட்டது. விழியோரம்பூத்திருந்த மெல்லிய நீரோடையும் முகத்தைப் போர்த்தியிருந்த அமைதியும் அந்தப் புனித பூமியில் நிக்கும்போதே உருவாகுபவை; நெருப்பாய் கனலும் நெஞ்சத்தோடு உள் நுழைந்தாலும்கூட அடுத்தகணமே அனைத்தையும் சாந்தமாக்கி விழிநீர் பூக்கவைக்கும் இயல்பிற்குரியவர்களல்லவா அங்குறங்கும் வீரர்கள். அமைதியாய் உறங்கியபடி எம் இனத்திற்கே வீரமும் உத்வேகமும் போராடும் உறுதியும் கொடுக்கும் அந்த மண்ணடிப்பூக்களின் மகிமை இந்த மண்ணிற்கே உரியதல்லவா.

தாரணியின் கண்களிலே ஒருமுறை துயிலும் இல்லத்தைச் சுற்றிவந்த ஆத்ம திருப்பிதியோடு நாம் எம்மை அறிமுகப்படுத்திக் கொண்டோம்.

ஜீப்கரன் போராளியாயிருந்த போதே தாரணியும் அவனும் காதலர்கள். அவனது போராட்ட வாழ்விற்குக் காதல் தடையாக இல்லாத போதும் குடும்ப வறுமை தடையாகி நின்றது.

குடும்பத்தை ஓரளவேனும் தூக்கி நிறுத்த நினைத்து போராட்ட வாழ்வில் இருந்து விலகி வந்தவன் அக்காலத்திலேயே தாரணியுடனான தனது மண வாழ்வையும் அமைத்துக் கொண்டான்.

தாரணியின் குடும்பத்துக்கு விருப்பமே இல்லாத திருமணம் அது. ஏற்கனவே இயக்கத்தில் இருந்தவன் திரும்பவும் போகமாட்டான் என்று என்ன நிச்சயம்? அப்படி அவன் போய்விட்டால் மகளின் எதிர்காலம் எப்படியாகுமோ என்ற பயம் அவர்களை எதிர்ப்புக்குரல் கொடுக்கத் தூண்ட, எதையுமே பொருட்படுத்தாது அவர்கள் தம் வாழ்வுப் பாதையில் உறுதியாகவே கால் பதித்தனர். பெற்றோரின் கோபமெல்லாம் பேரக்குழந்தைகளின் வரவோடு பறந்து போக எல்லாமே நன்றாகி இறக்கை கட்டிய வாழ்வுதான்.

டனுஷா, டனுஷியா, டினர்ஷன் என மூன்று பிஞ்சுகள். பூக்களுக்கு சிறகு முளைத்தால் வண்ணத்துப்பூச்சிகள் என்கிறார்கள் கவிஞர்கள் அதேபோல் பூக்களுக்கு கை கால்கள் முளைத்தால்..... அவைதானே மழலைகள், மழலைப் பூக்களாய் வீடிருந்தால் மகிழ்விற்கு ஏதேனும் குறைவிருக்குமா என்ன?

வாக்குவாதங்களேயற்ற அவர்கள் இருவருக்குமிடையில் ஜீப்கரன் எல்லைக்காப்புப் பணிக்கென புறப்படத்தொடங்கியதும் இடையிடையே அவையும் இடம்பெறும்.

"செய்யத்தான் வேணும், அதுக்காக என்னையும் பிள்ளைகளையும் விட்டுவிட்டு இப்படி அடிக்கடி போறது சரியா"

"இது இயக்கத்தில் ஊறின இரத்தம். நான் போயிட்டு கவனமா வருவன்.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இல்லங்கள் தாக்கும்

தேவையில்லாமல் குழப்பாதே"

கணவன் தன் மீது கொண்ட காதலின் உறுதி எப்படி அசைக்க முடியாதோ அது போலவே அவனுள் இருந்த பிடிவாதக்குணமும் அசைக்க முடியாதென்பதை உணர்ந்து கொண்டு சந்தோசமாகத்தான் கணவனை வழி அனுப்புவாள்.

போராட்டத்தோடு ஊறிய இரத்தம். ஓர் போர்க்களத்திலேயே வடிந்துபோக துயிலும் இல்லச் சொத்துக்காரனாக அவன் 1999-11-04 இல் நான்கு பேர் சுமக்கத் திரும்பிவந்தான் தாரணி பார்ப்பதற்கு.

இப்போது.....

பாடசாலையில் அப்பாவின் தொழில் என்ன என்று டனுஷியாவைக் கேட்டால் "துயிலும் இல்லத்தில் வேலை செய்கிறார்" என்கிறாள்.

"செத்தால் ஒருக்கால்தானே அம்மா சாவன். நான் அப்பாவின் வழியில்தான் போகப்போறன்" என்கிறான் பத்து வயது டனுஷன்.

இதுதான் தமிழர் தேசம் இது தெரியாமல் சுனில் தென்னக்கோனை பிரபாகரனாக்கி 'மாஸ்ரர் மைன்ட்' ஒத்திகை நடத்தி, அன்ரன் விஜேந்திராவும் முப்படையும் அக்கினிச்சுவாலையில் மண்கௌவ்வி நிக்கிறான் அதற்கு நாங்களா பொறுப்பு? என்றோர் தமிழ் மகன் கேட்பது காதொலிப்பதாய் எமக்கோர் உணர்வு.

## பெற்றோர் தினத்தில் பெருமையோடு

மல்லிகா.

அந்த மெலிந்த உருவம் தன் சோகங்களை எப்படித் தாங்கிக் கொண்டது. அல்லது தன் உயிரினியவனின் இழப்பால் நொந்துதான் மெலிந்திருக்கிறதோ?

பதினெட்டு வயதில் திருமணம் செய்து, பத்து வருடங்கள் தன் இனியவனுடன் வாழ்ந்து திளைத்த மகிழ்வின் கனிவாக 3குழந்தைகளோடு தனித்து நிற்கும் அவளுக்குள் வாழ்வின் மீதான உறுதியைக் கொடுத்து எது? பொங்கிநுரைத்துக் கரையுடைத்துப் பாய்ந்து கொண்டிருக்கும் போராட்ட நதிவேகம் நிச்சயம் அவளையும் தொற்றியிருக்கும். தன் மூன்று மழலைகளையும் வளர்த்து ஆளாக்கி இத்தேசத்தின் எதிர்கால பிரஜைகளாக்கி கொடுக்க வேண்டும் என்ற உத்வேகமே அவளை தன் இழப்பின் மீதிருந்து மீண்டுவரச் செய்திருக்க வேண்டும்.

மிக மிக மெலிந்து ஒலித்தாலும் அந்தக்குரலின் உறுதி தமிழீழப் பெண்ணை அப்படியே பிரதிபலிப்பதாய்...

திருகோணமலையில் பிறந்து சிறீலங்கா இராணுவ கெடுபிடிகளால் யாழ் நோக்கி தள்ளப்பட்ட மகாவிகாரை யாழ் ஆனைக்கோட்டையில் பிறந்த சிவகுமாரின் இதயம் இனிமையாய் தாங்கிக் கொண்டது. சமவயதேயுடைய இருவரும் இதயங்களை பரிமாறிக்கொண்டதை ஏதோ மல்லிகாவின் பெற்றோர் ஏற்றுக்கொள்ளவே இல்லை. ஆனாலும் அவர்களது இல்லறம் அமைதியாகவே ஆரம்பமானது.

இடப்பெயர்வின் அவலங்கள் தொடர்ந்தபோதும். தொழில் வாய்ப்புக்கள் அருகி வறுமை அவ்வப்போது எட்டிப்பார்த்த போதும் அவர்கள் வாழ்வு வசந்தம் தழுவியதாகவே இருக்கிறது.

வருடங்கள் ஓடிப்போனதற்கு கேட்கவா வேண்டும்?

ராஜ் பிரபுவும். ஜெயப்பிரியாவும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே வளர்த்துவிட்டார்கள்.

சிந்துஜன் மட்டும் குழந்தை.

சிவகுமாருக்கு கடைசி ஒன்றரை வருடமும் எல்லைக்குப் போவதே பிரதான தொழில். குறிப்பிட்ட வீரர்களுக்கு பொறுப்பாக விடப்பட்ட காரணத்தால் தொடர்ச்சியாக பணி செய்வதை தனது முக்கியமான கடமையாக கருதியிருப்பான் போலும்.

"தொடர்ந்து நீங்கள்தான் போகவேணுமா? என மனைவி கேட்டால். நான் சரியாச் செய்தால் தானே என்னோடை சாகிறவங்கள் உண்மையாய் உழைப்பாங்கள்" என்று அவன் சொல்லுவானாம், மல்லிகா எமக்கு நினைவூட்டி தன்னையும் மீறி கண்கலங்குகின்றாள்.

அவன் தனது இறுதிக் களத்திற்குப் புறப்பட்ட வேளை சற்றே வித்தியாசமானது. கடைசி மகன் சிந்துஜன் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு மிகவும் மெலிந்து எழும்பி இருக்கவே முடியாதபடி சக்தியிழந்திருந்த நாட்கள் அவை. காய்ச்சலின் தாக்கம் அதிகமாகி குழந்தையைப் பலவீனப்படுத்திவிட்ட நிலையில் எல்லைக்குப் போவதற்கான முறையும் சேர்ந்துகொண்டது. அப்படியே குழந்தையைவிட்டு எப்படிப்போவது? மல்லிகா தனியே சமாளிப்பாளா.....? கேள்விகள் புரளத் தனக்குத்தெரிந்த வைத்தியர்களிடமெல்லாம் ஓடி குழந்தைக்கு சத்துமிக்க மாத்திரைகளும் பிஸ்கற்றும் எதுவெனக்கேட்டு. தேடித்தேடி வாங்கி மகனுக்கு ஊட்டினான். தன் பொருளாதார வளத்தை மீறி அவைக்கான விலைகள் அமைந்த போதும் கூட மகனை தேற்றுவதிலேயே குறியாக இருந்தவன். மகன் எழுந்து இருந்து தன்னைப் பார்த்துச் சிரித்த சந்தோசத்துடனேயே எல்லைக்குப் புறப்பட்டுப் போனான். "மல்லிகா! நான் திரும்பி வரும்போது பிள்ளை நடக்கத் தொடங்கிவிடுவான்" என்று மனைவியிடம் தன் நம்பிக்கையைச் சொல்லிப் போனவன் வரவே இல்லை.

பாடசாலையில் பெற்றோர் தினத்திற்குத் தாயை மட்டும் அழைத்துக்கொண்டு. தந்தையின் பெருமைமிக வரலாற்றை நெஞ்சில் சுமந்தபடி அந்தப் பிஞ்சுகள் கம்பீரமாய் நடக்கின்றன.



www.tamileelamarchive.com

# 25 வருட ஆயுதப்போர்; தடங்கலும் தடையுடைப்பும்

கு.கவியழகன்



எண்பதுகளில் தேசியத் தலைவர்

## வரலாறு பெற்றெடுத்த பிரபாகரனும் பிரபாகரன் பெற்றெடுத்த விடுதலைப் புலிகளும்

வரலாற்றின் வளர்ச்சியாக, எழுபதின் ஆரம்பத்தில் வெடித்த வன்முறை எதிர்ப்பியக்கம் தமிழரின் மனக்கொந்தளிப்பையும், எதிர்ப்புணர்வையும் வெளிப்படுத்துவதாகவே அமைந்தது. அது ஒரு விடுதலைப்போராட்டத்தை முன்னெடுக்கக்கூடியவாறு, அமைப்பு வடிவத்தையோ, செயற்திட்டத்தையோ கொண்டிருக்கவில்லை. ஆயினும் வன்முறையின்றி வேறெந்த மார்க்கமும் விடுதலையை வென்றெடுக்க சாத்தியமற்றதாகவும், பொருத்தமற்றதுமாகவே தமிழ் மக்களால் உணரப்பட்டது.

ஆங்காங்கே பல குழுக்களாகவும், தனிப்பட்டும் தொடர்புகளுடனும், தொடர்புகளற்றும் செயற்பட்டு வந்தவர்களுள் ஒருவராக இருந்த வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள், ஆயுதப் போராட்டத்திற்கான ஒரு அமைப்பை கட்டியெழுப்பவேண்டுமென மிகச் சிலரைக் கொண்டு 'புதிய தமிழ்ப்புலிகள்' என்ற அமைப்பை ஆரம்பித்தார். 1976இல் வெடிமருந்து யுகத்தில் தமிழர் மீண்டும் எழுச்சியுற்று தமது ஆதிபத்தியத்தை நிலைநாட்ட புறப்பட்டுவிட்டதை அர்த்தப்படுத்துவதாக துப்பாக்கி, ரவை கொண்ட வளையத்தினூடு பாயும் புலிமுகத்தை சின்னமாகக்கொண்டு, 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்ற கோசத்துடன் கெரில்லாப் போர்முறையை ஆயுதப் போராட்ட வழிமுறையாக முன்வைத்து, கொள்கைத் திட்டத்தையும், போர்முறைத் திட்டத்தையும் கொண்ட ஒழுக்கக் கட்டுப்பாட்டு விதிமுறைகளுடன்கூடிய, ஒரு ஆயுதப் போராட்ட அமைப்பாக 'தமிழீழ விடுதலைப் புலிகள்' அமைப்பை அவர் ஸ்தாபித்தார். பின்னாளில் தமிழ் மக்களின் அரசியல் தலைவிதியை தீர்மானிப்பதான இந்த



www.tamileelamarchive.com

அமைப்பின் அடிக்கல் 1976.05.05 அன்று நாட்டப்பட்டது.

## ஆயுதப் போராட்டத்திற்கு எழுந்த முதல் நெருக்கடி

ஆயுதப் போராட்டம் தவிர்ந்த எந்தப் பாதையும், தமிழீழம் தவிர்ந்த எந்தக் கோரிக்கையும் தமிழ் மக்களின் வாழ்வுரிமையைப் பெற்றுத் தந்துவிடாது. இதை தமிழ் மக்கள் பட்டுணர்ந்து அதற்குத் தம்மை ஆயத்தமாக்கிவிட்டபோது, இதனை உணர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணி 'உதயசூரியன்' சின்னத்தில் 'தமிழீழமே எங்கள் தீர்வு, இரத்தம் சிந்தியும் போராடுவோம். தமிழீழம் அமைப்போம் ஆணைதாருங்கள்' என்ற கோசத்தோடு தேர்தலில் குதித்தது.

அதுவரையிருந்த தமிழ்த் தலைமைகளின் ஒன்றிணைவும், அவர்களது இந்தக் கோசமும் முழு மக்களையும் அவர்களின் தலைமையின் பால் ஈர்த்தது. 1977 தேர்தலில் கூட்டணி அமோக வெற்றியுடன் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியுமானது. ஆனால், சிங்களத்தலைமைத்துவத்திடம் இவர்கள் மலிவாக விலை போனதுதான் தமிழர் வரலாற்றில் மறக்க முடியாத துயரம். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கீழ் ஆயுதப்போராட்டத்திற்காக அணிதிரளவேண்டிய மக்களை, உத்வேகத்தோடு, ஆயுதப்போராட்டம் முனைப்புடன் முன்னேற வேண்டிய நேரத்தில் விடுதலைக் கூட்டணி தனது வெற்றுக் கோசத்தினால், நயவஞ்சகத்தினால் மக்களின் விடுதலை உணர்வைப் பயன்படுத்தி தமது தலைமைத்துவத்தின் கீழ் ஈர்த்துக்கொண்டது. விடுதலைப் போராட்டத்தின் பின்னடைவுக்கான முட்டுக்கட்டையாக விடுதலைக் கூட்டணி எழுந்துநின்றது.

தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் கொண்ட தலைவர் பிரபாகரனின் உறுதி தளராத செயற்பாட்டினால் அச்சமுற்ற சிங்கள அரசு, புலிகள் தடைச்சட்டத்தையும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் பிறப்பித்து போராட்டத்தை ஒழிக்க இராணுவத்தை அனுப்பி வைத்தது. புலிகள் முற்றுமுழுதான தலைமறைவு வாழ்க்கைக்கு போகவேண்டியதாயிற்று. இக்காலத்தில் விடுதலைக் கூட்டணியின் பிரச்சாரமே மக்கள் மத்தியில் சென்றடையக்கூடிய கருத்தாகவும் இருந்தது. மக்கள் விரிக்கப்பட்ட மாயவலையில் சிக்குண்டு நயவஞ்சகத்தின் பின்னால் விடுதலை தேடிப் போய்க்கொண்டிருந்தனர். விடுதலைப் போரோ துரோகத்தனத்தால் துடித்துக் கொண்டிருந்தது.

தமிழீழத்திற்கு ஆணைகேட்ட விடுதலைக் கூட்டணி 1981இல் சிங்களக்குள்ளநரி என்று சொல்லப்படும் ஜெயவர்த்தனாவிடம் மாவட்ட அபிவிருத்தி சபையைப் பெற்றுவந்து, இதுவே தமிழீழத்தின் அடிக்கல் என்று தமது துரோகத்தனத்திற்கு கொள்கை விளக்கமளித்தனர். இதுவே தமிழ் மக்களிடம் தமது தலைமைத்துவத்தை ஏற்று நின்றவர்கள் யார் என்ற விழிப்பை ஏற்படவைத்தது.

இதையடுத்து, உள்ளூராட்சித் தேர்தலில், தமிழீழத்திற்கு ஆணைகேட்ட கூட்டணியினர் குதித்தபோது, தலைமறைவு வாழ்வில் அது வரை உறுதியுடன் ஆயுதப் போராட்டத்தைக் கட்டிக்காத்த தலைவர் பிரபாகரன், தேர்தலை பகிஸ்கரிக்குமாறு விடுத்த வேண்டுகோளை யேற்ற மக்கள் தேர்தலை முற்றுமுழுதாக பகிஸ்கரித்தனர். இந்நிகழ்வு உதயசூரியன் அஸ்தமனத்தைநோக்கி அழைத்துச் சென்றதை தமிழ் மக்கள் உணர்ந்து விழிப்புற்றதை வெளிக்காட்டியது.

1983 திருநெல்வேலித் தாக்குதல் ஆயுதப் போராட்டத்தின்பாலும், விடுதலைப் புலிகளின்பாலும் மக்களிடம் அசாத்திய நம்பிக்கையை ஏற்படுத்தியது. அதேவேளை, வரலாறு காணாத 1983 யூலை படுகொலை உலகை ஒருகணம் இத்தீவை நோக்கி திருப்பியபோது, பிரதான எதிர்க்கட்சியான விடுதலைக் கூட்டணி கையாலாகத் தனத்துடன் வாலைச்சுருட்டி நின்றமை தமிழ் மக்கள் மத்தியில் அவர்கள் பற்றிய முழு விளக்கத்தை அடையவைத்தது. அத்துடன் தமிழ் மக்களின் அரசியல் தலைமைத் துவத்திலிருந்து அவர்கள் ஓரங்கட்டப்பட்டனர். விடுதலைப் போராட்டம் ஒரு தலைமைத் துவத்தின் கீழ் முனைப்புறுவதற்கான புறச் சூழல் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பதினொருவருடன் கட்டிக்காத்த ஆயுதப்போராட்டத்தின் பயனாய் முழுமையாய் கருக்கட்டியது.

## இந்தியாவின் பூகோள ஆதிக்க நலனுக்குள் போராட்டம் புதையும் அபாயம்

விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தின் கீழ் தமிழ் மக்களின் அரசியல் போராட்டம் ஆயுதப் போராட்டமாக ஒரு நேரிய, சீரான தடங்களைப் பதித்து முன்னேறும் புறநிலை தோன்றியது. இந்நிலையில் இதை அவதானித்த இந்திய அரசு, தனது பிராந்திய பூகோள அரசியல் நலனுக்கு குந்தகம் விளைவிப்பதாக அமெரிக்கா பக்கம் சார்ந்த இலங்கையை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்காக, ஈழப்போராளிக் குழுக்கள் மூலம் தாக்குதல் நடத்தி அரசை நிலைகுலைய வைக்க உதவிசெய்து ஆதரவளித்தது. அதேநேரம் விடுதலைப் புலிகளின் ஈழப்போராட்டம் தனது பிரதேச ஒருமைப்பாட்டிற்கு ஆபத்தெனக் கருதிய இந்தியா, தமிழ் மக்களின் ஒரு தலைமைத்துவத்திற்குப் பதிலாக பல தலைமைத்துவங்களை உருவாக்கி, கட்டுப்பாட்டின்கீழ் அவற்றை வைத்திருப்பதன் மூலம் போராட்டம் முன்னேறாதவாறு குழப்பமடைய வைப்பதில் அக்கறையுடனிருந்தது.

இந்திய புலனாய்வு அமைப்பின் சதி வலையினால் ஈழத்தில் பல கொள்கையுடைய பல குழுக்கள், போர்முறைத் திட்டலோ, சீரான செயற்திட்டமோ இன்றி, புத்துயிர் பெறவும் புதிதாய்த் தோன்றவும் செய்தன. சமூகவிரோதக் குழுக்கள் இந்தப் போராட்ட அமைப்புக்குள் உள்வாங்கப் பட்டன. முன்னேறவேண்டிய போராட்டம் முக்குளித்தது. ஒரு தலைமைத்துவமும், ஒரு முகப்பட்ட அணித்திரள்வும் உடைக்கப்பட்டது. இந்திய இராஜதந்திரத்தில் போராட்டம் பலியாகிக் கொண்டிருந்தது. ஆயினும் இந்தியாவின் உள்நோக்கத்தைப் புரிந்து கொண்டு, கிடைத்த உதவியைப் பெற்றுக் கொண்டும் அதேநேரம், பணிந்து கொடாமலும் கட்டுக்கோப்பான இயக்கமாக விடுதலைப் புலிகளை களத்தில் செயற்பட வைத்தார் பிரபாகரன்.



எண்பதுகளில் தேசியத் தலைவர்

புலிகள் முன்னெடுத்த போர் நடவடிக்கைகள் இலங்கை இராணுவத்தின் நகர் திறனைக் கட்டுப்படுத்தியது. இராணுவம் பெரிதும் முகாங்களைவிட்டு வெளியேற முடியாத நிலையைப் புலிகள் தோற்றுவித்தனர். இது இராணுவத்தினால் எழுந்த அச்சுறுத்தலில் இருந்து மக்களை பெரிதும் விடுவித்தது. மக்கள் விடுதலைப் புலிகள் மீது பெரிதும் நம்பிக்கைவைக்கத் தொடங்கினர். இதற்குமேல் பொறுத்திராத இந்திய, விதைத்ததற்கான அறுவடையைப் பெற செயலில் இறங்கியது. திம்புப் பேச்சுவார்த்தைக்காக, இந்தியா போராட்ட குழுக்களை அழைத்தது. பொறியாக விரிக்கப்பட்ட அந்தப் பேச்சில் தமது நியாயத்தை முன்வைத்த புலிகளின் நிலைப்பாட்டையே பேச்சில் பங்குபற்றிய ஏனைய குழுக்களும் ஒப்புக்கொள்ளவேண்டி பேச்சிலிருந்து வெளிநடப்புச் செய்தபோது, விடுதலைப் புலிகளால் தமது நலன்கள் பாதிக்கப்பட்டதாக இந்தியா விசனமுற்றது.

தொடரும்..



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# திருவெலாம் சூழ வாழ்க பல்லாண்டு!

விண்வரை விரியும் வியத்தகு வீரம்
விரிந்தோர் மலரை நிகர்த்திடும் அழகு
பண்ணெடுத் தெவரும் பாடிடும் பண்பு
பரணியொன் றெழுத வல்லவுன் வெற்றி
கண்வழி வழியும் கருணையின் கசிவு
களத்தினில் பகையை வெல்லுமுன் ஆற்றல்
இன்னும் பல்லாண்டு ஆண்டென வளர்க.
இளமையோடிருந்து வாழ்க பல்லாண்டு!

ஆயிரம் அகவை நினக்கெனவாகும்
அன்பினர் வாழ்த்து அதையுருவாக்கும்.
நாவிருந் தெழுமென் நற்கலி யெழுதும்.
நலன்பெறும் சொற்கள் நடப்பனவாகும்.
காவியப் பொருளே! காலையின் கதிரே!
கவினுறப் பொலியும் அருள்மிகு திருவே!
தேவியின் கடைக்கண் பார்வை பெற்றவனே
திருவெலாம் சூழ வாழ்க பல்லாண்டு!

புதுவை இரத்தினதுரை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




'வெளிச்சம்' சஞ்சிகையின் முதலாவது இதழ்




















# பவள இதழில் வெளிச்சம்

**தமிழீழத் தாயகத்தில் இருந்து வெளியாகும் ஒரே ஒரு கலை இலக்கிய பல்துறை சஞ்சிகையான வெளிச்சம் இதழ் அண்மையில் தனது பவள இதழை வெளியிட்டிருந்தது. தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்ட இந்தப் பவள இதழ் மிகப் பிரபலமான படைப்பாளிகள், இலக்கிய கர்த்தாக்கள், போராளிக்கலைஞர்கள் மற்றும் தமிழீழ ஆர்வலர்கள் எனப்பலரது ஆக்கங்களைத் தாங்கி கனத்துடன் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது. தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தையும் அதனோடிணைந்த தேசாபிமான வாழ்வையும் வரலாற்றுப் பதிவாக்கும் இந்த வெளிச்சம் சஞ்சிகையின் பணி உண்மையிலேயே பாராட்டத்தக்கதும் வியந்துநோக்கத்தக்கதுமாகும். அந்த வகையில் பல சிறப்புக்கள் பொதிந்ததாக வெளிவந்து கொண்டிருக்கின்ற இச்சஞ்சிகையின் விடுதலைப் பணியும் கலை இலக்கிய சேவையும் மேலும் தொடர வேண்டும் என்று தமிழீழத் தேசியத் தலைவர் உட்பட அனைவரும் மனதார வாழ்த்தியிருந்தனர்.**

மனிதன் தோன்றி, நாகரீகம் வளர்ச்சி கண்ட நாள் தொடங்கி நவீன கலாச்சாரத்தினுள் மூழ்கிக்கிடக்கும் இன்றைய காலகட்டம் வரை கலை இலக்கியம் என்பது மனிதகுலத்தோடு பின்னிப்பிணைந்ததொரு அம்சமாகி விடுகிறது. அத்தோடு ஒரு மனித குலத்தின் ஒரு தேசத்தின் வரலாற்றை பன்னெடுங்காலம் வரைக்கும் பதிந்து வைக்கும் ஒரு பொதியாகவும் இலக்கியம் செயலாற்றுகின்றது.

ஆயினும் கால நகர்வில் பழைய சம்பிரதாய மூட நம்பிகையில் இருந்து மனிதன் விடுபடவே, கலை இலக்கியப் போக்கின் வளர்ச்சியிலும் மாற்றங்கள் ஏற்படலாயிற்று. ஒவ்வோர் நடப்பாண்டிலும் நடைமுறை அரசியல் சமூக விழுமியங்களைத் தழுவியதாக இலக்கியப் படைப்புக்கள் மாற்றமடையத்தொடங்கின. சமூக முன்னேற்றத்தையும் தேச உணர்வினையும் மனித விடுதலையினையும் மையமாகக்கொண்டு படைப்புக்கள் யாவும் வீச்சுடன் வெளிவரத்தொடங்கின. இதன் பாதிப்பை தமிழீழமும் உள்வாங்கிக் கொண்டது.

இவ்வகையில் தமிழீழத்திலிருந்து வெளியாகிவரும் இப்புதிய படைப்புக்களை எம் மக்கள் பெரிதும் விரும்பித்தேடவும். வாசிக்கவும் விருப்புக்கொண்டனர். இதற்கு எம் சமூகத்தில் தோன்றிய அரசியல் சமூக படிக்கட்டுமானங்களின் வளர்ச்சிப்போக்கே காரணியாய் இருந்துள்ளதெனலாம்.

நாம் வாழுகின்ற சமூகத்தில் காலங்காலமாக விடுதலைக்கான போரும் அதற்கெதிரான அநீதியான யுத்தமும் நடைபெற்ற வண்ணமே உள்ளன. இவற்றின் மத்தியில் இருந்துதான் எமது எழுத்தாளர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடனும் தேசபக்தியுடனும் செயலாற்றுகின்றார்கள். ஆணவத் திமிர்பிடித்த சிங்களத்தலைமையின் எச்சில் எலும்புத் துண்டுகளுக்கு அடிபணிந்து போகாமல், எமது மண்ணில் வேரூன்றி எமது தலைமையை நேசித்து மக்களுக்கான இலக்கியப் படைப்புக்களைப் படைத்து வருகின்றார்கள்.

எழுதுவதோடு மாத்திரம் நின்றுவிடாமல் வீறுடன் நடைபெறுகின்ற விடுதலைப்போரின்பால் தாமும் சார்ந்திருப்பதே இங்கு போற்றுதற்குரிய விடயமொன்றாகும். தமிழீழ மக்களை தேவையற்ற ஆசாபாசங்களின்பால் ஈடுபாடுகொள்ளா வண்ணம், அவர்களது உள்ளத்தில் தேசப்பற்றையும் புரட்சிகரமான சிந்தனையையும் உண்டாக்கும் நோக்கில் தம்மாலான பணியை இலக்கியப்படைப்புக்கள் மூலம் நிறைவேற்றத்துடிக்கின்றன.

இவ்வாறான தேசாபிமான இலக்கியப் படைப்பாளிகளுடைய பல்துறை சார்ந்த ஆக்கங்களைப் பதிவு செய்து, கனமான ஆக்கங்களையும் தாங்கியவாறு, உள்ளும் புறமும் அழகுடன் வெளிவந்துள்ளது வெளிச்சம் பவள இதழ். தமிழ் நிலத்தில் நிமிர்ந்து நின்று, தலைவனுக்கு வலுச்சேர்க்கும் மண்ணின் மைந்தர்களும், புலத்தில் வாழ்ந்தாலும் மொழியால் இனத்தால் ஒன்றுபட்டவர்கள் எனும் விடுதலைப் பற்றுணர்வோடு வாழும் பெரு மனிதர்களும், தமிழினப் பற்றாளர்களும் படைத்துள்ள இலக்கியங்கள் பல

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# வெளிச்சம்



'வெளிச்சம்' பவள இதழுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

விடுதலை வரலாறு படைக்கப்படும் ஒரு புரட்சிகரமான சமூகப்புறநிலையில்தான் உன்னதமான விடுதலை இலக்கியம் பிறக்க முடியும். தமிழீழமாகிய எமது தாயக மண்ணில் ஒரு விடுதலை வரலாறு படைக்கப்பட்டு வருகிறது. எனவே எமது மண்ணில்தான் உயர்ந்த விடுதலை இலக்கியப் படைப்புக்கள் தோன்றுவது சாத்தியம்.

விடுதலைப் போராட்டத்தையும், அந்தப் போராட்ட வாழ்வின் மெய் நிலைகளையும் ஆழமாகத் தரிசிக்கும் ஆக்க இலக்கியப் படைப்புக்களையே விடுதலை இலக்கியம் எனலாம். இவ்விடுதலை இலக்கியப் படைப்புக்கள், எமது தேசத்தின் வாழ்வியக்கத்தை ஊடுருவிநிற்கும் இன ஒடுக்குதலின் கொடுரத்தை சித்தரித்துக் காட்டுவதோடு, எமது மக்களிடையே விழிப்புணர்வையும் விடுதலைப் பற்றுணர்வையும் தூண்டிவிட வேண்டும். இத்தகைய படைப்புக்கள் எமது மண்ணில் வளர்ச்சிகண்டு வருகின்றன. இந்த விடுதலை இலக்கிய மறுமலர்ச்சிக்கு களம் அமைத்துக்கொடுத்துவரும் பெருமை எமது கலை பண்பாட்டுக்கழகத்தின் கலை இலக்கிய ஏடான 'வெளிச்சம்' சஞ்சிகையையே சாரும்.

'வெளிச்சம்' தனது எழுபத்தைந்தாவது இதழைப் பவள மலராக, அழகும் ஆழமும் செறிந்ததாக உருவாக்கி வெளியிடுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்தப் பவள மலர் வெளியீடானது வெளிச்சத்தின் ஆக்கபூர்வமான இலக்கிய வரலாற்றுப் பணிக்குச் சான்றாக அமைகிறது.

விடுதலை என்ற விழுமியத்தின் உன்னதத்தைத் தேடும் வெளிச்சத்தின் இலக்கியப் பயணம் நீண்டது. இடர்கள் நிறைந்தது. பத்தாண்டு கால துணிச்சலான விடாமுயற்சியின் வரலாற்றைக்கொண்டது. எமது தேசத்தின் விடுதலைக்குரலாக 'வெளிச்சம்' ஆற்றிவரும் அரும்பணியை நான் நன்கறிவேன். போரும், பேரவலமும், பெருந்துயரும் நிறைந்த இருப்பிற்கு மத்தியில், வளங்கள் அனைத்துமே முடக்கப்பட்ட சூழலுக்கு மத்தியில், இப்படியானதொரு தரமான இலக்கியச் சஞ்சிகையை நீண்ட காலமாக, தொடர்ச்சியாக வெளிக்கொண்டுவருவது மிகவும் சிரமமான பணியாகும். இந்தச் சிக்கலான பணியை திறமே செய்துவரும் வெளிச்சத்திற்கும், வெளிச்சத்தின் ஆசிரியர் திரு. கருணாகரன் அவர்களுக்கும், வெளிச்சத்தின் உருவாக்கத்திற்கு மூலபிதாவாக நின்று முழுமுச்சுடன் உழைத்துவரும் புதுவை அண்ணா (புதுவை இரத்தினதுரை) அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள். இந்த காலப் பணியில் தம்மை ஈடுபடுத்தி, கடந்த பத்து வருடங்களாக வெளிச்சத்துடன் இணைத்து பணியாற்றிவரும் எமது மண்ணின் கலைஞர்களுக்கும் ஆக்க இலக்கியப் படைப்பாளிகளுக்கும் எனது வாழ்த்துக்கள்.

கலை பண்பாட்டுக்கழகத்தின் உழைப்பிலும், வழிநடத்தலிலும் வெளிச்சத்தின் விடுதலைப் பணி எமது போராட்ட வரலாற்றுடன் இணைந்து என்றென்றும் தொடரவேண்டும். வெளிச்சத்தின் இந்தப் பவள இதழ் வெளியீடானது இந்த விடுதலைப் பணியின் ஒரு முன்னேற்றப் பாய்ச்சல்தான்.

வெளிச்சத்தின் பவள இதழுடன் தம்மை இணைத்துள்ள கலைஞர்களையும், இலக்கிய சிருஷ்டிகர்த்தாக்களையும் பெருமிதத்துடன் வாழ்த்துகிறேன்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

---

இதில் அங்கம் பெற்றுள்ளன. அது இதழுக்கு மேலும் மெருகூட்டியுள்ளது.

இவ்இதழில் பெருமதிப்புக்குரிய தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களினதும், அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், புரட்சிக்கவிஞர் காசிஆனந்தன், தமிழீழ உணர்வாளர் பழ. நெடுமாறன், வே.மனோகரன் ஆகியோரது வாழ்த்துரைகளையும் வணக்கத்துக்குரிய பிதா.ஜெகத்கஸ்பராஜ் அடிகளார். க.வே.பாலகுமாரன், ச.பொட்டு, உள்ளடங்கலாக இருபத்தியொரு படைப்பாளிகளினுடைய கட்டுரைகளும் கவிஞர் இன்குலாப், கவிஞர் புதுவை இரத்தினதுரை, பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் உள்ளடங்கலாக நாற்பத்தைந்து கவிஞர்களது கவிதைகளும் செ.இளங்கோ அவர்களுடைய நாடகம் ஒன்றும் பதினான்கு சிறுகதைகளும் தாங்கியே பூத்திருக்கின்றது வெளிச்சம்.

விடுதலைப்போராட்டம் தழுவி நிற்கும் படைப்புக்களையும் கலை இலக்கியங்களையும் அதிகம் நேசிக்கின்றவர் எமது தேசியத் தலைவர் அவர்கள். அவருடைய அக, புற வாழ்கையில் இருந்து இதை நாம் இனங் காணக்கூடியதாய் இருக்கின்றது. எமது மண்ணிலிருந்து வடிவம் பெறுகின்ற மேற்படியான படைப்பிலக்கியங்கள் அனைத்துக்கும் அதிக வரவேற்பையும் ஆலோசனைகளையும் அவரே நல்கி வருகின்றார். தனது மக்களிடையே இவ்வகைப் படைப்புக்கள் யாவும் அரசியல் தெளிவினையும் விடுதலைப் பற்றுணர்வையும் ஏற்படுத்திவிட வேண்டும் என்பதுவே அவரது பேரார்வமுமாக உள்ளது.

தலைவர் அவர்களது எதிர்பார்ப்பையும் கனவையும் மெய்ப்பிக்கும் முயற்சியில் எமது மண்ணின் படைப்பாளிகள் வெற்றி கண்டு வருகிறார்கள். இவ்வகையான கலை இலக்கிய ஆக்க கர்த்தாக்களை கௌரவிக்கும் நோக்கில் கடந்த 02-10-2001அன்று தாயகத்தின் பிரதேசமொன்றில் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட மேடையில் நடைபெற்ற வெளிச்சம் பவள இதழ் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார் தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள். வெளிச்சம் இதழின் வளர்ச்சியில்பங்காற்றியவர்களையும் தமது படைப்புக்கள் மூலம் அவ்விதழிற்குப் பெருமை சேர்க்கும் ஆக்க கர்த்தாக்களையும் பாராட்டியிருந்தார். அத்தோடு அவர்களுக்கான சிறப்புப்பிரதிகளையும் வழங்கிக் கௌரவித்தார்.

விடுதலைப்போராட்ட வரலாறு படைக்கப்படும் ஒரு புரட்சிகரமான சமூகப்புற நிலையில் இருந்துதான் உன்னதமான விடுதலை இலக்கியப்படைப்புக்கள் வெளிவருகின்றன, எனும் சிந்தனைக்கு உயிரோட்டம் கொடுத்து நிற்பவர்களை பாராட்டிய தோடல்லாமல் தொடர்ந்தும் இவ்வாறான படைப்புக்கள் வெளிவரவேண்டும் என்ற ஆர்வத்தினையும் வெளிப்படுத்தியிருந்தார்.

படைப்புக்கள் யாவும் படைப்பாளிகளோடு மாத்திரம் நின்றுவிடக்கூடாது. அது எம் மக்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும். அப்போதுதான் அப்படைப்புக்கள் தாங்கியிருக்கும் உண்மைகளையும் யதார்த்தங்களையும் புரிந்து கொண்டு, அதற்கேற்ப வாழப்பழகிக் கொள்வார்கள் எனும் வரலாற்றுத் தலைவனின் எண்ணத்திற்கு எழுத்தாளர்கள் தொடங்கி வாசகர்கள் வரை உயிர் வடிவம் இடவேண்டும். அப்போதுதான் எமது சமூகமானது விழிப்புணர்வும் தேசப்பற்றும் விடுதலைப்பற்றுணர்வும் கொண்டதோர் சமூகமாக உலகின் முன் வெளிச்சம் கொண்டு பிரகாசித்து முன்மாதிரியாக விளங்கும், அதற்கென அனைத்து படைப்பாளிகளும் ஒன்றிணைந்து உழைக்கவேண்டும்.

அ.பி.குணா.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# காலத்தினூடு நிகழும் பயணம்



ஒரு மனிதன் நடப்புலகுடன் இடையறாத உறவை வைத்துக் கொள்ளவும் இயங்கவும் வாசிப்பு-அறிதல்- உதவுகிறது. ஒவ்வொரு நாளும் புதிதாய் பிறக்கும்போது புதிய புதிய நிகழ்ச்சிகள் நடக்கின்றன. மாற்றங்கள் உருவாகுகின்றன. காலம் கட்டவிழ்ந்து செல்கையில் அதன் நீட்சியில் ஆயிரங்கோடி புதுமைகள் நிகழ்ந்தபடியே இருக்கின்றன. இவையெல்லாம் பதிவுகளாகவும் செய்திகளாகவும் எப்படியோ ஒவ் வொருகாலத்துக்கும் கடத்திவரப்படுகின்றது. மனிதனின் பரிணாமத்தோடு தொடர்புடையதாக இந்தச்செயல் தொடர்ந்து, மனிதனை வளப்படுத்தி வருகிறது. மனிதனை மனிதனாக அடையாளம் காட்டியும் வருகிறது. பதிவுகளையும் செய்திகளையும், தொடர்ந்து அவிழும் காலத்துக்கு எடுத்துச் செல்லும் இந்தக் கடத்தல் பல நிலைகளிலும் பல வடிவங்களிலும் நடக்கிறது. ஆரம்பத்தில் இலக்கியம், கலை என்பவற்றூடாக நிகழ்ந்த இந்த ஓட்டம் பின்பு சாதனைகளைக் கண்டுபிடித்ததன் பயனாக வேறு வடிவங்களினூடாகவும் பயணிக்கத் தொடங்கியது. மேலும் கூறுவதென்றால் ஊடகங்களின் தொழிற்பாடே காலத்தின் ரகசியங்களையும் செய்திகளையும் காலத்தினூடாகக் கடத்துவதுதான். இந்த ஊடகத் தொழிற்பாடுகளில் ஒன்றிலேயே வாசிப்பு என்பதும் நிகழ்கிறது.

ஒருவர் தன் இளம்பிராயத்திலிருந்து தான் அநேகமாகத் தன்னுடைய வாசிப்பைத் தொடங்குகிறார். இளமைக் கல்வியில் இந்த ஆரம்பம் நிகழ்கிறது. மொழியை அடிப்படையாகக் கொண்டது வாசிப்பு. மனிதனின் முதலாவது செயற்பாடு அவன் மொழியுடன் உறவாகுவதுதான். ஒரு குழந்தை முதன் முதலில் பேசத் தொடங்கும்போது இது நடக்கிறது. மொழி தொடர்புக்கும் சிந்தனைக்கும் அடிப்படையானது. மனிதனின் பேச்சும் மொழியிலேயே ஆதாரமாயிருக்கின்றது. அவன் தனது தேவைகளைத் தெரிவிக்கவும் எண்ணங்களை வெளிப்படுத்தவும் மொழியையே பயன்படுத்துகிறான். எனவேதான் குழந்தைப் பருவத்தின் முதற் தொழிற்பாடாக மொழியுடன் உறவாகுவது மனிதனின் இயல்பாகிறது. இந்த உறவு அவனுடைய இறுதிக்கணம்வரையிலும் நீடிக்கின்றது. இது ஒரு அவசியமான செயலும்கூட.

மொழி இரு வகையில் இயங்கும் திறனுடையது. ஒலிமூலம் செவிப்புலனூடாகவும் பதிவு மூலம் கட்புலனூடாகவுமாக இந்த இருவகையும் அமைகிறது. மொழியில் நிகழும் உரையாடலின் மாற்றமடைந்த வடிவமே எழுத்து-பதிவு- மூலமான வாசிப்புக்கான வடிவம். அடிப்படையில் இதுவும் ஒருவகை உரையாடல்தான். அறியப்படுத்தலூடாக அறிதல் ஒரு கொடுக்கல்- வாங்கல் தொழிற்பாடாகவே இது இருக்கிறது. வாசிப்பு, ஒருவர் சொல்வதைக் கேட்பதுபோல பிரதியிட்டதை- வழங்குவதை-நுகர்வது. இந்த நுகர்ச்சி அறிதலாகிறது. அறிதல் - வாசிப்பினூடாக கிரகித்தல் உள்வாங்குதல் என்பவற்றுடன் மேலும் சிந்தனையைத் தூண்டி மேலும் மேலும் உண்மைகளைத் தரிசித்தலாகின்றது. பதியப்பட்ட மொழிமூலம் பதியப்படாத சேதிகளை அறிவதாகின்றது அல்லது உணர்வதாகின்றது.

மொழி மனிதனுடைய வாழ்வில் உரையாடலிலேயே பெரிதும் இயங்குகிறது. அடுத்ததாக பதிவில் இயக்கமுறுகின்றது. உரையாடலின் மூலமான அறிதலுக்கடுத்ததாக பதிவினூடாக பிரதியிடல் மூலமாகவே அறிதலைச் சாத்தியமாக்கமுடியும். பிரதியிடல் என்பது அறியப்படுத்தலாகும். ஆகவே முன்வைக்கப்படும் பிரதியை நுகர்வதற்கு வாசிப்பு அவசியமாகின்றது.

வாசிப்பின் பிரதான நோக்கமும் பயனும் அறிதல்தான். ஒருவர் தன்னைத்தானே அறிவதற்கும் தன்னைச் சூழவுள்ள உலகத்தைப் புரிந்து கொள்வதற்கும் வாசிப்பு உதவுகிறது. வாசிப்பு மனதைப் பண்படுத்துகிறது. மனப்பண்பாடு நல்லதோர் சமூகத்தை உருவாக்கவும் பேணவும் அதிக பங்களிக்கிறது. ஆனால் இந்த வாசிப்பு ஒழுங்குபடுத்தப்பட்ட தேர்ந்த முறையில் அமைந்திருக்கவேண்டும்.

இன்றைய இயந்திரமயப்பட்ட வாழ்வில் நெருக்கடிகள் அதிகம். அதேவேளை உலகம் சுருங்கி தகவல் பரிமாற்றத்தில்- கருத்தாடலில் ஊடகங்களின் புதிய வரவும் அறிமுகமும் பயன்பாடும் பெருக்கெடுத்துள்ள நிலையில், எல்லாவற்றையும் அறிந்து கொள்ள எவருக்கும் சாத்தியமில்லை. எனவே வாசிப்பிலீடுபடுவதற்கு தேர்வு முக்கியமாகிறது. இங்கே பொதுவாசிப்பு- துறைசார்வாசிப்பு என ஒரு பகுப்பு அவசியமாகின்றது. பொது வாசிப்பிலீடுபடுவோர் செய்திகள், செய்திக்கட்டுரைகள், ஆய்வுகள், விமர்சனங்கள், புனைகதை, அறிவியல் என்றவகையில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றையே அதிகமாக நாடுகிறார்கள். இதன் அடுத்தகட்டமாக ஜனரஞ்சகம் என்று வணிக எழுத்துகளில் உறவுகொள்வதையும் அவதானிக்கலாம். இது மேலோட்டமான வாசிப்பு எனப்படும். அறிதல் என்பதைவிட பொழுதுபோக்கு என்ற நோக்கே இதில் அதிகமுண்டு. மேலும் நேரத்தை விழுங்கி நம்மையறியாமலே நம்மைத்

> "எழுத்தும் வாசிப்புமே தொடர்ந்து மனித வரலாற்றின்சாரமும் ஆக்கமும் கொண்ட தொடர்பு முறையாக இருக்கும்"
>
> \- மனுஷ்யபுத்திரன்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

திசைதிருப்பியும் விடுகிறது. வாழ்வின் உள்ளடக்குகளையோ புறமுகத்தையோ சரியாகக்காட்டாது மாயஉலகில் சஞ்சரிக்க வழிவகுக்கிறது. துறைசார் வாசிப்பு இதிலிருந்து முற்றிலும் வேறுபடுகின்றது. இது அவ்வத்துறைகளினூடு விரிவாகவும் ஆழமாகவும் பயணிப்பதாகும். வாழ்வைப்பற்றிய தேடல், காலத்தையும் வரலாற்றையும் ஊடுருவிப்பார்க்கும் திறன், சிந்தனை விரிப்பு என்று இது ஒரு தீவிர நிலையில் இயங்குகிறது. இந்த வாசிப்பே பயனும் நோக்கமும் என்ற இலக்கை பூரணப்படுத்துவது. இதையே மகாத்மா காந்தியின் மொழியில் 'வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்' என்று சொல்லப்படுகின்றது.

வாசிப்பிலீடுபடுதல், கற்றற்செயற்பாட்டுக் காலத்திலிருந்து ஆரம்பித்து வாழ்வு முழுவதும் தொடர்கிறது. கற்றற் காலத்தில் அடிப்படை அறிவுக்கும் பின் அவற்றின் விருத்திக்குமாகவே வாசிப்பு தேவையாகிறது. சிந்தனை வளர்ச்சியை அறியவும் அதனுடன் தொடர்ந்து இயங்கவும் இது பிரதானமாக நிகழவேண்டும்.

ஒரு காலகட்டத்தில் பிறந்து வாழும் மனிதர் இன்னொரு காலகட்டத்தினூடாக நகர்ந்து வேறொரு காலகட்டத்தினுள் நுளைகிறார். இப்படிக் காலத்தினூடு இவர் பயணிக்கும்போது 'தலைமுறைகள் காலகட்டம்' என்பது உருவாகி விடுகிறது. இத் தலைமுறைகளின் காலகட்டம் மனிதப் பரிணாமத்திலும் உலக நடப்பு விதிகளிலும் மாற்றங்களைக் கொண்டிருக்கும். முதல் தலைமுறையைச் சேர்ந்த இவர் தனக்கு அடுத்த தலைமுறையுடனோ, அதற்கடுத்த தலைமுறையினருடனோ உறவு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. அவ்வாறு ஒரு உறவு இருந்தாலும் அது சமநிலையுடைய உறவாக இருப்பதில்லை. இவர் பிறந்த காலத்துப் பழக்கவழக்கங்கள், கருத்துக்கள், வாழ்க்கை முறைகள், சாதனங்கள், தொழில் முறைகள் என எல்லாம் வேறானவை. இவருக்கு அடுத்த தலைமுறைகளினுடையவை வேறானவை. இவரோ தன் காலத்தைய மதிப்பீடுகளுடன் தேங்கும்போது அடுத்த தலைமுறையினருக்கும் இவருக்குமிடையில் முரண்பாடுகள் இயல்பாக மேற்கிளம்புகின்றன. இந்த முரண்பாடுகளைத் தீர்த்து தன் காலத்திலிருந்து அடுத்தகாலத்துக்குப் பயணிக்க வாசிப்பு- அறிதல் உதவுகிறது. இங்கே தலைமுறை இடைவெளியை நிராகரித்து ஒரு நிரந்தர இணைப்பை வாசிப்பு வழங்குகிறது. நேற்றைய மனிதன் இன்றைய மனிதனாகவும் நாளைய மனிதனாக இருப்பதுவும் இந்த அறிதலினூடாகவே. மனிதன் தன்வாழ்வில் சந்திக்கும் காலவேறுபாடு எல்லாவற்றையும் தன் வசப்படுத்த அறிதல் ஒத்துழைக்கிறது.

எழுத்தறிவுள்ள எந்தச் சமூகமும் வாசிப்பிலீடுபட முடியும். வாசிப்பதினூடாக தனது அறிவின் எல்லைகளை விஸ்தரித்து தன்னை வளப்படுத்தவும் முடியும். ஆனால் சில சமூகங்கள் தொழிலுக்கான கற்றல்- அறிதலுடன் மட்டும் தேங்கி விடுகின்றது. இது வெறுமனே பொருளீட்டும் சுருங்கிய நோக்கினைக் கொண்டது. இந்த நோக்கமும் போக்கும் வளர்ச்சியுற்று அந்தச் சமூகங்களையே கால ஓட்டத்திலிருந்து அந்நியப்படுத்தி பின்னுக்குத் தள்ளிவிடும். வளர்சியுறாத பல சமூகங்களிலும் வளர்ச்சியுற்றிருந்து பின் வீழ்ச்சியடைந்த சமூகங்களிலும் இதை அவதானிக்கலாம்.

சரி, வாசிப்புப்பழக்கத்தை, வாசிப்பு முயற்சியை எப்படி ஏற்படுத்துவது என்று ஒருவர் யோசிக்கக்கூடும். இங்கே வாசிப்பை விருப்பத் தேர்வு- அவசியத்தேர்வு என்றவகையில் ஏதாவதொன்றுடன் ஆரம்பிக்கலாம். தொடக்கத்தில் விருப்பத்தேர்வாக- ஒருவர் தனக்கு இயல்பாக ஏற்படும் விருப்ப விடயங்களை அறிவதற்காக வாசிப்பது. இது விரிவுபெற்று மெல்ல மெல்ல பொது வாசிப்பாகப் பரிமாணமடைந்து ஆழமான வாசிப்புக்கு அழைத்துச் செல்லும். ஆனால், வாசிப்பு என்பது கற்றல்- படித்தல்- உணர்தல் என்ற உள்ளுயிர்ப்புத் தன்மைகளிலிருந்து என்றும் விலகியிருத்தல் கூடாது. விலகிச் செல்லும்போது அந்த வாசிப்பு வீணான செயலாகவும் வாழ்வைப் புறக்கணித்து சமூகத்திலிருந்து மனிதனைப் பிரித்து விடுவதாக மாற்றி விடும் அபாயமும் உண்டு.

அவசியத் தேர்வு என்பது ஒருவர் தான் தொழிற்படும் துறையின்- இலக்கியம், அரசியல், வரலாறு, சமூகவியல், தத்துவம், அறிவியல், ஆன்மீகம் என்று இது விரிந்துசெல்லும்- விருத்திக்காகவும் சுயமதிப்பீட்டுக்காகவும் வாசிப்பது. இது ஆரம்பத்தில் துறைசார்ந்து- அதன் தேவை கருதி- இருந்தாலும் பின்னர் பரந்து ஆழமாகி ஒரு வாசிப்புப்பண்பாட்டையே உருவாக்கி விடுமளவுக்கு வளரும். இதுவே ஆரோக்கியமான வாசிப்பின் தொடக்கமாகும்.

ஒருவர் சரியான ஒழுங்கில் தனது வாசிப்பை தொடருவாரானால் அவர் உலகத்தின் முகத்தையும் அதன் செல்வழியையும் அறிந்துகொள்ள முடியும். ஒரு சிறுகிராமத்திலிருக்கும் மனிதர் உலகம்முழுவதையும் இன்று அறிந்து வைத்திருக்கிறார், அறிந்துகொண்டிருக்கிறார் என்றால் எப்படி இது நிகழ்கிறது? ஒவ்வொருவரும் உலகம் முழுவதற்கும் பயணிப்பதோ அல்லது ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு சமூகத்துடனும் இணைந்து வாழ்வதோ அல்லது ஒவ்வொன்றுடனும் உறவை வைத்திருப்பதோ சாத்தியமில்லை ஆனால் தாம் இருக்குமிடத்திலிருந்து கொண்டே உலகை அறியவும் ஒவ்வொன்றையும் புரியவும் அறிதல் வசதியளிக்கிறது. அறிதலின் அடிப்படை வாசிப்புத்தானே! எத்தனை சாதனங்கள் வந்தாலும் வாசிப்பின் நிரந்தரத்துவம் அழியாது.

மற்றைய ஊடகங்களை விட வாசிப்பு ஊடகம் கிரகித்தல்- சிந்தித்தல் என்பதற்கும் அதிக வசதியை அளிக்கிறது. வானொலி, தொலைக்காட்சி என்ற ஊடகங்களுடனான அறிதலில் வேகம் அதிகம். அறியப்படுத்தும் தன்மை என்பது இவற்றில் இயந்திர ரீதியானதால் அறிதலையும் அதற்கேற்ப தயார்படுத்த வேண்டியுள்ளது. ஆனால் வாசிப்பு இந்த அடிப்படையிலிருந்து வேறுபட்டது. அது அதிக சுதந்திரத்துடன் இயங்க அனுமதிக்கிறது. எந்த ஆர்ப்பாட்டங்களுமில்லாது மௌனமாக தன் உறவை வளர்க்கிறது. அது மேலும் சில வசதிகளையும் அளிக்கிறது. அதிக செலவையும் சிரமத்தையும் தவிர்த்து இலகுவான கையாள்கையில் தன்னை ஐக்கியப்படுத்தத் தயாராக இருக்கிறது. அதேவேளை வாசிப்பு பிறருக்கு எந்தச் சிரமத்தையும் தருவதில்லை. பிரதியைப் படிக்கக்கூடிய ஒளிமட்டும் இருந்தால் அதற்குப் போதுமானது. வாசிப்பு ஊடகம் இயக்குவதற்கானதல்ல. அதனுடன் சேர்ந்தியங்க வேண்டிய தொழிற்பாட்டை அது கோருகிறது. ஆனால் வாசிப்பின் பெறுமதியுணராது புதிரும் ரகசியங்களும் சுவாரஷ்யமும் அர்த்தமும் உண்மையும் நிறைந்த கோடானுகோடி சங்கதிகளை அறியாமலிருக்கும் பேசாமடந்தைத்தனத்தை, நமது சூழலின் பாராமுகத்தை என்ன வென்பது?

'ஒரு நூல் திறக்கப்படும்போது பல சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன' என்பார்கள். உண்மைதான், வளமான ஒருபண்பட்ட சமுதாயம் அறிவும் செயற்திறனுமாக இருக்க வேண்டுமெனில் அது தன்னை அறிந்திருக்க வேண்டும். தன்னை, தன் காலத்தை, தன் முகத்தை, தன் பிரச்சினைகளை அறியும் அறிதல்- தேடலே தன்னை வாழ்விக்கும்.

**கருணாகரன்**





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## ஐந்து வருடப் போர் நிலைமை மாறுகின்றது

# ஒருமுகப்படுத்தல் தோல்வி, பரவலாக்கல் பலவீனம், மாற்றுவழியின்றி படைத்தரப்பு



இருபக்கப் போர் அமைதி பல எதிர்பார்ப்புக்களையும், சந்தேகங்களையும் கேள்விகளையும் எழுப்பியிருக்கிறது. யுத்தத்தின் இன்றைய நிலை என்ன? இதுவே இன்று அறிவதற்கு ஆர்வம் மிக்க செய்தியாகி உள்ளது.

முழுமையான போர் நிலைமையில் இப்பொழுது சடுதியான மாற்றம் ஒன்று நிகழ்ந்திருக்கிறது. அது இன்னும் செயல் பூர்வமாக வெளிப்படாததினால் சாதாரண மக்களால் விளங்கப்பட முடியாததான சூக்குமமான மாற்றமாக நிகழ்ந்துவிட்டிருக்கிறது. இதுவே எதிரித்தரப்பின் போர்க்கள அமைதிக்கான மர்மம்.

இராணுவத்தரப்பு, நிகழ்ந்துவிட்ட இந்த மாற்றத்தை எதிர்கொள்வது எவ்வாறென்ற வினாவுக்குள் மூழ்கிப்போய் விடை தேட முயன்று கொண்டிருக்கிறது. மாற்றுவழிகள் பற்றி விவாதிக்கவும், பரிசீலிக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

**பிரபுத்திரன்**

ஆனால், நிகழ்ந்துவிட்ட மாற்றம் திண்ணியமானதும் தீர்மானகரமானதுமான மாற்றம் என்பதே இங்கு நாம் விளங்கவேண்டியது.

முழுமையான யுத்த நிலைமை என்பது போரிடும் இருதரப்பும் கொண்டுள்ள பலம், பலவீனம், அடுத்தகட்டப்போர் நடவடிக்கைக்கான இருதரப்பினதும் முஸ்தீபுகள், சமகாலப் போர் நடவடிக்கைகளின் விளைதிறன்கள் என்பவற்றின் மொத்தமான மதிப்பீடாகும். பகுதிகளாக அமைந்து அனைத்துப் போர் நடவடிக்கைகளினதும் கூட்டு மதிப்பீடாகவே முழுமையான யுத்த நிலைமை கணிப்பீடு செய்யப்படுகிறது.

ஆயினும் யுத்தத்தில் சில சந்தர்ப்பங்களில் ஒருபகுதிப் போர் நடவடிக்கையே முழுமையான யுத்த நிலைமையைத் தீர்மானிக்கவல்லதாயும், அதன்மூலம் யுத்தத்தின் பின்னணியாகவுள்ள அரசியலைத் தீர்மானிக்கவல்லதாயும் மாறுவதுண்டு. அதேபோன்று சில சந்தர்ப்பங்களில் பலபகுதிப் போர் நடவடிக்கைகள் யுத்தத்தின் முழுநிலைமையைப் பாதிக்காததாக, செல்வாக்குச் செலுத்த முடியாததாக அமைவதுண்டு.

96இல் கண்டிவீதியை (எ9) கைப்பற்றுவதற்காக 'சத்ஜெய' 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கைகள் தொடங்கப்பட்டதிலிருந்து இவ்வாண்டின் நடுப்பகுதிவரை வன்னிச் சமர்க்களமே முழுமையான யுத்த நிலைமையை தீர்மானிக்க வல்லதான தீர்க்கமான போர்முனையாக விளங்கியது.



www.tamileelamarchive.com



யுத்தத்தின் எதிர்காலத்தை தீர்மானிக் கவல்ல மூலோபாய முக்கியத்துவம் வாய்ந் ததாக வன்னிச்சமர்க்களம் விளங்கிய தனாலும், இதனால் இருதரப்பு போர் வலுக் களும் வன்னியிலேயே மையப்படுத்தப் பட்டிருந்ததனாலும், வன்னிப்போர்முனை முழுமையான யுத்த நிலைமையை தீர்மா னிக்கும் தீர்க்கமான பகுதியாக மாறியமை யதார்த்தமானதே.

இதனால் ஏற்பட்ட நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு இந்த நிலைமையை மாற்ற இரு தரப்பும் எடுத்த பிறபகுதிப் போர் நடவடிக் கைகளான எத்தனங்கள் முழுமையான யுத்த நிலைமையைப் பாதிக்கவில்லை. அல்லது அவ்வாறு அமையக் கூடியவாறு இருதரப் பாலும் பிற போர் முனைகளை தீர்க்கமாக முன்னெடுக்கமுடியவில்லை. வன்னிச்சமர்க் களத்தில் மூலோபாய முக்கியத்துவத்தினால் பிறவற்றுக்கான காத்திரத்தன்மையும் அற்றுப் போயிருந்தது.

இத்தகைய நிலையில் 'ஜெயசிக்குறுய்' மாங்குளம் வரை முன்னேறியபோது யுத்தத் தில் இராணுவத்தரப்பு மேலோங்கியிருந் ததான கணிப்பு இருந்தது. அதுவே ஓயாத அலைகள்-2இல் கேள்விக்குள்ளாகிவிட, புலிகள் நடத்திய ஓயாத அலைகள்-3 உடன் புலிகளின் கை யுத்தத்தில் மேலோங்கி விட் டமை திட்டவட்டமாக விளக்கப்பட்டிருந்தது.

ஆயினும், யுத்தத்தின் முழுநிலைமையை வன்னிப் போர்முனையே தீர்மானிக்கும் நிலையிலிருந்து மாற்றம் நிகழக்கூடியவா றான சூழல் அமையவில்லை.

புலிகளுக்கு தீர்க்கமான பிறபகுதிப் போர் முனையைத் திறப்பதற்கு ஆளணி வலுப் போதாமை இருப்பதாக இராணுவம் கணித் தது. அதேநேரம் வன்னியில் புலிகளால் தொடங்கப்படக்கூடிய போர்முனைகளை ஊகித்து, அதை எதிர்கொள்வதற்காக இரா ணுவம் தனது போர்வலுக்களை இப்பகுதி களை நோக்கி ஒருமுகப்படுத்தியது. மேலும், புலிகளின் கடல்சார் நடவடிக்கைகளை திட்ட வட்டமாக தடுத்து நிறுத்துவதனூடாக புலி களின் போர்வலுவைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கமுடியும் என்று நம்பியது.

இவற்றின் மூலம் வன்னியிலிருந்து போர் விரிவடையாதவாறு தமது தற்காப்பை உறுதி செய்வதுடன், மேற்கொண்டு திட்டமிடவும், செயல்படவும் முடியும் என்ற நம்பிக்கையில் இராணுவம் செயலில் இறங்கியது.

சாலையில் இருந்து அளம்பில் வரையான கடற்பிராந்தியத்தை கட்டுப்படுத்துவதன் ஊடாக புலிகளின் கடல்சார் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தமுடியும் என்ற நம்பிக்கையுடன் கரையை அண்டிய கடற்பிரதேசத்தில் நிரந் தரமாகப் போர்ப் பீரங்கி கடற்கலங்களையும், அதிவேகப்பீரங்கி விசைப்படகுகளையும் நிறுத்தியது. இது ஏறத்தாழ கடலில் ஒரு தொடர் காவலரண் வரிசையை உருவாக் கியது போன்றது. கடற்புலிகளுக்கு எதிரான இந்நடவடிக்கைக்கு 'வர்ணகிரண' நடவ டிக்கை என்று கடற்படை பெயரிட்டது.

இந்த 'வர்ணகிரண' வியூகம் அமைத்த தன்பின்பு புலிகள் உயரக் கடலேற முடியாது என்ற நம்பிக்கையுடன் படைத்தரப்பு இருக்க 16.07.2001 அன்று கடற்புலிகள் பருத்தித்துறை உயரக் கடலில் வந்துகொண்டிருந்த கப்பல் தொடரணி மீது ஒரு முற்றுகைத் தாக்குதலை நிகழ்த்தினர். அந்தக் கடற்பெருஞ்சமரில் இரு டோறாக்களை மூழ்கடித்தனர். துருப்புக்களை ஏற்றிவந்த கப்பலில் மக்களும் ஏற்றப்பட்டுள் ளனர் என்ற சந்தேகத்தில் இறுதியில் துருப் புக் கப்பல் மூழ்கடிக்கப்படாது விடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கடலில் கடற்புலி களின் தொடர்ச்சியான தாக்குதல்களை கடற்படை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. 20.10.2001 அன்று பருத்தித்துறை கடற்பரப் பில் இராணுவ விநியோகத்திற்காக எண் ணெய்க்கப்பல், அதன் பாதுகாப்பு வியூகங் களை உடைத்தெறிந்து முன்னேறிய கடற்புலி களால் தாக்கியழிக்கப்பட்டது. இந்த இரு பெருந்தாக்குதல் நடவடிக்கைகளுக்கிடையில் ஐந்து கடற்சண்டைகள் நிகழ்ந்திருக்கின்றன.



www.tamileelamarchive.com



இந்த தாக்குதல்களால் படைத்தரப்பு அதிர்ந்துபோயுள்ளது. காரணம் புலிகள் 'வர்ணகிரண' நடவடிக்கை வியூகத்தையே உடைத்து முன்னேறுகின்றனர் என்பது ஒன்று. ஆழ்கடலில் செல்லும் கப்பல் தொடரணி மீது அதன் பாதுகாப்பு வியூகங்களைப் பிளந்து வெற்றிகரமாக தாக்குதலை நடத்தி தளம் திரும்ப முடிவதென்பது ஆழ்கடல் சமருக்கு கடற்புலிகள் தமது கலங்களையும், போர் வலுவையும் தயார்ப்படுத்தி அதில் காலூன்றும் வலுவிற்கு வளர்ந்து வருகின்றனர் என்பது மற்றொன்று.

மேலும் இதனால் யாழ்ப்பாண இராணுவ நிலைகொள்ளல் எத்தகைய விளைவைப் பெறநேரும் என்ற வலுவான கேள்வி இன்னொருபுறம். இப்படி வன்னிச் சமர்க்களத்தில் புலிகளின் வலுவைக் கட்டுப்படுத்த எடுத்த 'வர்ணகிரண' கடல்நடவடிக்கை புலிகளின் ஆழ்கடல் பிரவேசத்தை தடுத்து நிறுத்த முடியாமல் இத்தகைய வேள்விகளை எழுப்பி நிற்கின்றது.

அடுத்தது வன்னிச் சமர்க்களத்திற்கு அப்பால் புலிகளின் தலைமைத்துவம் எடுத்த போருக்கான நடவடிக்கை.

மட்டு-அம்பாறை பகுதியில் பெரும்போர் நடவடிக்கைக்கான முன்முயற்சிகள் வலுவாகப் புலிகளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆயிரக்கணக்கிலான புதிய போராளிகளை அணிதிரட்டியமையும் எல்லைப் படை, கிராமியப்படை என்ற மக்கள் படைக் கட்டுமானங்களை உருவாக்கியமையும், மேலும் பெற்றோர்களே தமது பிள்ளைகளை தமது விடுவிற்பிற்காகப் போரில் இணைத்து வருகின்றமையும் ஒரு பெரும் போருக்கான அரசியல் எழுச்சியாகவும், அதேநேரம் பெரும் போர் நடவடிக்கைக்கான புலிகளின் தயார்ப் படுத்தலாகவும் படைத்தரப்பு இதனைக் கணிக்கிறது.

இவ்வாறே திருகோணமலையிலும் படைத் திரட்டலுடன் தமது சுதந்திரச் செயற்பாட்டுக் கான வலுவான ஒரு தளப்பிரதேசத்தை புலிகள் தக்கவைத்துக் கொண்டுள்ளனர்.

'அக்கினிகீல' (தீச்சுவாலை) நடவடிக்கை அடைந்த பாரதூரமான தோல்வி வன்னியில் புலிகள் ஓர் போர் நடவடிக்கைக்கான பலத்தையும், வளத்தையும் கொண்டுள்ளனர் என்பதைப் படையினருக்கு வெளிப்படுத்தியது. இப்பொழுது இது மேலும் வலுப்பெற்றிருக்கும் என்பதிலும் ஐயமில்லை.

இவ்வாறான நிலைமை வன்னிச் சமர்க் களமே முழுமையான யுத்த நிலைமையைத் தீர்மானிக்கவல்லதான சூழலிலிருந்து புலிகளின் பலமுனைப் போர்வலுவை மதிப்பிடவும், பலமுனைகளில் போரை எதிர்பார்க்கவும் வேண்டியதான சூழலை இராணுவத்திற்கு தோற்றுவித்துள்ளது.

கடந்த ஐந்து வருடமாக இருந்துவந்த யுத்த நிலைமையில் இப்பொழுது இத்தகையதொரு திடீர்மாற்றம் நிகழ்ந்திருக்கிறது.

வன்னிச் சமர்முனைக்கு அப்பால் ஒரு தீர்க்கமான போர்முனையை இருதரப்பாலும் திறக்கமுடியாதிருந்த சூழலில் புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தலை எதிர்பார்க்கக்கூடிய போர்முனையில் படைவலுக்களை ஒருமுகப் படுத்துவதன் மூலம் வன்னியில் தற்காப்பை உறுதிப்படுத்த படைத்தரப்பு முயன்றது. மேலும் புலிகளின் கடல்சார் நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் புலிகளின் போர்வலுவை மட்டுப்படுத்தவும், தமது தற்காப்பை மேலும் உறுதிப்படுத்தவும் முடியுமென்று படைத்தரப்பு நம்பியிருந்தது.

இன்று கடல்சார் நடவடிக்கை (வர்ண கிரண) கைமீறிப் போவது மட்டுமல்ல அதுவே யாழ்ப்பாண நிலைகொள்ளலுக்கான அச்சுறுத்தலையும் வலுவாக்கியிருக்கிறது. மேலும், புலிகளின் பல்முறைப் போர்ப்பலம் இராணுவத்தினரின் படைவலுவை ஒருங்கிணைக்கும் திட்டத்திற்குப் பதிலாக வலுவைப் பரவலாக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் அவர்களைத் தள்ளிவிட்டுள்ளது.

இத்தகைய பரவலாக்கல், திட்டவட்டமாக தற்காப்பு பலவீனத்தை உருவாக்குமே தவிர, எந்தவிதத்திலும் அது தீர்வாக அமையாது என்பதைப் படைத்தரப்பு உணர்ந்திருக்கிறது.

யுத்தநிலைமையில் ஏற்பட்டிருக்கின்ற இத்தகைய மாற்றம் செயல்பூர்வமாகும் நாளையெண்ணி படைத்தரப்பு மிகுந்த அச்சம் கொண்டிருப்பதாக தென்னிலங்கைப் பத்திரிகைகள் வெளிப்படுத்தியிருக்கின்றன.

இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதே இராணுவத்தரப்பு எதிர்நோக்கியுள்ள இன்றைய சவாலாகும். அதற்கு போரில் அமைதியும், அவகாசமும் அவர்களுக்குத் தேவைப் படலாம். மாற்றுவழிகள் பற்றி படைத்தரப்பு தீவிரமாக ஆராய்ந்தும், பரிசீலித்தும் வருகிறது. புலிகளின் தளப்பிரதேசத்தில் ஆழ ஊடுருவித்தாக்குவதன் மூலம் புலிகளின் படைவலுவை தற்காப்பினுள் தேக்கமுடியுமா என்ற முயற்சியிலும் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். ஆயினும் மாற்றம் திட்டவட்டமானதும் தீர்மானகரமானதுமான மாற்றமாக நிகழ்ந்து வருகிறது என்பதை அவர்கள் உணரத்தவறவில்லை.

இது தமிழ் மக்களின் மகிழ்ச்சிக்கு மட்டுமல்ல, எழுச்சிக்கும் உரிய செய்தியல்லவா!



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# போராளிகளின் படைப்புக்கள்

## உள்ளத்தில் மலர்ந்தவை.

உள்ளத்தில் மலர்ந்த தேசப்பற்றால்
ஊருக்குள் புகுந்து பகைவிரட்ட
உலகம் என்றும் வியக்கும்
உன்னத போராட்டம்
உறுதி மிகுநெஞ்சின்
உணர்வுகளைத் தூண்டியது
உடலென்ற சிகரத்தில்
ஊடுருவும் சன்னத்தால்
ஒனங்கள் வந்தாலும்
உயிரென்று உள்ளவரை
உறங்காது எம் கண்கள்
உலகத்தில் தமிழ் ஓங்க
உன்னத இலட்சியத்தால்
உருக்குலையா மனங்கொண்ட
உத்தமனின் வழி அமைப்பில்
உறுதியுடன் களம் விரைவோம்.

போராளி.
தமிழ்மாறன்.

## யுத்தம்

செந்தமிழர் நிலம் எங்கும்
மலர்ந்திருக்கும் யுத்தம்
கயவரின் வெறித்தனத்தால்
உறங்குவதற்கே அச்சம்
பல இழசின் ஓசையினால்
பாரெங்கும் பெரும் சேதம்
குண்டுகளின் அறுவடையால்
குடியிருக்க பதற்றம்
அன்றாடம் உணவருந்த
அவனியிலே கஷ்டம்
தமிழ் இனம் அடங்கி
இருப்பதில் இனி ஏதும் இல்லை அர்த்தம்
செந்தமிழன் தேசம் எங்கும்
மீட்பதற்கே சித்தம்
இனி சிந்துவோம் சுதந்திர இரத்தம்.

போராளி
தமிழ்மாறன்.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மாவீரர் ஓவியம்

பரதீபகுமரன்



**வா**கனம் புழுதியைக் கிளறியபடி போய்க்கொண்டிருந்தது. மேலெழுந்த புழுதிக்கூடாக கண்ணனும் இன்னும் சிலரும் கையசைப்பது தெரிந்தது.

எல்லோருக்குமாக கைகளை உயர்த்தி அசைத்தேன். புகைபோல் அடர்ந்து எழுந்த புழுதியில் வாகனம் கலந்து மறைந்தது.

துகள்களாகத் தெறித்த மண்ணுக்காக ஒருமுறை கண்களை அழுத்தித் துடைத்தேன், மனதினுள் ஏதோ ஒன்று தவித்தபடி அலைந்தது. நிலைகொள்ளாத துயரின் தவிப்பு அது.

எண்ண சிரிப்பும் வந்தது. இதென்ன புதுசா?

சண்டைக்குப் போறாங்கள், அவ்வளவுதான்.

நானும் அந்த வாகனத்துள் ஒருவனாக நின்றிருந்தால் இந்தத் தவிப்பு இல்லை.

அணிகள் பிரிபடும்போது நான் தொடர்ந்தும் இங்கேயே நிற்கவேண்டி வந்து விட்டது.

கையசைத்து வழியனுப்புவது மனதைத் தின்றுவிடும் வேதனை. பொழுது சரிந்து கொண்டிருந்தது. மங்கலான அந்த அந்தி நேரத்தில் வாகனம் போன பின்னும் அந்த இடத்தில் தனியே நிற்பது ஆறுதலாகவும் அதே நேரம் அர்த்தமற்றதாகவும் தோன்றியது.

பொழுது மங்குகின்ற அனேகமான மாலை நேரங்களில் எங்கள் இடத்திலிருந்து இந்தச் சந்தி வரை நானும் கண்ணனும் வந்து திரும்புவோம்.

இருவருக்குமான மாலைநேரப் பொழுதுபோக்கு அது, இன்று நான் மட்டும் தனியாக அந்த மணற்பாதையினூடாக நடக்கத் தொடங்கினேன்.

இரண்டு மைல் தூரம் நடக்கவேண்டும். அதன் பின்தான் எங்கள் நிலைகள் வரும்.

கால் புதையும் மணலில் நடப்பது சிரமம்.

ஆனால் கண்ணனுடன் நடந்தால் தூரம் மறைவது தெரியாது. எவ்வளவு தொலைவும் அவனுடன் நடக்கலாம். சலிப்போ, ஓய்வோ இல்லாத உடலும் மனமும் அவனுக்கு. சின்ன விடயத்தையும் ஆயிரம் இழைகளால் பின்னி அழகான கதையாக்குவான். அவன் சொல்லும் கதையைவிட, அவனது பேச்சின் வியூகங்களும், ஏற்ற இறக்கங்களும், கண்ணசைவும்தான் ரசிக்க வைக்கும். எப்போதுமே நான் பேசும் நேரங்கள் குறைவு. வார்த்தைகளை எனக்குள்ளேயே கோர்த்துக் கோர்த்து அழித்துக் கொண்டிருக்க, மூச்சுவிடாது எனக்காகவும் பேசி முடிப்பான்.

அடிக்கொரு தரம் "மாறன் அண்ணா டேய்" என்பான். அந்த அழைப்பின் வேகத்திலும், உச்சரிப்பிலும் அவனுக்கு என் மீதுள்ள அன்பின் மிகுதிதான் தெரியும்.

தன்னைவிட இளைய போராளிகள் மீது மிகுந்த அன்புள்ளவன். அநேகமான



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நேரங்களில் அவர்களோடு சேர்ந்து கும்மாளமடித்தபடி இருப்பான். அப்ப சொல்லுவான் 'எனக்கு எத்தினை தம்பியவை பாத்தியா மாறன் அண்ணா' என்று பொறுப்பும், பாசமுள்ள ஒரு மூத்த சகோதரன் போலத்தான் அவர்களோடு பழகுவான்.

எங்கள் அணியில் எல்லோருக்குமே கண்ணனை மிக நன்றாகப் பிடிக்கும்.

இந்தப்பகுதிக்கு வந்த இந்த மாதங்களில் நாங்கள் இருவரும் சேர்ந்தேதான் இருந்தோம்.

இது கடற்கரைப் பிரதேசம். ஒதுங்க நிழலில்லாத வெட்டைகளும், வளர்த்தியில்லாத சோடைத் தென்னைகளும் கொண்ட மணல் நிலம். அனலாகக் கொதிக்கின்ற பகல் எப்போது முடியும் என்றிருக்கும். பகற்பொழுது ஒவ்வொன்றும் நீண்ட..... சுமையாகி அழுத்தும், உப்புக்காற்றின் வெம்மையில் உடல் எரியும்.

அலைகளின் இரைச்சலைவிட எந்தச் சந்தடியும் இருக்காது. அலைகள் ஓங்கி அடித்து நீர் தெறிப்பது எங்கள் நிலைகளிலிருந்து பார்க்கத்தெரியும்.

சிதறுகின்ற நீர்த்துளிகளின் குளிர்மை எங்கள் மீதும் பரவுவது போலிருக்கும்.

எங்கள் நிலைகளின் முன்பாக கடலோடு வட்டமான பாறை ஒன்று இருக்கிறது. கண்ணனுக்கு மிகப்பிடித்தமான இடம். 'இதில நின்று நான் ஒரு போட்டோ எடுக்க வேணும்' என்பான். பாறையின் பின்புறமாக அலைகள் பரவி எழுந்து விழுவது மிக அழகு. பூ விரிவது போல பாறையின் பின்னிருந்து அலைகள் உயர்ந்தெழுந்து சிதறும்.

கண்ணன் மிகுந்த ரசனையோடு அதைப்பார்த்துக் கொண்டிருப்பான். ஓயாத அலைகள் சண்டையில் கையிலும், தலையிலும் காயப்பட்டான். தலைக்காயம் இன்னும் முழுதாக மாறவில்லை பகல் நேரங்களில் வெய்யில் ஏற ஏற தலை வலிக்கத்தொடங்கும். அப்போதும் ஏதாவது கதைகூறி சிரித்துக் கொண்டிருப்பான். வலிதாங்க முடியாதபோது முகம் வேதனையில் நெளியும்.

என்னடா என்றால்-

ஒருமுறை அமைதியாக என்னைப் பார்ப்பான். வலிக்குது என்று சொல்வானோ என எண்ண....மத்தியானம் மீன் சமைப்பமோ என்பான் மிகச்சாதாரணமாக. அவன் புரிந்துகொள்ள முடியாதவன் இல்லை. எந்த வேதனையும், வலியும் தன்னுடனேயே முடிய வேண்டும் என்பதில் உறுதியானவன்.

தென்மராட்சிச் சண்டையின்போது அவனறியாத்துயர் எதிர்பாராமற் சூழ்ந்த பின்னும், அதே சூழலில், அந்தக் களமுனையில் எந்தத் தளர்வுமின்றி தீவிரமாகச் செயற்பட்டவன். சிரிப்பற்று இறுகிய முகம்தான் அங்கிருந்த பொழுதுகளில் அவனது துயரைச் சொல்லும்.

அதுதவிர வேறெப்படியும் தன்னை வெளிக்காட்டாதவன். இந்த உறுதி ஒவ்வொரு போராளியிடமும் இயல்பாகவே வந்து விடுகிறதோ?

அப்படியான உறுதிகொண்டவர்கள்தான் போராளியாகிறார்களோ என்னவோ?

ஆனால் அந்த அசையாத உறுதியின் ஆழத்தில் மென்மையான மனம் ஒன்று துடித்துக்கொண்டிருக்கும்.

இந்தத் தேசத்தை நேசிக்கச் செய்த மென்மை, அவர்களைப் போராளிகளாக்கிய மென்மை அது.

யார் கண்ணிலும் தெரியாத அந்த மென்மையினுள் ஓராயிரம் நினைவுகள் புதைந்திருக்கும்.

கண்ணனின் மனம்கூட அப்படித்தான்.

தன் உறவுகள் பற்றி ஏதும் பேச்சுவந்தால் அவன் விழிகளின் ஆழத்தில் எழில் சுமந்த பரவசம் மின்னலாகப் பரவிச் செல்லும். முடிவில் உயிரைப் பிழிகின்ற துயரின் வலியையும் அந்தக்கண்கள் சொல்லும். அவன் அவர்கள் மீது கொண்டிருந்த நேசத்தின் உச்சத்தைக் காண்கின்ற நேரமது.

இந்தச்சண்டைக்குத் தயாராகி என்னிடம் விடைபெறும்போது 'அண்ணா என்ரை தம்பியை சந்திக்கேக்க என்னைப்பற்றிச் சொல்லுங்கோ, அவனுக்கு என்னை நினைவிருக்குமோ தெரியேல்ல. ஆனால் அவன்ர நினைவோடதான் கடைசிவரைக்கும் நான் இருந்ததை சொல்லுங்கோ' என்றான். குரல் அடைத்து பேச்சு தடுமாறியது 'நீயும் நானும் சேர்ந்துதான் தம்பியை சந்திப்பம்' என்றேன் அவனை அணைத்து முத்தமிட்டபடி. அவர்களின் குடும்பத்தில் உயிரோடு தப்பியது அந்தத் தம்பி ஒருவன்தான். அவனும் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியினுள் அவர்களின் உறவினர்களோடு இருக்கிறான். புன்னகைக்குள் தன்னைப் புதைத்துக்கொள்கின்ற அவனது மனதுள் எரிவது துயரின் தீ.

ஓயாத அலைகளின் தென்மராட்சி மீண்டிருந்த நேரம், எமது படையணிகளின் கட்டுப்பாட்டில் மீண்டும் அந்த மண். அந்த நேர மகிழ்வை அவனால் எப்போதுமே வார்த்தைகளில் சொல்ல முடியாது.

அவன் வாழ்வின் உச்சமான சந்தோசமாக அது இருந்ததோ? உண்மையில் அவ்வாறுதான் தோன்றியது.

மனம் நிறைந்த மகிழ்வின் பரபரப்பில் தவித்தான்.

தன் நண்பர்கள் ஒவ்வொருவருக்கும் சொல்லிக்கொண்டிருந்தான்.

"எங்கட ஊரைப்பிடிச்சாச்சுது. நான் வீட்டுக்காரரைப் பார்க்கப்போறன்" மனம் கொள்ளாத உற்சாகம் பேச்சாய் செயலாய் அவனிலிருந்து வழிந்தது.

"நிச்சயமா அம்மா என்னை அடையாளம் காணமாட்டா. இது ஆர் என்றுதான் கேட்பா.

தம்பியாக்கள் வளர்ந்திருப்பாங்கள். சின்னவனுக்கு என்னை நினைவிருக்குமோ தெரியேல்ல.

நான் இயக்கத்துக்கு வரேக்க அவனுக்கு நாலு வயது. அம்மா கண்டால் கட்டிப்பிடிச்சு ஒப்பாரிதான். அப்பா 'அப்பன்' எண்டிட்டு மெல்லமாகச்சிரிப்பார். அப்ப எனக்கு மீசைகூட வளரேல்ல. இப்ப அப்பாவை விடவும் உயரமா வளர்ந்திட்டன். தாத்தா கையைப் பிடிச்சுக் கொஞ்சிப்போட்டுக் கும்பிடுவார்" மனம் இவைகளையே நினைத்துக் கொண்டிருந்தது.

இயக்கத்துக்கு வந்த இந்த ஏழு வருடங்களில் வீட்டுக்காரரைக் காணவில்லை.

அவர்களைக் காணவேண்டும் என்கின்ற தீராத அவா அவனுள் எழுந்தபடி இருக்கும்.

தன் வாழ்வின் எல்லாவற்றையும்விட தன் குடும்பத்தின் மீது மிகுந்த நேசம் கொண்டவன்.

ஆனால் எல்லாத் துயரங்களிற்குமான தீர்வாக, அச்சமற்ற வாழ்வுக்காக, போராளியாக மாறுவதே முடிவெனத் தோன்றியது. அதனால் உறவுகளிடமிருந்து வேதனையோடு பிரிந்தவன்.

ஒவ்வொரு இரவிலும் பணிகள் முடித்து கண்மூடும்போது அம்மாவின் முகமும் கண்ணீரும் நினைவில் வரும். எப்போதேனும் காண்பேனா? விடைதெரியாத கேள்விதான் அவனுள் எழும்.

ஒவ்வொரு முறை சண்டைக்குத் தயாராகும்போதும் மனதினுள் தன் உறவுகள் ஒவ்வொருவரிடமும் விடைபெறுவான். தான் வீரச்சாவடைந்தால் கொடுக்கவென வீட்டாருக்கு எழுதிய கடிதமொன்று எப்போதும் அவன் பெட்டியில் இருக்கும். அவனுடைய எண்ணங்கள் எல்லாவற்றையும் கடந்து வந்துள்ள இந்தக் காலம் கைக்கெட்டிய கனவு போலவே இருந்தது.

சில நாளில் அவனது அணி தென்மராட்சிக் களமுனைக்கு அனுப்பப்பட்டது. அவன் மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்தது அதைத்தான். அங்குபோய்ச் சேரும் வரை இயல்பாக இருக்க நினைத்தாலும் கட்டுப்படுத்த முடியாத பரபரப்புணர்வு தடுமாற வைத்தது. மீளக்காண முடியாதென நினைத்த அவனது ஊர், அவனது உறவுகள்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மூச்சுவிட அவகாசமில்லாத ஷெல்லடி. அதனுள் நகர்ந்து முன்பு நின்ற அணிகளுடன் அவனது அணியும் இணைந்து கொண்டது.

ஊர் சிதைந்து கிடந்தது.

வீடுகளில் அநேகமாக ஆட்களில்லை.

ஆமியின் 'மல்ரிபெரல்' அடியில் தப்பி வன்னிக்கும் இராணுவப்பகுதிக்கும் போனவர்களைவிட ஓரிருவர்தான் வீடுகளிலிருந்தனர்.

அவன் நினைவில் சுமந்திருந்த ஊர் எந்த அடையாளங்களுமே இல்லாது அழிந்து கிடந்தது. உடைந்த வீடுகள். மரங்கள் முறிந்து மூடிய வீதிகள். எல்லா நினைவுகளையும் மணலுள் புதைத்துவிட்டு உருவமற்று சிதைந்து கிடந்த மணல் ஒழுங்கைகள். முன்பெல்லாம் மனம் சோர்கின்ற நேரங்களில் ஊரின் நினைவுகளைத்தான் தன்னில் மெல்லப்படரவிடுவான். உறவுகள், வீடு, சின்னவயதின் சம்பவங்கள் என எல்லாம் படமாக விரியும். ஊரின் ஒவ்வொரு ஒழுங்கைகளாலும் மனதால் நடந்து வருவான்.

அந்த நினைவுகளிலேயே எல்லாச் சுமைகளையும் தாங்குகின்ற ஆற்றல் அவனுள் பெருகும்.

இன்று எல்லாமே கனவின் நிழலாகி உருக்குலைந்து கிடந்தது. நெஞ்சுள் வெறுமையாகி விழுந்தது. வீட்டுக்காரர் பற்றி எதுவும் அறிய முடியவில்லை. அவர்கள் நின்ற இடத்திலிருந்து அவனது வீடு மூன்று மைல் தூரத்திலிருந்தது. அந்தப்பகுதி வீடுகளில் ஆட்கள் யாரும் இல்லை என முன்னர் அங்கு போய் வந்திருந்த போராளிகள் கூறினர். இந்தப்பகுதியில் அவனை அடையாளம் காணக்கூடியவர்களாக எவருமில்லை.

அப்பாவின் பெயர் சொல்லி விசாரித்தபோது இயக்கம் அறிவித்தபோதே வெளியேறி இராணுவப்பகுதிக்குள் போய்விட்டதாக சிலர் சொல்லினர். நல்ல ஷெல்லடிக்குள் கோயிலில் இருந்ததாக வேறொருவர் சொன்னார்.

எதையும் உறுதிசெய்ய முடியவில்லை. முன்பே அந்தப் பகுதிக்கு வந்திருந்த மற்றொரு போராளியோடு தங்கள் வீடிருந்த இடத்திற்கு நடந்து வந்தான். வழியிலுள்ள ஒவ்வொரு வீட்டையும் காட்டி இதுவா? இதுவா? என்று கேட்டபடி வந்தான் அந்தப்போராளி. ஷெல்லடியில் வீடுகளுக்குள்ளேயே இறந்து கிடந்தவர்களை தாங்கள்தான் எடுத்துப் புதைத்ததாகச் சொன்னான். அவனது கதைக்கு தலையசைத்தபடி வந்த கண்ணனுக்கு ஏனோ உடல் பதறியது.

பழகிய பாதைகளில் பாதம் படப்பட தனது சின்னவயதின் காலத்தினுள் புகுந்துவிட்டதாகவே தோன்றியது. யாரும் இருக்கப்போவதில்லை என்பது தெரிந்தாலும் அறிமுகமான வீடுகள் ஒவ்வொன்றையும் கண்கள் தடவியபடி வந்தன. அவன் நினைத்தபடியே அவர்களின் வீடும் உடைந்திருந்தது. வீட்டினுள் நுழைந்தபோது "இஞ்சை தம்பி வாறான்" என்ற தாத்தாவின் குரல் அவனுள் ஒலித்தது.

வீட்டின் முன்பகுதியோடு இணைந்திருந்த கடதாசிப்பூமரப்பந்தல் சரிந்து மரம் கீழே கிடந்தது. முன்னேநின்ற வேப்பமரம் முறிந்து வீட்டினுள் உதிர்ந்த இலைகளோடு கிளைகள் கிடந்தன. தாத்தாவின் ஈசிச்சேர் முறிந்து ஓரமாகக் கிடந்தது. வீட்டின் முன் கதவுகள் திறந்து கிடந்தன.

உள்ளே நுழையும்போது சமையலறைக்குள்ளிருந்து அம்மா வரக்கூடும் என்று தோன்றியது. சாமம் கடந்த பின்னும் "காட்ஸ், கரம்" என நாங்களிருந்து விளையாடும் கூடம் வெளித்துக்கிடந்தது. எந்தெந்த இடங்களில் இருந்து விளையாடுவோம் என்பது இப்போதும் ஞாபகம் இருந்தது. வீட்டைச் சுற்றி நடந்து வர, உள்ளங்கால்களைச் குளிரச்செய்கின்ற அந்த வெண்மணல் முற்றத்தில் அமர்ந்திருக்க மனம் ஏங்கியது.

ஆனால் அவனைக் கட்டியணைத்து வரவேற்கவும், கண்ணீர் சிந்தவும் அங்கு யாரும் இல்லை.

அந்த வீட்டுடன் அவனுக்கு எந்தத் தொடர்புமில்லை என்பதாகத் தோன்றியது.

வீட்டினர் எங்கேனும் உயிரோடு இருப்பார்கள் என்ற நம்பிக்கையின் இழையைப் பற்றியபடி பரபரப்பான அந்தக் களமுனையில் தன் பணிகளில் சோராது உழைத்தான். சில நாட்களின் பின் அவன் குடும்பத்தவர்களைத் தெரிந்த போராளி ஒருவன் மூலம் அந்தச் செய்தி கிடைத்தது. நம்பிக்கையின் இழை அறுந்தது.

எல்லாத் துன்பங்களையும் யாரின் நினைவுகளுடன் சுமந்தானோ? எல்லாமே பொய்யென்று ஆகின.

இளவயதையும், உறவுகளையும் அழிவின் பேய் தின்றுவிட்டாதா?

எல்லாமே காலத்தோடு அள்ளுண்டு போய்விட்ட நினைவுகள் போலிருந்தது.

கோயிலில் விழுந்த ஷெல்லில் கடைசித் தம்பியைத் தவிர அவன் குடும்பத்தில் யாரும் மிஞ்சவில்லை. தம்பியை வேறுவழியின்றி நெருக்கடியான நிலையில் இராணுவப்பகுதிக்குள் சென்ற உறவினர்கள் அழைத்துச் சென்றுவிட்டனர்.

ஏன் இப்படி நடந்தது? எத்தனை நம்பிக்கையோடும், உற்சாகத்தோடும் வந்தான்.

மிகப் பரிதாபமானவனாக தன்னை உணர்ந்தான். கண்ணீரால், வெறும் வார்த்தைகளால் அழிந்துவிடமுடியாத துயரம் நெஞ்சுள் தீயாகியது.

கண்ணீரால் கரையாது இறுகிய அவனது மனதின் துயரம் என்னுள்ளும் புகுந்து கொண்டதாகத் தோன்றியது.

எங்கள் மனிதர்கள் எல்லோரும் அனுபவிக்கும் துயரங்களுக்கான பதிலை, நாங்கள் இழந்தவைகள் எல்லாவற்றுக்குமான பதிலை எப்படிச் சொல்லப்போகிறோம்? எல்லாவற்றையும் சமன் செய்யக்கூடியதாக எல்லாவற்றையும் அர்த்தப்படுத்தக்கூடியதாக பொருள் நிறைந்த பதிலொன்றுக்காகவே நாங்கள் காத்திருப்பதாகத் தோன்றியது.

அலைகள் அந்தப் பாறையின் மேலாக ததும்பித் தெறித்துக் கொண்டிருந்தன.

நிலவொளியில் அவற்றின் வெண்ணிறச் சிதறல் கண்ணனின் புன்னகை போல பளிச்சென மின்னியது. எங்கள் துயரங்கள் தீர்ந்தபொழுதொன்றில் மீண்டும் ஒருநாள் இந்த மணற்பரப்பிலிருந்து என்னோடு கதைக்க அவன் வருவான்.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பலஸ்தீனக் கவிதைகள்

## மரண தண்டனை

இரவில் படையினருக்குக் கட்டளை வந்தது
எங்கள் அழகிய கிராமம்
செய்த்தாவை அழித்திடுமாறு

செய்த்தா
மரங்களின் மணமகள்
முகை அவிழும் மலர்ச் சோலை
காற்றுகளின் தீப்பொறி

இருளில் வந்தனர் படையினர்
கிராமத்தின் புதல்வர்
மரங்கள்
வயல்கள்
மலரா முகைகள் அனைத்தும்
புகலிடம் தேடி
செய்த்தாவை இறுகப்பற்றி
அணைத்து நின்றன.

'கட்டளை இதுதான்
விடியமுன்னர் செய்த்தா அழிக்கப்படும்
எல்லாரும் வெளியேறலாம்'
ஆயினும் நாங்கள்
இறுகப்பற்றி அணைத்து நின்றோம்
பாடினோம், செய்த்தா எங்கள் பூமி
பூமியின் இதயம்
நாம் அதன் கிளைகள்

எனினும் மக்கள் வீழ்ச்சி அடைந்தனர்
சிறிது நேர எதிர்ப்பு
பின்னர் இரவுகளின் எல்லை தாண்டி
அழிவுற்ற ஒரு அணைப்பாக மட்டும்
செய்த்தா எஞ்சி இருக்கிறாள்

வினாடிகளில் அவள் கற்குவியலானாள்
ஒரு சிறு அடுப்புக்கூட மிஞ்சவில்லை
மனிதரும் கற்களும் அரைபட்டு
புழுதியாய் மாறினர்
சாத்தியமற்றதின் வெளிச்சத்தில்
என்றைக்குமாகத் தூவிக் கலந்தனர்

இப்போது மாலை வேளைகளில்
எமது காற்றின் பாடலில்
சமவெளிகள் மேலாக
தன் கருஞ்சிவப்புத் தீப்பொறிகளைக்
கனலவிட்டவாறு செய்த்தா எழுகிறாள்
காலையில் செய்த்தா
வயல்களுக்குத் திரும்புகிறாள்

டியூலிப் மலர்களைப் போல்
செய்த்தாவில் இரவுதான் காலை
இரவுதான் காலை

சுலஃபா ஹ்ஜாவி

## பாடகன்

ஒரு சிறிய மாலைப் பொழுது
ஒரு புறக்கணிக்கப்பட்ட கிராமம்
இரண்டு தூங்கும் விழிகள்
முப்பது வருடங்கள்
ஐந்து யுத்தங்கள்
காலம் எனக்காக ஒரு கோதுமைத் தாழை
ஒளித்து வைக்கிறது
பாடகன் பாடுகிறான்
நெருப்பையும் அன்னியர்களையும்

மாலைப் பொழுது
மாலைப் பொழுதாகவே இருந்தது
பாடகன் பாடிக் கொண்டிருந்தான்
அவர்கள் அவனை விசாரித்தனர்
நீ ஏன் பாடுகிறாய்?
அவர்கள் அவனைக் கைது செய்கையில்
அவன் பதில் கூறுகிறான்
ஏனெனில் நான் பாடுகிறேன்

அவர்கள் அவனைச் சோதனையிட்டனர்
அவனது மார்பில் அவனது இதயம் மட்டும்
அவனது இதயத்தில் அவனது மக்கள் மட்டும்
அவனது குரலில் அவனது துயரம் மட்டும்
அவனது துயரத்தில் அவனது சிறைச்சாலை
மட்டும்
அவனது சிறைச்சாலையில்
அவர்கள் தேடுதல் நடத்தினர்
சங்கிலியில் பிணைப்புண்டு கிடக்கும்
தங்களை மட்டுமே அங்கு கண்டனர்

(Poem of the land) (நிலத்தின் கவிதை) என்ற நீண்ட கவிதையின் ஒரு பகுதி)

மஹ்முட் தர்வீஷ்

முற்றும்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சந்திரன்,
கனடா,
05-09-2001.

என் அன்புக்குரியவளுக்கு, நீ எனக்கெழுதிய கடிதத்திற்கு பதிலாகமட்டும் இதை எழுதவில்லை. எனக்கேன் இன்னமும் எழுதிக்கொண்டிருக்கிறாய் என்பதற்காய் எழுதுகிறேன். இந்தப் பதின்மூன்று வருடங்களுக்குள் எத்தனையோ எழுதிவிட்டாய் ஊரை, உறவை, உன்னுடைய சந்தோசங்களை, துக்கங்களை எல்லாம் எழுதினாய், தம்பி மாவீரனென்றும் தங்கைச்சி இயக்கமெண்டும், அப்பா செத்துப்போனாரென்றும் அம்மாவைவிட ஆருமே இல்லையென்றும் எழுதினாய், நான் என்ன செய்ய?

உனக்காக மனதுக்குள் ஒருமுறை அழுதுவிட்டுப் போகத்தான் முடிஞ்சது. அதுதான் என்னால முடியும். சோகங்களுக்குள்ளையும் சுகமாய், நீ ரீச்சரானதையும் உன்ர சினேகிதியின்ர கலியாணத்தையும் என்ர கடைசித் தங்கைச்சியின்ர சாமத்தியவீட்டு சிறப்பையும் நீ எழுதினபோது எனக்குள் சின்னதாய் ஒரு ஆறுதல்.



நீங்கள் ஊரை விட்டு ஓடிப்போனதை, நாட்டில நடக்கிற சண்டையை, சாப்பிடுற பொருளுக்கும் அரசாங்கம் தடை போட்டு வச்சிருக்கிதை, 'ஓயாத அலை'யில ஆமிக்கு விழுந்த அடியை, புதிசா இயக்கத்தில சேருகிற பொடியள, எங்கட தேசத் தலைமை மீதான நேசத்தை, இப்போதும் ஊரை, நாட்டை, அதின்ர உன்னதத்தை நீதான் எனக்கு உணர்த்தியிருக்கிறாய் உனக்கு நான் கடமைப்பட்டிருக்கிறன்தான்.

எழுதத் தெரிஞ்சவள் நீ, இன்னுமேன் கடிதங்களிலே அன்புள்ள சந்திரனண்ணனுக்கென்று ஆரம்பிக்கிறாய்? மரியாதையா? அல்லது நான் உன்னை மறந்து போகப் போவதை முன்னமே உனக்கு தெரிந்திருந்ததா?

எப்போதாவது ஒருமுறை உனக்காக ஒருவரி; உன்னைப்பற்றி ஒருவரி- எப்ப வருவீர்கள் என்றாவது ஒருவரி. அல்லது எவனையாவது காதலிக்கிறேன் என்றாவது ஒருவரி. என்னைப்பற்றி உனக்கு நல்லாத் தெரியும்.

எல்லாந்தெரிந்திருந்தும், இன்னுமேன் கடிதமெழுதி, கடிதமெழுதி காத்துக் கொண்டிருக்கின்றாய்.

'ஒருமுறை ஊருக்கு வாருங்கள், உங்கள் குடும்பத்தை ஒருமுறை பார்த்துவிட்டுப் போங்கள்' என்றாய். உன்னைப் பார்க்க வரச்சொல்லி எழுத உன்னால் ஏன் முடியவில்லை. கனடாவின் வாழ்வை விட்டுவர கஸ்டம் என்பாய்?

இல்லை, இல்லவே இல்லை. கனடாவிலிருந்து ஊரைக் காணவரும் காசுக்கு ஒரு தங்கைச்சிக்கு கலியாணம் முடித்துவிடலாம் என்றொரு கணக்கு, ஆரைக்குற்றம் சொல்கிறாய்? என்னையா? பெண்ணைப் பாரமாய் பராமரிப்பு காசு கேட்கும் அந்தப் பஞ்சப்பரதேசப் பழக்க வழக்கங்கள் பாழாய் போகவில்லைத்தானே நம் உரைவிட்டு.

என்றாலும் நீதான் பெருமைப்பட வேண்டும். ஊருக்குள்ளே போர் தொடங்கி உலகம் முழுவதும் பரபரக்க விடுதலைக்காய் உயிரளித்து உன்னதமானவர்கள் உன்னருகில் தானிருக்கிறார்கள். பெருமைப்படு, உன்னை நினைத்து எம் நாட்டை நினைத்து.

அன்னிய நாட்டில் என்று காலடி வைத்தேனோ! அன்றே உன்னிடமும் நான் அன்னியப்பட்டுப் போனேன். ஆருக்காக வந்தேன் என்று எனக்கு இன்னமும் தெரியாது. நிச்சயமாய் உனக்காகவோ இல்லை.

வெளிநாட்டுக்கு வெளிக்கிட்ட அண்டைக்குத்தான் உன்னட்டை என்ர விருப்பத்தைச் சொல்லுறதெண்டு முடிவெடுத்தனான். உன்ன தனிய சந்திக்கப் போறது எவ்வளவு சந்தோசம். கைகால் நடுங்க தொண்டையெல்லாம் வரண்டுபோக உன்னிடம் விடைகேட்டபோது ஞாபகமிருக்கு-

ரெண்டு வருசத்தில் வந்திடுவீங்களே என்றாய். ஏன் என்றேன். சும்மா என்றாய், என்ர விருப்பத்தைச் சொல்ல வாயெடுக்க வார்த்தையே வரேல்ல, அப்ப நீ எனக்கு தேவதையாகத்தான் தெரிஞ்சாய், அந்த உயரத்துக்கு என்னால வரமுடியேல்ல, உன்னை தொடுவதற்கு கூட, கை கூசி பயம்- ஆனால் நான் விடைகேட்டு வெளிக்கிட்டபோது என் கையைப்பிடித்தாய் ஆகாயத்தில் நான். உயர்ந்து போனேன். போகாமல் நில்லுங்கோ என்றாய். வருவேன் என்றேன் நான். அதை நான் சொல்லாமல் விட்டிருக்கலாம் என்று இப்ப நினைக்கிறன்.

அந்த நேரம் எனக்கெல்லாம் தெரிஞ்சிருந்தது நீ என்னை ஆழமாய் நேசிக்கிறாய் என்று, அப்ப கூட நான் உன்னட்டை கேக்கேல்ல, கேக்கிறதுக்கு என்னட்டை என்ன தகுதியிருக்கு, ஆனால் நீயும் என்னட்டை கேக்கேல்ல. நானும் உன்னட்டை சொல்லேல்ல, அது அப்படியே போகட்டும்.

உனக்காக ஒருநாள் ஒருநேரம், இங்க வாழ்ந்திருக்கிறனா இல்ல அது இல்ல நீ அனுப்பி வைத்த போட்டோக்கள், அறைமுழுவதும் பரவி நிறைந்து இப்பவும் என்னைப்பார்த்து சிரித்துக்கொண்டுதானிருக்கின்றாய், என்முன்னே நிற்கும் உன்னை நிமிர்ந்து பார்க்கக்கூட நேரமில்லை எனக்கு.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



உன் குரலை ஒருமுறை கேட்கமுடியாதா என்றதற்கு அனுப்பிவைத்தாய் உன்குரலை, துயரமும், அழுகையும், ஏக்கமும் அன்பும் என் அறைமுழுவதும் நிரப்பி அதில்கூட நீ உனக்காக எதையுமே கேட்கவில்லை என்னுடைய நலத்தில் மட்டும் அவ்வளவு அக்கறையேன் உனக்கு?

G.M.T நேரம் குறித்து ஒவ்வொரு நாளும் ரேடியோவில், பி.பி.சி செய்திகள் முடியும் நேரம் காத்திருங்கள். நானும் இங்கே காத்திருக்கிறேன் உங்களுக்காய், ஆருமே இல்லாத மௌனத்தில் மனதால் சந்திப்போம் என்று எத்தனை தடவை காத்திருப்பாய். பொய்யன் நான், எப்போதாவது ஒரு தடவை உனக்காகக் காத்திருந்தது கண்ணைமூடி அந்த மௌனத்தில் உன்னை சந்தித்த போதெல்லாம், நீ சொன்னது உன் காதலைத்தான். நீங்கள் எப்போது வருவீர்கள் என்பதைத்தான். அப்போது என்னால் பதில் சொல்ல முடியவில்லை. எனக்கு நிச்சயமாய் தெரிந்திருந்தது. நீ என்னைக் காதலிக்கிறாய் என்று, ஆனால் நான்தான் உன்னை கை நெகிழ்த்து நான் ஏன் ஏழையின் வயிற்றில் பிறந்தேனோ?

எங்களுக்கு மட்டுமேன் வறுமை? இங்கே உலகம் எவ்வளவு பரந்து விரிந்து உன்னதமாயிருக்கின்றது. நாங்கள் மட்டுமேன் அகதிகளாய் வாழ்வின்றி....

ஏன் இங்கு வந்தோம்? காசு, காசு, காசு ஏன் அது எங்கள் நாட்டில் இல்லாமலா? மதிப்பில்லை, மதிப்பு ஏன் குறைந்தது? எது குறைஞ்சாலும் எங்கட கவுரவம் குறையக்கூடாது. கவுரவம்-பெரியகவுரவம். போரென்று வந்திராவிட்டால் புகலிடம் தேடி இங்கு வந்திருப்போமா? விடுதலைக்காய் நெருப்பு மூட்டி வெந்தவரிருக்கு அந்த நெருப்பில் குளிர்காய்ந்து.... பின் என்ன கவுரவம்.

வெளிநாடு போனா வெள்ளைக்காரன்தான் என எல்லோரும் நினைக்கலாம். இங்க நாங்கள் படுற வேதனைகளை ஆருக்குத் தெரியும். காசு- இஞ்ச காத்தில பறந்து வந்து விழுறதில்லை. இங்கும் அது வியர்வையிலதான் விளையுது. ஆனா நான் ஒரு தேத்தண்ணி குடிக்கிற காசுக்கு நீங்கள் இருபத்தைஞ்சு தேத்தண்ணி குடிக்கலாம் அவ்வளவுதான்.

நீ எழுதிய கடிதங்களில்தான் தியாகம் எண்ட சொல்லுக்கு எனக்கு அர்த்தம் தெரிஞ்சது. என்னிடம் உனக்காக தியாகம் செய்ய என்ன இருக்கிறது?

வெளிநாட்டு வாழ்க்கை என்றால் அதுவல்லவோ வாழ்க்கை என சொல்றவன் சொல்லிவிட்டுப் போகட்டும். ஆதரவில்லாத அன்னியத்துக்குள் அடிபடும் வாழ்க்கை அது.

உனக்கு மட்டும் இது உனக்கு மட்டும், உனக்கு மட்டுமேதான், என்னால் சொல்ல முடியும். பதினைந்துக்கும், பத்துக்கும் ஒரு பெட்டி. படுக்கையறையும், சாப்பாட்டறையும் ஒண்டுதான். டி.வியும், ரேப்பும், பிரிஜ்ஜும் கதிரை மேசையும், பக்கத்தில் கக்கூசும் குளியலறையும் எல்லாம் இருக்கிறதே என்பாய். கதவை பூட்டுவதும் திறப்பதும் நான்தான். ஆனாலும் அது எனக்கொரு சிறைதான். அங்கு எல்லாம் இருக்கிறதுதான். உன்னைத்தவிர.

உடலைப் பிழிந்து வேலை செய்து, ஊன் உறக்கம் ஒழுங்கில்லாமல், எங்கேயோ எதையோ சாப்பிட்டு, ஊர் நினைவில் விழித்திருந்து ஆறத் தண்ணியடித்து அலுப்பில் தூங்கி விழித்தெழுந்து, முகங்கழுவி, விஸ்கி குடித்து, வீட்டு நினைவில் மீண்டும் முழுகி, எழுந்து வேலைக்கென்று போய் கூடுதல் வேலை செய்து ஒரு கொஞ்சநேரம் உனக்காக ஒதுக்க எங்கே நேரம். உன்னை சந்திப்பதென்றாலும், என் அருவருப்புகளோடு சுத்தமில்லாமல் திரும்பவும் அதே தொடக்கமும் அதே முடிவும் மாறி மாறி இருட்டுக்குள்ளே பூட்டிக்கொண்டு இன்னுமா என்னை நினைத்து நாட்களை எண்ணிக் கொண்டு.... புத்தியில்லாதவள் நீ!

விட்டுவிட்டு வாங்கோ என்கிறாய், வாறதுக்கு காசு சேர்க்க இன்னும் எவ்வளவு நாள்? காசில்லாமல் வந்து ஆர்மதிக்கப் போகினம்? வரவேற்பினம் நீ வரவேற்பாய் என்பது எனக்குத் தெரியும். ஊரோட நிண்டு உழைச்சிருந்தா ஊருக்கும் ஒத்தாசையாய் இருந்திருப்பன். உன்னையும் கைவிட்டிருக்கமாட்டன். நானும் வாழேல்லை. உனக்காகவும் வாழேல்ல. எனக்காகவென்று இன்னும் ஏன் உன் காலத்தையும் கடத்துறாய்,

என்னடா இப்படி புலம்பிறார், என்னையும் வெளிநாட்டுக்கு கூப்பிட்டிருக்கலாம்தானே என்கிறாயா? வேண்டாம் அது வேண்டாம் என் அன்புக்குரியவளே, இந்த சீர்கெட்ட அன்னியத்துக்குள் நீ வரவேண்டாம். இங்கு வருவதற்கு கொடுக்க வேண்டிய விலையை உன்னால் கொடுக்கவே முடியாது. நானே அகதி, அடிமை, எனக்கு வருபவளும் அகதி, அடிமை, என் சந்ததியும் அகதி அடிமையாகவே போக வேண்டுமா?

உனக்கென்று ஒரு நாடிருக்கின்றது போருக்குள்ளே போனாலும் ஓர் நாள் மீண்டுவரும். போவேன் ஒருநாள் துரத்தினால் வருவேன். அதற்கிடையில் போனால் போகிறேன். என்றோ ஒருநாள் எம்மினத்தின் எல்லாத் துன்பமும் துலைஞ்சு போகும். அங்கே அத்தனை அடிமைத்தனமும் முடிந்து போன வாழ்விருக்கும். அப்போது பிறப்போம் உனக்கு நானும் எனக்கு நீயும்.

அன்புடன்
சந்திரன்.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நீண்ட இரவுகளின் நெடிய இருள்
சூழ்ந்து மறைந்திருக்கும் சுகமிழந்த இரவுகளில்
'ஆழ்ந்த மன உறக்கம் அகலப் பரம்பி நிற்க
வீழ்ந்ததுவா வாழ்வென்று வேதனை முகிழ்க்க
சாய்ந்த பெருமரமாய் சரித்தது யார்' எம் வாழ்வை
சாய்த்ததென்ன விதியென்ற கதையளந்து
வேதனையை மூடுவதா? இல்லை இது வினையென்று
போதித்து நிற்கின்ற பொது நெறிகள் ஏற்புடைத்தா?
வாதித்து வாதித்து மனமன்றில் விடைதேடி.
சோதித்து சோதித்து சுகமிழந்து போவதென்ன?

ஆட்சி அதிகாரம், அடக்குமுறை ஆட்சிகளால்
மீட்சியில்லாது தொடர்கின்ற தொடர்கதை போல்
நீண்டதொரு வரலாற்றின் கறை படிந்த காரணத்தை
ஆண்டவனே என்றுரைத்து அண்ணாந்து பார்த்து நிற்க
கொண்டாட்டம் குதூகலத்தில் குடிபுகுந்த அரசுகளோ
மன்றாடும் வாழ்வழித்த வகையுணர மாட்டாது
மண்ணுள்ளே மனக்குதிரை செல்கின்ற வேகத்தில்
நின்றிங்கு அபிவிருத்தி, புனரமைப்பு, திட்டமிடல் என்றேதேதோ
வார்த்தைவிதையெறிந்து பத்திரிகை வயல் விதைத்துப்
பாறறியச் செய்வதிலே படைக்கின்ற வெற்றிகளால்
வாரும் இங்குள்ள இருட் கொடுமையறியாது
மீண்டும் இருள் படைத்து படர விட்டார்.

பஞ்சம் பசி, பிணியால் பாதித்து, பாதித்து
துஞ்சி நிதம் சோர்ந்து சோகப் பெருந்தீயில்
வீழ்ந்தெழுந்து விம்மிப் பொருமுகிறார்.....
கஞ்சிக்கும் கூழுக்கும் காத வழி நடப்பதொரு
வெஞ்சமராய் போனவர்க்கு வாழ்வே சுமையாக
நெஞ்சத்தில் கலை மூட்டி நெடு மூச்சு விட்டு விட்டு
அஞ்சி அஞ்சி நடமாடும் சடலங்களாய் போனார்.
மக்கள் மனமிழந்து நடமாடும் பிணமாக
மக்களவை மந்திரிகள் மாளிகை வாசிகளாய்

ஊர்திகளில் ஊர் சுத்தி உலா வந்து மேடைகளில்
ஆர்த்ததிர்ந்து எத்தனையோ ஏற்ற முடைத்திட்டங்கள்
ஆர்ப்பரிப்பு மத்தியிலே அழகாக முன்வைக்க
கொட்டாவி விட்டு குடியிருப்பு இழந்து வரும்
நிட்டை கொண்ட பஞ்சத்தில் படுக்காது உறங்குபவர்
கொட்டும் மழையென்ன கோடை வெயில் பனி இவைக்கும்
விட்டுக் கொடுக்காது வீதிகளில் உறங்குபவர்......



வளவை வளவன்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# போரும் வாழ்வும்



திட்ட தெருவோரம் திரிந்துண்டு வாழ்பவரும் ஏதேதோ
திட்டம் தமக்காக வருகிறதாய் எண்ணிக்கை
கொட்டி மகிழ்ந்து குதூகலித்து நிற்கையிலே
திட்டமுரைத்தவரோ ரதமேறிச் சென்றிடுவர்.

வாட்டம் மிகுந்ததொரு வரலாறாய் போய்விட்ட
வாழ்க்கை மறுபடியும் வாதை வதை தனில் மூழ்க
சீழ்க்கை அடித்துச் சிரித்துக் கை கொட்டியவர்
வேர்த்து வியர்த்து விழிசொருகி வீதியில்
ஆர்க்கும் தெரியாமல் அந்தோ பிணமானார்
ஊரெல்லாம் கூடி நின்று தோரணங்கள் தாம் கட்டி
வீதியெங்கும் கரும் கொடியே காட்சி தர வைத்து நிற்க
ஆயிரத்தில் இவரொருவர் ஏழை பங்காளன் என்றும்
பாயிரங்கள் பாடி நின்று பணியின் சிறப்புரைத்து
வார்த்தைகளின் மாளிகையில் அவருடலை வைத்து நிற்பர்.

புத்தாயிரமாண்டின் புதுமை இதுதானோ?
சித்தம் தெளிந்தோர் தம் கேள்வி இதுவாக
பித்தம் கொதித்து எழ போர் முரசாயார்ப்பரித்து
மக்கள் திரண்டெழுந்தார் வாழ்விற்காய் போராட
மக்கள் தாம் பேரெழுச்சி மன் பதைதமை அறிந்து
போர் முகம் தனை மாற்றிவிடப் புதியதொரு யுக்தியொடு
சமாதானம் பேச்சு வாத்தை புரிந்துணர்வு என்றேதோ
வந்து வந்து கொணடு வந்து செய்திப் பெரு விருந்தாய்
பத்திரிகை வேளாண்மையானதன்றி தேசமதில்
சித்தியெனுமொரு விளைச்சல் கடுகளவும் தேறவில்லை
கத்திப் பிடித்த கதிரைப் போர் வெற்றி தேசப்பணியதனில் வரவின்றி
மொத்தப் புலம்பி அவர் மேதினியை ஏய்த்தது போல் ஏமாந்து தான் போனார்

ஏமாற்றி வாழ்பவர்க்கு ஏமாற்றி பதிலாகி எழுந்தெதிரில் வருமென்ற
கூற்றை உணர்த்தியது குதித்து குதித்தவரால் கொண்டாடிக் கொண்டு வந்த
தீச்சுவாலை ஒன்று வந்த வழி தெரியாமல் அணைந்த கதையின் சோகம்
ஆச்சுதோ இனியென்ன? ஏதும் புரியாது பலமிழந்ததாய் எண்ணி
மூச்சு விட முடியாத மூனாட்டுப் பலவகை ஆயுதங்கள் தமை நம்பி
ஆப்பிழுத்த குரங்காக ஆக்கியது யார் பாவமிப் பொல்லாத பேரசு
பூகம்பப்பெரு நிலத்தை தீச்சுவாலை என்ன செய்யும்? என உணரா
அகந்தைத் தேரேறி ஆலவட்டம் பிடிக்க வரும் ஆட்சி அதிகாரம்
அத்தனையும் துண்டு துண்டாய் சிதறிவிடச் செய்திட்ட
மக்கள் படை நிமிந்து தர்மத்தின் நிழலின் கீழ்
மக்கள் துயர் தீர்க்கும் வழிபற்றிச் சொல்வதற்காய்
பகை முகத்தைத் தேடுகிறார் பகையழித்து வாழ்வளிக்க.
தேசத்துளெம் வாழ்வு போரும் வாழ்வுமென ஒன்றாகிவிட்டதிப்போ.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



வில்லுக் குளத்துப் பறவை
சம்பவம்-10

# நித

யாழ். மாவட்டத்திலுள்ள தென்மராட்சிப் பகுதி....... வீதித்தடையுடன் கூடிய இந்திய ஆக்கிரமிப்பாளர்களின் காவல் அரண்.....அதற்கு அண்மையில் தனியார் கல்வி நிலையம் ஒன்று, விடுதலைப் புலி ஒருவனின் துணிகரமான வேவுபார்க்கும் முயற்சி....புயல் அடித்த பிரதேசத்தின் கொடுமையை விளக்கும் குறியீடு, உருக்குலைந்து மொட்டையாக நிற்கும் மரங்கள்தான். வறுமையில் உத்தரிக்கும் மக்களுக்கு எலும்பும் தோலும், ஒட்டிய வயிறும்தான் அடையாளம் காட்டும் குறியீடு. ஆக்கிரமிக்கப் பட்ட தேசம் ஒன்றிற்கு இராணுவத் தடையரண்களும், அதற்கூடாக நீட்டிய துப்பாக்கிகளும்தான் அடையாளம் காட்டும் குறியீடு.

அத்தகைய வீதித்தடை அரணில் இருந்து 500 யார் தூரத்தில், பிரதான வீதியில் சைக்கிள் ஒன்றுடன் விடுதலைப் புலி வீரன் ஒருவன் நிற்கிறான்.

வீதியில் செல்லும் மாணவர்கள் அவனைப் பார்த்துப் புன்னகைத்தனர். தங்களுக்குள் ஆளை ஆள் பார்த்துத் தமது அதிர்ச்சிகளைக் கண்களால் தெரிவித்தபடி செல்கின்றார்கள்.

ஆம்...... அப்பகுதி இந்திய இராணுவத்திற்குச் சிம்மசொப்பனமாக இருந்துவருபவனும், அவர்களால் கடுமையாகத் தேடப்பட்டு வருபவனுமாகிய ஒரு விடுதலைப் புலி உறுப்பினன் பிரதான வீதியில் நிற்கிறான்.

எமது மக்கள்தான் எமது பாதுகாப்பு, மறைவிடம் என உரத்துச் சொல்வதுபோல அந்த விடுதலைப் புலி நிமிர்ந்து நிற்கிறான்.

சைக்கிள் 'கரியரி'லிருந்த கொப்பிகளைக் கையில் எடுத்தபடி, மறைத்து வைத்திருந்த சயனைட் குப்பியைக் கைகளால் தடவி உறுதிசெய்துகொண்டு அந்த இளம் விடுதலைப் புலி, இராணுவக் காவல் அரண்களை நோக்கி நிதானமாகச் சைக்கிளைச் செலுத்துகிறான்.

"அடேய்.........இங்கவா..........ஒன்பேரென்ன?.....?? ஒரு ஆக்கிரமிப்புக் குரல் அரைகுறையில் அவனை அழைக்கிறது.

"சிவகுமாரன்."

பொய் சொல்லும் போதுகூட அந்த விடுதலைப் புலிக்கு, ஒரு முன்னோடிப் போராளியின் பெயர்தான் ஞாபகத்துக்கு வந்தது. தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு 'சயனைட்' என்ற மாபெரும் ஆயுதத்தை அறிமுகம் செய்த ஒரு மதிப்புக்குரிய போராளியின் பெயர்தான் அது. இந்த அந்நியனுக்கு அது எங்கே புரியப்போகிறது?

"உன்ர இடம் எது"

"மீசாலை"

"இப்ப எங்க போறாய்? "

"படிக்க ரியூசனுக்கு"

"எங்கே ரியூசன்? "

"அந்த வீடு தான்"

சந்தியில் இருந்து 50 யார் தூரத்தில் இருந்த ஒரு 'ரியூட்டரி'யைக் காட்டுகிறான் கில்மன். அந்த இராணுவச்சிப்பாய்க்கு கில்மன்மீது சந்தேகம் வந்தது. தனது சகாக்கள் இருவரை அருகில் அழைத்தான்.

மூவருமாக கில்மனைக் கேள்விகளால் துளைக்க ஆரம்பித்தனர். கேள்விகள் தொடர்ந்தன. அடுத்தடுத்து சில கேள்விகளின் பின்,

"உனக்கு கில்மனைத் தெரியுமா? " ஒருவன் நேரடியாகவே கேட்கிறான்.

"தெரியாது....."





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

உடல் ஒருகணம் புல்லரிக்கிறது.

உன்னைப் பார்க்க கில்மனைப்போல் இருக்கிறது"

அருகால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சில மாணவர்களுக்கு இந்த உரையாடல் கேட்கிறது.

அவர்கள் ரியூட்டரிக்குள் நுழைய செய்தி எங்கும் பரவுகிறது.

"மாஸ்ரர்! சந்தியில் ஆமிக்காரங்கள் கில்மனைப் பிடிச்சு வச்சிருக்கிறாங்கள். தான் ரியூசனுக்குப் போறன் என்று கில்மன் சொல்லிக்கொண்டு இருக்கிறான். எண்டாலும் அவங்கள் விடமாட்டாங்கள் போலக்கிடக்கு"

மாணவர்கள்-விடுதலைப் புலிகளில் அன்புமிக்கவர்கள்- துடிக்கின்றார்கள்.

ஆசிரியர்- விடுதலை உணர்வு மிக்கவர்- சிந்திக்கிறார்.

ஒரு விடுதலைப் புலியைப் பாதுகாக்க அந்த ஆசிரியரின் மூளை வேகமாக வேலை செய்கிறது. மாணவர்களுக்கு ஆசிரியர் வழியொன்று சொல்லிக்கொடுத்தார்.




சில மாணவர்கள் வீதிக்கு விரைந்தார்கள். உரத்த குரலில், "மாஸ்ரர் வந்திட்டார்.......வகுப்பு துவங்கப் போகுது......! கெதியாய் வா....!"

ஆக்கிரமிப்பாளனின் சந்தேகம் ஆட்டம் காண்கிறது...... அந்த மாணவர்களையும் கில்மனையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு "சரி ஓடு ஓடு" என்று கில்மனைத் தள்ளிவிடுகிறான்.

கில்மன் ஆறுதலாக நடந்து வந்து ரியூட்டருக்குள் நுழைந்தான். மாணவர்களின் முகமெல்லாம் ஒரே மகிழ்ச்சி.

"அண்ணை! ஏன் நீங்கள் உந்த றோ......ட்.......டா....." மாணவர்களில் ஒருவன் தனது மனத்துள் எழுந்த கேள்வி ஒன்றுக்குப் பதில் காணத் துடித்தான்.

ஆனால், அடுத்த கணம் தனது கேள்விக்கான பதில் அவனது சிந்தனையில் தட்டுப்பட கேள்வியை அரைகுறையில் நிறுத்துகிறான்.

"தம்பி! அதால போனால் அடுத்த ஒழுங்கைக்குப் போகலாம்"

பின்வேலியில் அவசரகாலத் தேவைக்காகப் பிரித்து விடப்பட்டிருந்த 'பொட்டை' ஆசிரியர் சுட்டிக் காட்டினார். அதனை நோக்கி விடுதலைப் புலி நடக்க.....

ஒரு கடமையை முடித்த திருப்தியில் மாணவர்கள் நிமிர்ந்து இருக்க, பாடம் ஆரம்பமாயிற்று.

தமிழர்களின் வரலாற்றில் எழுச்சிக் காலம் என்று அழைக்கப்படுவது சோழ மன்னர்களின் காலமே. அந்த சோழ சாம்ராச்சியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு. சுமார் 800-900 வருடங்களுக்குப் பின்னர், இப்போதுதான் மீண்டும் அந்த எழுச்சிக் காலம்........!

குனிந்த ஆசிரியர் அந்த விடுதலைப் புலி சென்ற திசையை ஊடுருவிப் பார்க்கிறார். படலையைக் கடந்த அந்த இளம் போராளி, பாதுகாப்பாக வைத்திருந்த சயனைட் குப்பியை எடுத்துக் கழுத்தில் அணிந்து கொண்டு......

சற்றுமுன் கண்களால் படமாக்கிக்கொண்ட ஆக்கிரமிப்பாளர்களின் காவல் அரண்களின் வரைபடத்தைக் கடதாசித் தாளில் வரைவதற்காக, விரைந்து நடக்கிறான்!


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# காலத்தின் கருவூலங்கள்

காலத்தின் கருவூலங்கள்



ஆதிலட்சுமி சிவகுமார்.

என் ஜென்மங்களில் ஒட்டிக்கொண்டிருக்கும் உறவே
என்னைத்தேடி எங்கேயும் நீ அலையவேண்டாம்.
கண்ணீரில் உன்னைக் கரைக்கவேண்டாம்.
இனிமைகளை துறக்கவேண்டாம்
பனியில் நனைந்து முகம்சிலிர்த்து நிற்கும்
பூக்களை உற்றுப்பார்; அதில்
என் முகம் இருக்கிறது.
காலையில் கண்களை விழித்தவுடன்
யன்னலூடாக ஓடிவந்து ஒட்டிக்கொள்கிறதே காற்று
ஆழமாக அக்காற்றை உள்ளிளுத்துப்பார்; அதில் என்
மூச்சின் வாசத்தை உணர்வாய்!
எதிரியிடமிருந்து மீட்டெடுத்த நிலப்பரப்புகளில்
அவதானமாய் அடியெடுத்து நடந்துபார்!
அங்கே என் சுவடுகள் பதிந்து கிடக்கின்றன.
வேகமாகப் போகும் வாகனங்களின் பின்னே
எழுந்து பரவி அடங்குகிறதே புழுதி
அதில் என் உடற்கலங்கள் உருமாறியுள்ளன.
நிலவு பிரிந்த வானத்தில் தனித்து நின்று
கண்சிமிட்டுகின்றனவே நட்சத்திரங்கள்
அவற்றில் என்புன்னகைகள் பொதிந்துள்ளன.
மூசி எழுந்து வந்து உன் முன்னால் மண்டியிட்டு
திரும்பிச் செல்கின்றனவே திரைகள்
அவற்றில் என் ஆன்மா மிதக்கின்றது.
என்னைத்தேடி நீ எங்கேயும் அலையவேண்டாம்
காலத்தின் கருவூலமாய் உன்காலடியில் கிடக்கிறேன்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



**இராணுவக் கூட்டுக்காவலரண் முற்றாக அழிப்பு:**

திருகோணமலை மாவட்டம் மூதூர்ப் பிரதேசத்தில் உள்ள இராணுவத்தின் 64ம் கட்டை காவலரண் 01-11-2001 அன்று விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலில் முற்றாக அழிக்கப்பட்டது. இத்துணிகர அதிரடித்தாக்குதலில் பதினொரு பொலிசார் கொல்லப்பட்டு, ஐந்து இராணுவத்தினர் மற்றும் 13 பொலிசார் உட்பட இருபது பேர் காயங்களுக்கும் படுகாயங்களுக்கும் உள்ளாகினர்.

**கிளைமோர் கண்ணிவெடித்தாக்குதல். இரண்டு சிறீலங்காப்படையினர் பலி:**

வவுனியா மாவட்டத்தில் உள்ள ஓமந்தை நொச்சிக்குளம் பகுதியில் 06-11-2001 அன்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர் கண்ணிவெடித்தாக்குதலில் இராணுவ முன்னரங்கப் பகுதியில் சுற்றுக்காவல் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இரண்டு சிறீலங்காப் படையினர் கொல்லப்பட்டனர்.

**விடுதலைப் புலிகளின் இருவேறு தாக்குதல்களில் ஆறு சிறீலங்காப்படையினர் பலி:**

திருகோணமலை மாவட்டம் மூதூர் பச்சனூர் மல்லிகைத்தீவுச் சந்தியில் 10-11-2001 அன்று உழவு இயந்திரத்தில் சாதாரண பொதுமக்கள் போல் வந்த விடுதலைப் புலிகள் அங்கிருந்த சிங்களப்படையின் சோதனைச் சாவடி மீது தாக்குதல் நடத்தினர். இதில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர். படுகாயம் அடைந்தவர்களை ஏற்றிக் கொண்டு வைத்தியசாலை நோக்கி விரைந்த உழவு இயந்திரம் மீது 58ம் கட்டைப்பகுதியில் வைத்து விடுதலைப் புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதலில் காயமடைந்த இருவருடன் மேலும் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் இராணுவச் சோதனைச் சாவடியைக் கைப்பற்றிய புலிகள் அங்கிருந்த துப்பாக்கிகள், கைக்குண்டுகள், பல நூற்றுக் கணக்கான துப்பாக்கி ரவைகள் என்பவற்றையும் கைப்பற்றினர்.

**இராணுவப் பயிற்சி பெற்ற பொலிசாரின் முகாம் அழிப்பு:**

மட்டக்களப்பு மாவட்டம், பாலமீன்மடு பகுதியில் அமைந்திருந்த இராணுவப் பயிற்சி பெற்ற பொலிசாரின் முகாம்மீது 11-11-2001 அன்று விடுதலைப் புலிகளின் விசேட தாக்குதல் அணி நடத்திய அதிரடித்தாக்குதலில் மூன்று பொலிசார் கொல்லப் பட்டதுடன் ஒன்பது பொலிசார் படுகாயம் அடைந்தனர். பொலிஸ் முகாமை ஒரு மணி நேரத்தில் தமது பூரணகட்டுப் பாட்டின்கீழ் கொண்டு வந்த விடுதலைப் புலிகள் அங்கிருந்த ஆயுதங்கள் இராணுவ உபகரணங்கள் ஆகியவற்றைக் கைப் பற்றிக் கொண்டு முகாமை முற்றாகத் தகர்த்தனர்.

**தாயகம் காப்போம்,**
**இருபதாம் நூற்றாண்டின் இலங்கள்**
**எனும் எரிமலையின் தொடர்கள்**
**அடுத்த இதழில் தொடரும்.**

**கிளைமோர் தாக்குதலில் சிறீலங்காப் பொலிஸார் கொல்லப்பட்டனர்:**

வவுனியா மாவட்டம் வவுனியா மதவாச்சி வீதியில் 20-11-2001 அன்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட மூன்று சிறீலங்காப் பொலிஸார் கொல்லப்பட்டனர். சிங்களப்படையினரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக உள்ள, அதிஉச்ச பாதுகாப்புக் கொண்ட வீதியில் இத் தாக்குதல் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## வெளிச்சம் சஞ்சிகையின் பவள இதழுக்கு தமிழீழத் தேசிய தலைவர் வாழ்த்து:

22-11-2001 அன்று வெளிச்சம் சஞ்சிகையின் பவள இதழுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தியில் “விடுதலை வரலாறு படைக்கும் ஒரு புரட்சிகரமான சமூகப்புறநிலையில்தான் உன்னதமான விடுதலை இலக்கியம் பிறக்கமுடியும்” எனத் தெரிவித்துள்ளார். “தமிழீழமாகிய எமது தாயக மண்ணில் ஒரு விடுதலை வரலாறு படைக்கப்பட்டு வருகின்றது. எனவே எமது மண்ணில்தான் உயர்ந்த விடுதலை இலக்கியப் படைப்புகள் தோன்றுவது சாத்தியம்” எனவும் தெரிவித்துள்ளார்.

**சந்திரிகா அரசின் பயங்கரவாதச் செயல் 5 பொதுமக்கள் உடல் சிதறிப்பலி:**

சந்திரிகா அரசின் பொலிஸ் படையினர் மட்டக்களப்பு ஏறாவூர்ப் பகுதியில் 20-11-2001 அன்று சுமார் அரைமணி நேரமாக நடத்திய கண்மூடித்தனமான மோட்டார்தாக்குதலில் 11 வயதுச் சிறுவன் உட்பட ஐந்து பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகினர். ஆறு பெண்கள் உட்பட பத்துப் பேர் படுகாயம் அடைந்தனர். இக் காட்டுமிராண்டித்தனமான செயலைக் கண்டித்து ஏறாவூர்பகுதியில் மக்கள், மூன்று பொதுமக்களின் சவப்பெட்டிகளுடன் வீதிமறியல் போராட்டம் நடத்தினர்.

## ஈழத்தில் உணர்வெழுச்சியுடன் நினைவுகூரப்பட்ட மாவீரர் நாள்.

வன்னிப் பெருநிலப்பரப்பின் சகல பாகங்களிலும் 25 முதல் 27.11.2001 வரையான மாவீரர் நாள் நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் கொண்டாடப்பட்டது. 25.11.2001 அன்று வன்னியின் அனைத்துப் பகுதியிலும் தமிழீழத் தேசியக் கொடியேற்றலுடன் மாவீரர் நாள் நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இம் மூன்று நாள் நிகழ்வுகளில் பல கலை நிகழ்ச்சிகளும். மாவீரர் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகளும் சிறப்பாக இடம்பெற்றன. 27.11.2001 அன்றைய இறுதி நாள் நிகழ்வை, தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் மாவீரர்களுக்கான பொதுச்சுடர் ஏற்றும் நிகழ்வுடன் தொடங்கிவைத்தார். மாலை6.05 மணியளவில் அனைத்து கோயில்கள் மற்றும் தேவாலயங்களின் மணிகளும் ஒரு மணித்துளி நேரம் ஒலியெழுப்பின, மாவீரர் எழுச்சி நாட்களின் இறுதி நாள் நிகழ்வுகளில் ஆலயங்களில் விசேட பூசைகளும். சிறப்புக் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. தமிழீழத் தேசியத் தலைவரின் வரலாற்றுச் சிறப்புமிக்க மாவீரர் நாள் சிறப்புரை புலிகளின் குரல் வானொலியில் நேரடி ஒலிபரப்புச் செய்யப்பட்டது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





## மாவீரர்களை நினைவு கூரும் புனித நாள்:




தமிழீழ விடுதலைக்காக முதற் களப்பலியான புலிவீரன் லெப். சங்கர் நினைவு நாளான 27 -11-1982 தாயகதேசத்தின் விடிவுக்காக தாயின் மடியில் புதைக்கப்பட்ட அனைத்து மாவீரர்களையும் நினைவுகூரும் மாவீரர் நாளாக கொண்டாடப்படுகின்றது. தனது இனிய உயிர் அர்ப்பணிப்பால் விடுதலைக்கு வித்திட்டு உரமான மாவீரர்களை நினைவு கூரும் புனித நாளான இந்நாள். தமிழீழத்தின் தேசிய நாளாகக் கருதப்படுகிறது.

## சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பூநகரிச் சமர்:

விடுதலைப் புலிகளின் ஒப்பறேசன் தவளை நடவடிக்கை மூலம் 13.11.1993 அன்று நவீன ராடர் சாதனங்களுடன் கூடிய கடற்படைமுகாமுடன் ஆறு இராணுவ முகாம்களையும் அவற்றுடன் இணைந்த பல மினிமுகாம்களையும் நூற்றுக்கணக்கான காவலரண்களையும், உள்ளடக்கி 25 கிலோ மீட்டர் சுற்றளவில் அமைந்திருந்த பூநகரி கூட்டுப்படைத்தளம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. 10.11.1993அன்று நள்ளிரவு தாண்டிய வேளையில் விடுதலைப் புலிகளால் ஆரம்பிக்கப்பட்ட இச்சமரில் 1000ற்கும் அதிகமான இராணுவத்தினர் அழிக்கப்பட்டனர். விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்ட வடிவத்திற்கு புதியதொரு பரிமாணத்தைச் சேர்த்த இப்பெரும் சமரில் 456 புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர்.

## ஓயாத அலைகள்-3:

இலங்கையின் இராணுவ அரசியல் வரலாற்றில் பல திருப்பங்களுக்கும், மாற்றங்களுக்கும் காரணியாக இருந்த ஓயாத அலைகள் -3 இராணுவ நடவடிக்கை 02.11.1999அன்று விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்பட்டது. சுமார் ஏழு மாதங்கள் நீடித்த இவ்வெற்றிமிகு நடவடிக்கை மூலம் சிறீலங்கா அரசானது விடுதலைப் புலிகளை இராணுவரீதியில் வெற்றி கொள்ள முடியாது என்பதை உறுதி செய்தது.



## தமிழீழக் காவல்துறையின் ஆரம்பம்:

தனியரசு உருவாக்கத்திற்கான வளர்ச்சிப் போக்கில் இன்னுமொரு படிக்கல் தமிழீழக் காவல்துறையாகும். 19.11.1991அன்று தமிழீழக் காவல்துறை அணி உருவாக்கம் பெற்றது. தமிழீழக் காவல் துறையினர் தமது முதலாவது அணி வகுப்பு மரியாதையை 19.11.1991 அன்று தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் முன்னிலையில் வழங்கினர்.

## யாழ் புனித ஜேம்ஸ் தேவாலயம் தாக்கப்பட்ட நாள்:

யாழ் புனித ஜேம்ஸ் தேவாலயம் 13.11.1993 அன்று சிறீலங்கா இராணுவத்தின் வான்படைத் தாக்குதலில் தாக்கப்பட்டது. இதில் தேவாலயத்தினுள் வணக்கத்தில் ஈடுபட்டிருந்த ஒன்பது பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

## மடுத்திருப்பதிப் படுகொலை:



மன்னார் மாவட்டத்தில் உள்ள மடுமாதா தேவாலயத்தின் மீது 20.11.1999 அன்று சிங்கள இராணுவம் நடத்திய பலத்த பீரங்கித் தாக்குதலில் தேவாலயத்தினுள் அடைக்கலம் புகுந்திருந்த 13 குழந்தைகள் உட்பட 44 பொது மக்கள் கொல்லப்பட்டனர் 60ற்கும் மேற்பட்ட பொது மக்கள் படுகாயம் அடைந்தனர். இத்தாக்குதலில் தேவாலயத்தின் ஒரு பகுதி பலத்த சேதத்திற்குள்ளானது.

## நினைவுக் குறிப்பு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




## ஒக்ரோபர் 2001

**01.10.2001**

மட்டக்களப்பு வாவியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த 39 வயதுடைய சிவஞானம் மனோகரி என்ற பெண் சிங்களப்படையின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானார். 29 வயதுடைய செல்லையா ஸ்ரீதரன் என்ற அவரது மைத்துனர் படுகாயம் அடைந்தார்.

**03.10.2001**

மட்டக்களப்பு ஆலங்குளம் பகுதியில் நாவலடி சிங்களப் படை முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட எறிகணைத்தாக்குதலில் ஆலங்குளம் நீர்த்தேக்கத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஒரு குழந்தையின் தந்தையான 25 வயதுடைய நாகமணி நாகலிங்கம் என்ற பொதுமகன் கொல்லப்பட்டார்.

**04.10.2001**

மன்னார் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த பொது மக்கள் மீது சிங்களப்படை நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் 19 வயதுடைய தனம் நந்தகுமார், 18 வயதுடைய செல்வநாயகம் செல்லகுமார் என்னும் இரு இளைஞர்கள் பலியாகினர்.

**05.10.2001**

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் ரோந்து சென்றுகொண்டிருந்த சிறீலங்காக் கடற்படையின் அதிவேக டோரா பீரங்கிக்கலம் மீது கடற்புலிகள் நடாத்திய துணிகரமான தாக்குதலில், சிங்களப் படையின் அதிவேக டோரா பீரங்கிக் கலம் ஒன்று கடுமையாகச் சேதமடைந்தது.

**09.10.2001**

திருகோணமலையின் யாழ். வீதி நெல்வேலி என்னும் இடத்தில் அமைந்திருந்த சிறீலங்கா விமானப்படை முகாம் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டு அங்கிருந்த ஆயுதங்கள், இராணுவத் தளபாடங்கள் போன்றவை கைப்பற்றப்பட்டன. இத்துணிகரத் தாக்குதலில், 4 விமானப்படையினர் கொல்லப்பட்டதுடன் ஏழுபேர் படுகாயம் அடைந்தனர்.

**09.10.2001**

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் நால்வர் படுகாயம் அடைந்தனர்.

**17.10.2001**

திருகோணமலை மாவட்டத்தின் பூவரசந்தீவு சமச்சதீவு ஆகிய பகுதிகளில் அமைந்திருந்த சிங்கள இராணுவ பொலிஸ் கூட்டு நிலைகள் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலில் இராணுவப் பயிற்சிபெற்ற பொலிசார் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் 6 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

**21.10.2001**

முல்லைக்கடற்பரப்பில் சிறீலங்காக் கடற்படையின் டோரா அதிவேகத் தாக்குதற் கலங்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தினர். மூன்றரை மணி நேர இக்கடும் கடற்சமரில் சிறீலங்காக் கடற்படையின் இரு கடற்படைக் கலங்கள் கடற்புலிகளால் முற்றாகச் சேதமாக்கப்பட்டன.

**22.10.2001**

வவுனியா மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் சிறீலங்காப் பொலிசார் ஒருவரும், சிங்கள ஊர்காவல் படையினர் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

**23.10.2001**

மட்டக்களப்பு நகருக்கு தென்மேற்குப் பகுதியில் அமைந்திருக்கும் கிராமங்கள் மீது சிங்கள அதிரடிப்படையினர் நடாத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், மேலும் எட்டுப்பேர் படுகாயம் அடைந்தனர்.

**24.10.2001**

யாழ். குடாநாட்டில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றில் சிறீலங்கா இராணுவத்தின் உயர் கட்டளை அதிகாரியான லெப்டினட் கேணல் லயனல் விஜேயக்கோன் உட்பட ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் மேலும் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

**26.10.2001**

திருகோணமலை மாவட்டம் மூதூரில் சிறீலங்காப் படையினரின் பாதுகாப்பு நிலையமொன்றின் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் இராணுவப் பயிற்சி பெற்ற பொலிசார் ஒருவர் கொல்லப்பட்டதுடன், இரண்டு இராணுவத்தினரும், துணைப்படையைச் சேர்ந்த ஒருவருமாக மூவர் படுகாயம் அடைந்தனர்.

**30.10.2001**

பருத்தித்துறைக் கடற்பரப்பில் இராணுவத்தின் தேவைகளுக்காக பலத்த பாதுகாப்புடன் தமிழீழத்தின் திருகோணமலை துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கி ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருளை ஏற்றிச் சென்ற பாரிய எரிபொருட் கப்பல் ஒன்று கடற்கரும்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டு முற்றிலுமாக சேதமாக்கப்பட்டது.

**30.10.2001**

மன்னார் உப்புக்குளம் பகுதியில் வீடொன்றில் வைத்து இளைஞர் ஒருவர், சிறீலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். மேலும் ஒருவர் படுகாயம் அடைந்தார்.



www.tamileelamarchive.com

# தமிழீழ ஆவணக் காப்பகம்

# "கண்கள் கூறும் வார்த்தைகள்"




காணும் கண்களே, கூறும் வார்த்தை என்ன?

அஞ்சல் ஊடாக எரிமலைக்கு....

கைகட்டி வாய்பொத்தி அஞ்சி நடுங்கி
அடுப்படியில் அகப்பையுடன்
போராடிய பெண்கள் அன்று
ஆண்களுக்குச் சமன் பெண்கள் என்று
ஆயுதம் தாங்கி நாட்டு விடுதலைக்காய்
போராடும் பெண்கள் இன்று
அஞ்சா நெஞ்சும் அடங்கா
விடுதலைத்தாகமும்
என்னாலும் முடியும் என்ற
மன உறுதியும் கொண்ட
தமிழ் ஈழத் தமிழ்ப் பெண் இவள்.

திருமதி- சுயி. சீலன்
வின்சன்
ஜேர்மனி.

ஈழத்தின் வளங்கள்
விளைகின்ற கடலிலே
கரை சேர்க்க தமிழனுக்கு
தடை அங்கே
கரையிலே கட்டிவைத்த
கட்டுமரம் பகைவனின்
எறிகணைக்கு தீக்கிரை
வயிற்றுப்பசி போக்க
தன்னையறியாமல் கடலில்
நடக்கின்றது உறவொன்று.

க.சக்திதாசன்,
டென்மார்க்.

சொந்த ஊர் இழந்து
சொந்த உறவிழந்து
தங்க ஆபரணங்களுடன்
கட்டிய வீடிழந்து
சுதந்திரமாம் ஈழவிடுதலை
பெறுகின்ற நாள்வரை
பனங்கிழங்கு வித்தாவது
உயிரைக் கையில் பிடிக்கின்ற மாது.

க.சக்திதாசன்,
டென்மார்க்.

பனங்கிழங்கும் மாங்காயும்
பகுத்து விற்கின்றாயோ?
இனம் அழிக்கும் இராக்கதனால்
இழந்தனையோ எல்லாமே?
ஊனம் உடலிலேதான்
உள்ளத்தில் இல்லையென்று
ஈனமுற்றவர்க்கு எடுத்து
நீ இயம்புகின்றாய்
ஞானமுள்ள தலைவன்
நம்பால் இருக்கின்றான்.
ஞாலமெல்லாம் எங்களுக்கே
கண்ணே நீ களித்திரடி!

திருமதி-அ-றிச்சேட்
சிண்டில் பிங்கன்.
ஜேர்மனி.



ஓகஸ்ட் மாதத்திற்கான...

செப்டெம்பர் மாதத்திற்கான...



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மாவீரர் நாள்

நவம்பர்- 27
2001



விடுதலை வேட்கை மிக்க
எழுச்சிப் படைப்புக்கள்-
ஒடுக்குமுறைக்கு
எதிரான ஆவேசக்குரல்-
போர்க்கால இலக்கியத்தின்
யதார்த்தப் பதிவு-
மண்ணின் மணத்தோடு
மன உணர்வுகளை வெளிப்படுத்தும்
உன்னத இலக்கியமாக எரிமலை



# எரிமலை

கலை பண்பாட்டு அரசியல் சமூக சஞ்சிகை.

ERIMALAI, C/O T.C.C France, 341, Rue Des Pyrenees, 75020 Paris, FRANCE.
www.erimalai.com Email: erimalai@erimalai.com Fax: (33) 1 43 58 11 91

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



www.tamileelamarchive.com